திரு. சு. குருநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் காவல் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்குக் குறைவாகத் தான்—அதேபோல் சிறையில் பணியாற்றுகின்ற அந்தக் காவலர்களுக்கும் குறைவாகத் தான்—சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்து இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பது பற்றி குறிப்பு இல்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மலிவு விலையில் கொடுப்பது பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்பாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறையிலே வேலை செய்யும்படியான காவலர்களுடைய சம்பள வருமானம், வெளியில் இருக்கக் கூடிய காவல் துறையைச் சார்ந்த ஜவான்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பள அளவு கிடைக்காத நிலைமையில், அவர்கள் கொஞ்சம் வறுமையில் இருக்கிறார்கள். இன்றைக்கு, காவல் துறையில் உள்ளவர்களுக்கு வெளியிலே கிடைக்கும்படியான சலுகை விலையில் நியாய விலைக் கடைகளில் கிடைக்கக் கூடிய சலுகை விலையில் அல்ல; அதை விட பாதி விலை என்று எனக்கு ஞாபகம். குறிப்பிட்ட யூனிட், அவர்களுடைய குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்டு, கம்மி விலையில் கொடுக்கிறார்கள். அதேமாதிரி முறையில், இவர்களுக்கும் அதே விலையில் ஏனென்றால், அவர்கள் கடுமையாக உழைக்கக் கூடியவர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள்-கொடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கையை அரசு எடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை அலுவலர்களுக்குக் கொடுப்பது போல, சிறைத்துறைப் பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும், பாதி விலையில் உணவுப் பொருட்கள் விநியோகிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும் என்று, ஏற்கனவே 9—4—1990-ல் இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து, சிறைத் துறைத் தலைவரின் அறிக்கை பெற்று, 10—4—1990–ல் அது பெறப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல, ஒரு குடும்பத்திற்கு 4-க்கும் மேற்படாத யூனிட் என்று வழங்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே பணியாற்றக் கூடிய பணியாளர்களுக்கு, பாதி விலையில் என்னென் சாமான்கள்

வழங்கப்படுகின்றன? ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு நிர்ணயம் செய்து வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு அலுவலர் குடும்பத்திற்கு மாதத்திற்கு நான்கிற்கு மேற்படாத யூனிட்டுகள் வழங்கப்படும். ஒரு யூனிட்டிற்கான செலவு 13 ரூபாய் 60 பைசா. குடும்பத்திற்கு 4 யூனிட்டுகள் என்ற கணக்கின்படி, 2,851 பேருக்கு இந்தச்சலுகை கிடைக்கும். கொடுக்கப்படுகின்ற பொருட்கள், அரிசி, துவரம் பருப்பு, உளுந்தம்பருப்பு, பாமாயில், சர்க்கரை, கோதுமை, ரவா அல்லது மைதா.

திரு.வி. கே. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது காவல்துறை காவலர், பணியாளர்களுக்கு பாதி விலையிலே வழங்கப்படுகின்ற அந்த உத்தரவு எந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்டது? இதனால் ஆண்டிற்கு எவ்வளவு ரூபாய் செல வாகிறது? அதேபோல் இன்றைக்கு சிறைக் காவலர்களுக்கும் வழங் கப்பட வேண்டுமானால் கூடிய விரைவிலே வழங்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் அப்படியானால் அதற்கு ஒரு ஆண்டிற்கு எத்தனை கோடி செலவாகும், எவ்வளவு பணியாளர்கள் அதனால் பயன் பெறு வார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கோரிக்கை 1982 ஆம் ஆண்டிலிருந்து பரிசீலனையில் இருந்து வரு கிறது. 1982–லிருந்து பரிசீலிக்கப்பட்டு, பரிசீலிக்கபட்டு, அனு மதிக்கப்படவில்லை. 1988 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப் பட்டது. ஆனால் இப்போது தான் இந்தத் திட்டத்தை நம் முடைய அரசு பரிசீலித்து அனுமதித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறைத் துறை மானியத்தை கவனிக்க வில்லை போல் தெரிகிறது. என்னுடைய துறையைச் சேர்ந்த அந்தப் பிரச்சினையைக் கவனிக்கவில்லை போல் தெரிகிறது. சிறைத் துறை மானியத்தின் போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையிலே பணியாற்றக் கூடியவர்களுக்கு கொடுப்பது போல், சிறைத் துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கும் சலுகை விலையில் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக் கிறது. இதனால் பயனடைக்கூடியவர்கள் 2,851 பேர். இந்த ஆண்டிலிருந்து அது அமலுக்கு வரும். கிட்டத்தட்ட 18 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று கணக்கிடப்பட்டிருக் கிறது.

1990 ஏப்ரல் 26]

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், ஜெயில் வார்டர்களுக்கும் பாதி விலையில் உணவுப் பொருட்கள் அளிப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். உத்தரவு எப்போது போட்டார்கள என்பதல்ல. அமல் படுத்தக்கூடியது தான் வரவேற்கத்தகுந்த விஷயம், என்ற நிலையில், அவர்களுக்கு அந்த வசதியோடு கூட, மற்ற பல வசதிகளும், குறிப்பாக, காவல்துறையினருக்கு இருக்கக் கூடிய ஊதிய உயர்வு சம்பந்தமாகவும், செய்ய வேண்டும். இல்லையெனில் அந்த வார்டர்கள் பொதுவாக வாழ்க்கையிலே துன்பமாக இருப்பதனால், அதன் காரணமாக அவர்களுடைய கோபத்தையெல்லாம் சிறைக் கைதிகள் மீது காட்டக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது, அந்த அடிப்படையில்தான் நானும் சிறைச் சாலையில் 2, 3 ஆண்டுகள் இருந்து அதைப் பார்த்து அனுபவப்பட்டவள் என்ற முறையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் விரைவிலேயே அந்த வார்டர்களுக்குத் தேவையானதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது உள்ள பிரச்சினை மலிவு விலையில் உணவுப் பொருள் கொடுப்பது பற்றியது. இது பற்றி அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. அறிவிப்பைத் தொடர்ந்து உத்தரவு பிறப்பிக்கப்பட இருக்கிறது. பலன் அடையக் கூடியவர்கள் எண்ணிக்கை 2,851 என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல்துறையிலே பணியாற்றக்கூடிய காவலர்கள் 50,000 பேருக்கு மேல் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் கோரிக்கை வைக்கவும், அரசிடத்திலே தங்களுடைய உரிமையை நிலை நாட்டிக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சிறைத்துறையிலே பணியாற்றக்கூடிய வார்டர்கள் மிகவும் குறைந்த அளவிலே, அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், 2,800-க்குட்பட்ட நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்களுடைய குரல் அவ்வளவு வலிவான குரலாக ஒலிக்காத காரணத்தினாலே அவர்கள் பல உரிமைகளைப் பெறுவது கஷ்டமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் 9—4—1990—லிருந்து பிற காவலர்களுக்குக் கொடுக்கக் கூடிய வாய்ப்புகள் சிறைத் துறையிலே இருக்கிற வார்டர்களுக்கும் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இந்த வார்டர்களைப் பொறுத்த அளவில், தண்டனை அடையாத கைதிகளாகத் தான் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய அந்தப் பிரச்சினையை கவனிக்கவும், அந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்கவும் ஒரு குழு அமைத்து அந்த சிறைத் துறைப் பணியாளர்களுடைய கவலையைப் போக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : குழு அமைக்கின்ற யோசனை தற்போது இல்லை. இந்தக் கோரிக்கை பல ஆண்டுக் காலமாக கவனிக்கப்படாமல், இப்போதுதான் கவனிக்கப் பட்டிருக்கின்றது என்பதைத் தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1982 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கோரிக்கை இருந்து வந்திருக்கிறது. 1990 ஆம் ஆண்டில்தான் நிறைவேறி யிருக்கிறது.

நாகப்பட்டினத்தில் புதிதாக நீதிமன்றம் அமைத்தல்.

* 4874—திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை கிழக்கு பகுதிக்கு நாகப்பட்டினத்தில் புதிதாக ஒரு நீதிமன்றத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9–15 மணி

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நாகையில் அமைந்திருக்கின்ற நீதிமன்றம் வெள்ளையர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஒரு சிறிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது, வழக்குகள் நடைபெறுவதற்குத் தடையாகவும், கட்டிடம் பழுது அடைந்த நிலையில் இருப்பதாலும், போதிய கட்டிடம் கட்ட அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய மூலக் கேள்வி, தஞ்சை கிழக்குப் பகுதிக்கு நாகப்பட்டினத்திற்கு புதிதாக ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்பதுதான். அதற்கு இல்லை என்று பதில்

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : குழு அமைக்கின்ற யோசனை தற்போது இல்லை. இந்தக் கோரிக்கை பல ஆண்டுக் காலமாக கவனிக்கப்படாமல், இப்போதுதான் கவனிக்கப் பட்டிருக்கின்றது என்பதைத் தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1982 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கோரிக்கை இருந்து வந்திருக்கிறது. 1990 ஆம் ஆண்டில்தான் நிறைவேறி யிருக்கிறது.

நாகப்பட்டினத்தில் புதிதாக நீதிமன்றம் அமைத்தல்.

* 4874—திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை கிழக்கு பகுதிக்கு நாகப்பட்டினத்தில் புதிதாக ஒரு நீதிமன்றத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9–15 மணி

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நாகையில் அமைந்திருக்கின்ற நீதிமன்றம் வெள்ளையர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஒரு சிறிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது, வழக்குகள் நடைபெறுவதற்குத் தடையாகவும், கட்டிடம் பழுது அடைந்த நிலையில் இருப்பதாலும், போதிய கட்டிடம் கட்ட அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய மூலக் கேள்வி, தஞ்சை கிழக்குப் பகுதிக்கு நாகப்பட்டினத்திற்கு புதிதாக ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்பதுதான். அதற்கு இல்லை என்று பதில்

1990 ஏப்ரல் 26]

அளிக்கப்பட்டிருக்கிறது. கட்டிடத்தைப் பற்றிக் குறிப்பு இல்லை. அதுபற்றி தனியாகக் கேள்வி கேட்டால், பதில் தரப்படும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றம் அமைக்கப்படுகின்ற கருத்து என்பது, புதிதாக துவக்கப் பட்ட திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் தலை நகரமாகிய திருவண்ணாமலைக்கும் பொருந்தும். அப்படி மாவட்ட நீதிமன்றம் அங்கு துவங்க காலதாமதம் ஆகும் என்பதால், வேலூரிலுள்ள செசன்ஸ் கோர்ட்டுகளில் ஒன்றை, திருவண்ணாமலைக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு கேட்கப்பட்டிருக்கின்ற மூலக் கேள்வியில், நாகப்பட்டினத்தில் தஞ்சை கிழக்கு பகுதி வழக்குகளை கவனிப்பதற்கு நீதிமன்றமே இல்லாமல் இருப்பது போலவும், புதிதாக நீதிமன்றத்தை ஏற்படுத்த வேண்டு மென்றும் கேட்பது, பெரிதும் ஆச்சரியம் அளிக்கக்கூடிய முறையிலே அமைந்திருக்கிறது. இது தவறான நிலையை உருவாக்கிவிடும். நீண்ட நெடுங்காலமாக, மாவட்ட நீதி மன்றம் என்பது நாகப்பட்டினத்தில் செயல்பட்டுக் கொண்டி ருக்கிறது. இந்த மாவட்ட நீதிமன்றம், இதனுடைய உப நீதிமன்றங்கள் அங்கே இருந்து செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன. அந்த நீதிமன்றங்களுக்கு போதிய கட்டிட வசதி இல்லாமல் பழுது அடைந்த நிலையில் இருக்கின்றன. அந்த கட்டிடங்களைப் பழுது பார்த்து, உரிய கட்டிடங்களை ஏற் படுத்தித் தருவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வது போல, நாகப்பட்டினம் பகுதியிலே கோர்ட் இல்லையோ என்ற சந்தேகம் வேண்டாம் என்பதற்காக இந்த விவரங்களைச சொல்ல விரும்புகிறேன்; உரிமை இயல் நீதிமன்றங்கள், மாவட்ட மற்றும் அமர் நீதிமன்றம், நாகப்பட்டினம் துணை நீதிமன்றம் நாகப்பட்டினம், துணைநீதிமன்றம், மயிலாடுதுறை; மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், நாகப்பட்டினம்; மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம் திருத்துறைப்பூண்டி; மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம் திருவாரூர்

மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், மயிலாடுதுறை, மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், சீர்காழி மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், நன்னிலம்.

குற்றவியல் நீதிமன்றங்கள் :

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, நாகப்பட்டினம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2, நாகப்பட்டினம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருவாரூர், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, மயிலாடுதுறை, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2, மயிலாடுதுறை, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சீர்காழி.

மாண்புமிகு உறுப்பினர் கேட்டது போல, கட்டிடங்கள் கட்டுகின்ற முக்கியப் பிரச்சினை, நிதிநிலையை அனுசரித்து, போதிய கட்டிடம் கட்டப்படும்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பது குறித்து, அந்த மாவட்டத்திலுள்ள சிவகாசி, சாத்தூர், ஆகிய பகுதிகளிலுள்ள வழக்கறிஞர்கள் எல்லாம் கடந்த 2 மாதமாக நீதிமன்றத்திற்குச் செல்லாமல் புறக்கணித்து, தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பில்லை ; தனியாக கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

ஆக்கிரமிப்பை அகற்றுதல்.

*3664 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடியில் வைகை ஆற்றின் ஓரத்தில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், மயிலாடுதுறை, மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், சீர்காழி மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், நன்னிலம்.

குற்றவியல் நீதிமன்றங்கள் :

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, நாகப்பட்டினம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2, நாகப்பட்டினம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருவாரூர், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, மயிலாடுதுறை, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2, மயிலாடுதுறை, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சீர்காழி.

மாண்புமிகு உறுப்பினர் கேட்டது போல, கட்டிடங்கள் கட்டுகின்ற முக்கியப் பிரச்சினை, நிதிநிலையை அனுசரித்து, போதிய கட்டிடம் கட்டப்படும்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பது குறித்து, அந்த மாவட்டத்திலுள்ள சிவகாசி, சாத்தூர், ஆகிய பகுதிகளிலுள்ள வழக்கறிஞர்கள் எல்லாம் கடந்த 2 மாதமாக நீதிமன்றத்திற்குச் செல்லாமல் புறக்கணித்து, தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பில்லை ; தனியாக கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆக்கிரமிப்பை அகற்றுதல்.

*3664 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடியில் வைகை ஆற்றின் ஓரத்தில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

1990 ஏப்ரல் 26]

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதியிலும் எமனேஸ்வரம் பகுதியிலும் வைகை ஆற்றுப் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்தது. அந்த ஆக்கிரமிப்புகளை உடன் அகற்ற அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் இரு பகுதிகளின் ஓரங்களிலும் ஒரு சில அதிகார வர்க்கத்தினர், ஒரு சில அரசியல் வாதிகள், செல்வாக்குள்ளவர்கள், முதலில் வேலிகளை அமைத்து பின்பு வீடுகளைக் கட்டி வருகிறார்கள். இங்கு குடியிருப்பவர்கள் சாராயம் காய்ச்சி, சட்ட விரோதமாக விற்பனை செய்து வருகிறார்கள். சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறார்கள். குறிப்பாக, மகளிருக்கென கட்டப்பட்ட — ஆற்றின் ஓரத்தில் கட்டப்பட்டுள்ள கழிப்பறைகளின் அருகிலே குடிசைகளைப் போட்டு, ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். ஆற்றின் ஓரத்தில் இருக்கக்கூடிய வீட்டின் சொந்தக்காரர்கள் 70 விருந்து 100 அடி வரைக்கும் கரைகளை ஆக்கிரமித்து, பின்னர் வீடுகளை 'எக்ஸ்டென்ட்' செய்து கொண்டிருக்கிறார்கள். அரசின் கவனத்திற்கு, பலமுறை கொண்டு வந்தும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசு, துரித நடவடிக்கை எடுக்காவிட்டால், ஆற்றின் நடுவிலே கூட குடிசைகளை அமைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

9–20 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யூகத்துக்கு எல்லாம் இங்கு இடம் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, பரமக்குடி வட்டம், பரமக்குடி டவுன், காடு பரமக்குடி வைகையாற்று புறம்போக்கில் மொத்தம் 124 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். மேற்படி 124 நபர்களில் 8 நபர்கள் ஓடு வீடு கட்டியும், ஒரு நபர் காரை வீடு கட்டியும், மீதம் 115 நபர்கள் கூரை வீடுகள் கட்டியும் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். மேலும் வைகையாற்றுப் புறம்போக்கிலேயே எமனேஸ்வரம் பகுதியில் 37 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். மேற்படி 37 நபர்களில் 3 நபர்கள் கூரை வீடு கட்டியும், 2 நபர்கள் தென்னை வைத்தும், 2 நபர்கள் கிணறு வெட்டியும். மீதம் 30 நபர்கள் வேலி அடைத்தும் ஆக்கிரமிப்பு .செய்து இருக்கிறார்கள். மேற்சொன்ன ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் விரைவில் காலி செய்ய பரமக்குடி வட்டாட்சியரால் நடவடிக்கை

[1990 ஏப்ரல் 26

எடுக்கப்பட்டு வருகிறது. அங்கு கள்ளச்சாராயம் காய்ச்சுகிற விவரம் எனக்குதெரியாது. நேரடியாக எனக்கு தகவல் வந்தால் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிக்கும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பரமக்குடி அருகில் வைகையாற்றிலிருந்து வரும் தேன்தோனி கால்வாய் இப்போது தூர்ந்து இருக்கிறது. கால்வாய் புறம் போக்கு ஆக்கிரமிப்பு என்று தெரிந்தும் கூட கழிவுநீர் சென்று கொண்டு இருந்த அந்தக் கால்வாயை ஆக்கிரமிப்புச் செய்து வீடுகள் கட்டியதன் மூலம் கழிவுநீர் செல்லாமல் நகரின் மத்தியில் ரோடுகளில் சாக்கடை ஓடிக்கொண்டிருக்கிற சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆகவே அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அந்தக் கழிவுநீர் செல்வதற்குக் கால்வாயை சீரமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: இது மாண்புமிகு உறுப்பினரின் விளக்க உரை. தகுந்த உரை, மேற்சொன்ன ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் விரைவில் காலி செய்ய பரமக்குடி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுந்தரம், மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக துணை வினா இருக்க வேண்டும்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் இருக்கின்ற வைகையாற்று புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவது மட்டும் அல்லாமல் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற பாலாற்று புறம்போக்கில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திடீரென்று கேட்டால் அமைச்சரிடம் பதில் இருக்குமா? (குறுக்கீடு) சரி கேளுங்கள்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வீடுகளைக் கட்டிக்கொண்டு, இருப்பதால் மழைக் காலங்களில் அது அடித்துக்கொண்டு செல்லப்படுகிறது, அதற்கு உடனடியாக நிவாரணம் தேவை என்று கூட அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் கோருகிறார்கள். அதைத் தடுத்து உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : திருப்தியாகத் தெரிவிக்கிறேன், அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 8359 எதிர்பாராத விபத்துகளில் மரணம் அடையும் மாட்டு வண்டித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை பற்றிய கேள்வி....விடை கிடைத்து விட்டதா? இது ஒரு "accident" தானே! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, சிறு விபத்து பொறுத்தருளக் கேட்டுக்கொள்கிறேன்.

மாட்டுவண்டித் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை

8359 திரு. மெ. ஆண்டி அம்பலம் :
திருமதி ரமணி நல்லதம்பி :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எதிர்பாரா விபத்துகளினால் மரணமடையும் மாட்டு வண்டித் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ. 15,000 அளிக்க வேண்டுமென அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசின் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9-25 மணி

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டிகளிலே இரவு நேரங்களிலே பிரயாணம் செய்கின்ற பொழுது அவர்கள் லாரி அல்லது பஸ் விபத்துக்களில் இறக்கின்றபொழுது, அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆனால், அமைச்சரவர்கள் ஒரே வார்த்தையிலே ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடையில் என்ற அந்த விவசாயிகளை நம்பித்தான் நாமெல்லாம் இருக்கிறோம். அந்த அடிப்படையிலே அமைச்சரவர்கள் கருணை கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு நல்லதொரு உதவித் தொகை கிடைக்கச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 8359 எதிர்பாராத விபத்துகளில் மரணம் அடையும் மாட்டு வண்டித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை பற்றிய கேள்வி....விடை கிடைத்து விட்டதா? இது ஒரு "accident" தானே! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, சிறு விபத்து பொறுத்தருளக் கேட்டுக்கொள்கிறேன்.

மாட்டுவண்டித் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை

8359 திரு. மெ. ஆண்டி அம்பலம் :
திருமதி ரமணி நல்லதம்பி :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எதிர்பாரா விபத்துகளினால் மரணமடையும் மாட்டு வண்டித் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ. 15,000 அளிக்க வேண்டுமென அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசின் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9–25 மணி

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டிகளிலே இரவு நேரங்களிலே பிரயாணம் செய்கின்ற பொழுது அவர்கள் லாரி அல்லது பஸ் விபத்துக்களில் இறக்கின்றபொழுது, அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆனால், அமைச்சரவர்கள் ஒரே வார்த்தையிலே ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடையில் என்ற அந்த விவசாயிகளை நம்பித்தான் நாமெல்லாம் இருக்கிறோம். அந்த அடிப்படையிலே அமைச்சரவர்கள் கருணை கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு நல்லதொரு உதவித் தொகை கிடைக்கச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் இரக்க உணர்வோடும், கருணை உள்ளத்தோடும் கேட்ட கேள்விக்கு விளக்கமான பதிலை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 23-5-1989 ஆம் நாள் 471 நிதிநிலை எண் கொண்ட அரசாணை மற்றும் திருத்தப்பட்ட அரசின் கடிதங்களில் 32 வகைப்பட்ட தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டு இருக்கும்போது இறந்தாலோ அல்லது காயம் உற்றாலோ அவர்களின் குடும்பத்திற்கு விபத்து நிவாரணச் சட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் கீழ் 32 பேர்கள் என்று நான் குறிப்பிட்டேன். அதை அவை தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புமேயானால் நான் அந்த 32 பேர் பட்டியலையும் படிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) ஏற்கனவே கொடுத்ததுதான். தையல் தொழிலில் ஈடுபட்டு இருக்கும்பொழுது ஏழை தொழிலாளர்கள் விபத்தில் இறந்தாலோ அல்லது காயம் உற்றாலோ மற்றும் வெள்ளையடிப்போர், வண்ணம் பூசுபவர் மற்றும் மின் வினைஞர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தில் இறந்தாலோ அல்லது காயமுற்றாலோ—ஆகிய பிரிவினர்களை இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (குறுக்கீடு) மாட்டு வண்டி ஓட்டுபவர்களுக்குச் சொல்கிறீர்களா? அதுவும் இதில் வருகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாட்டு வண்டி ஓட்டுபவர்களுடைய மூலதனமே மொபைல் மூலதனம்—அந்த வண்டி, அந்த இரண்டு மாடுகள்தான் அவர்களுடைய மூலதனம். ரோடுகளிலே விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தினால், லாரி ஓட்டி வருகின்றவர்களும் தூக்கக் கலக்கத்திலேதான் இரவு நேரங்களிலே வருகிறார்கள், இந்த மாட்டு வண்டி வைத்திருப்பவர்களும் இரவிலே தூக்கக் கலக்கத்திலே வண்டி ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சாலை விபத்துக்களிலே மாடுகள் இறந்து, வண்டிகள் நொறுங்கி, அந்த வண்டி ஓட்டியும் மடிந்து கிடக்கின்ற காட்சியையும் நாங்கள் காண்கின்றோம். அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் வண்டி வாங்குவதற்கும், மாடு வாங்குவதற்கும் வகை செய்கின்ற முறையிலே இழப்பை ஈடு செய்கின்ற வகையிலே 15,000 ரூபாயாவது குறைந்தபட்ச உதவித் தொகை வழங்க அரசு முன் வந்தால் அது நியாயமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மூலதனத்தைப் பெருக்குவதற்குமுயற்சிப்போம்.

திரு.சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாடுகளுக்குப் பதிலாக மனிதர்களே பலதொழில் நகரங்களிலே கை வண்டி இழுத்துச் செல்லுகின்ற நேரங்களில் பல விபத்துக்களுக்கு

1990 ஏப்ரல் 26]

நகரப் பகுதிகளிலே ஆளாகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு இந்த விபத்தில் இறந்தால் உதவித் தொகை வழங்க அரசு முன் வருமா என அமைச்சரவர்கள் மூலம் விளக்கமாகப் பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இது விரிவான விளக்கத்திற்கு வழிவகை செய்கிறது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் அந்த விரிவான விளக்கம் தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது தேவைப்படுகின்ற அளவிற்குக் கேள்வி கேட்கப்பட்டிருக்கின்ற காரணத்தால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே ஒரு பெரிய பட்டியலைப் போன மாதம் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அறிவித்திருக்கிறேன். திருப்பியும் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அன்றைக்கு "absent". (சிரிப்பு).

திரு. கே. ரமணி : வேண்டுமானால் லிஸ்டை வைத்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மகிழ்ச்சி. நேரமும் மிச்சமாகும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வியாகும். இன்றைக்கு மாட்டு வண்டியை ஓட்டிச் செல்வது மட்டுமல்லாமல், அந்த வண்டிகளை இழுத்தும் செல்கிறார்கள் பல இடங்களிலே. பெண்கள்கூட அந்த வண்டிகளை இழுத்துச் செல்வதிலே பங்கு கொள்கிறார்கள். ஆகவே, அவர்கள் ஏதாவது விபத்திலே இறந்துவிட்டால், வண்டிகளை ஓட்டிச் செல்லும்பொழுது கீழே விழுந்தோ அல்லது வேறு விதமான காரணத்தினாலோ அந்த வேலைகளில் இருக்கும் பொழுது இறந்து விட்டால் அவர்களுக்கு நிவாரண நிதி இந்த பத்தாயிரம் ரூபாய்—மற்ற பேர்களுக்கெல்லாம் பத்தாயிரம் என்று அறிவித்திருக்கிறோம்—அது அவர்களுக்கு உண்டா என்பது தான் இந்த கேள்வி. அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள், கேள்வி எழவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் இல்லையென்று சொன்னாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 32 வகையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு எப்படி நிவாரணம் 10,000 ரூபாய் அளிப்பதாக சொல்லி இருக்கிறார்களோ, அதைப்போல வருவாய்த் துறை

அமைச்சர் அவர்கள் இந்த கை வண்டி இழுக்கிற, அடித் தட்டிலே இருக்கிற, இந்த சாதாரணத் தொழிலாளர்களுக்கும் இறந்தால் 10,000 ரூபாய் வழங்கப்படும் என்ற உத்தரவை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்,

9-30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அண்ணன் அழகர்சாமி அவர்கள் ஆண்களிலிருந்து பெண்களுக்கு வந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு உறுதி அளிக்கிறேன். (குறுக்கீடு) அவர்களுக்கும் சேர்த்து, இரண்டிற்கும் சேர்த்து அவர்களுக்கும் உதவி அளிக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் கேட்டிருப்பது இரவு நேரத்தில் வண்டி ஓட்டிச் செல்பவர்களுக்கு விபத்து ஏற்பட்டு, மாடும், வண்டியும், மனிதனும் சேர்த்து பாதிக்கப்பட்டால் அதற்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தான் — இதை இந்த அவையும், தமிழகமும் அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறது. ஆனால், மாடும், வண்டியும் பாதிக்கப்பட்டால் நிவாரணம் வேண்டுமா என்று கேட்டால், மரத்தில் ஏறி விழுந்துவிட்டால் நாங்கள் நிவாரணம் அளிப்பதற்கு அறிவித்து இருக்கிறோம் என்று கூறுவது எங்களுக்கு நிறைவு அளிக்க வில்லை. இப்படி மாடும், வண்டியும் பாதிக்கப்படும் போது, அப்படி திட்டத்தில் இல்லாவிட்டாலும் கூட, அரசு பரிசீலனை செய்து, அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு நிவாரணம் நீதிமன்றத்தில் கிடைக்கும். அரசும் அவர்களுக்கு உதவும். மரத்திலிருந்து விழுபவர்களுக்கு மட்டும் தானா, மாட்டு வண்டி இழுத்து செத்தால் அது கிடையாதா என்று கேட்டிருக்கிறார்கள். அனுதாபத்தோடு அரசு அதை கவனிக்கும். உறுப்பினர் குழப்பக் கூடாது. (சிரிப்பு).

கொளஞ்சியப்பர் மற்றும் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானங்களை இணைத்தல்

*1670 **திரு. கோ. பூவராகன் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்தையும், விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானத்தையும் இணைத்து, ஒரே நிர்வாகத்தில் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

அமைச்சர் அவர்கள் இந்த கை வண்டி இழுக்கிற, அடித் தட்டிலே இருக்கிற, இந்த சாதாரணத் தொழிலாளர்களுக்கும் இறந்தால் 10,000 ரூபாய் வழங்கப்படும் என்ற உத்தரவை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்,

9–30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அண்ணன் அழகர்சாமி அவர்கள் ஆண்களிலிருந்து பெண்களுக்கு வந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு உறுதி அளிக்கிறேன். (குறுக்கீடு) அவர்களுக்கும் சேர்த்து, இரண்டிற்கும் சேர்த்து அவர்களுக்கும் உதவி அளிக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் கேட்டிருப்பது இரவு நேரத்தில் வண்டி ஓட்டிச் செல்பவர்களுக்கு விபத்து ஏற்பட்டு, மாடும், வண்டியும், மனிதனும் சேர்த்து பாதிக்கப்பட்டால் அதற்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தான் — இதை இந்த அவையும், தமிழகமும் அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறது. ஆனால், மாடும், வண்டியும் பாதிக்கப்பட்டால் நிவாரணம் வேண்டுமா என்று கேட்டால், மரத்தில் ஏறி விழுந்துவிட்டால் நாங்கள் நிவாரணம் அளிப்பதற்கு அறிவித்து இருக்கிறோம் என்று கூறுவது எங்களுக்கு நிறைவு அளிக்க வில்லை. இப்படி மாடும், வண்டியும் பாதிக்கப்படும் போது, அப்படி திட்டத்தில் இல்லாவிட்டாலும் கூட, அரசு பரிசீலனை செய்து, அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு நிவாரணம் நீதிமன்றத்தில் கிடைக்கும். அரசும் அவர்களுக்கு உதவும். மரத்திலிருந்து விழுபவர்களுக்கு மட்டும் தானா, மாட்டு வண்டி இழுத்து செத்தால் அது கிடையாதா என்று கேட்டிருக்கிறார்கள். அனுதாபத்தோடு அரசு அதை கவனிக்கும். உறுப்பினர் குழப்பக் கூடாது. (சிரிப்பு).

கொளஞ்சியப்பர் மற்றும் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானங்களை இணைத்தல்

*1670 **திரு. கோ. பூவராகன் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்தையும், விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானத்தையும் இணைத்து, ஒரே நிர்வாகத்தில் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

1990 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாச்சலம் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானத்தையும், கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்தையும் இணைத்து, ஒரே நிர்வாகத்தில் கொண்டு வரும் திட்டம் அறநிலையத் துறையிடம் இல்லை.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இந்த இரு தேவஸ்தானங்களும் ஒரே நகரத்தில் அமைந்து இருப்பதால், இரு இடங்களிலும் எக்சிகியூட்டிவ் ஆபீசர் வைத்து நிர்வகிக்கப்படுகிறது. இரு நிர்வாகமும் அசிஸ்டெண்ட் கமிஷனர் அளவில் வந்தால் இன்னும் செம்மையாகவும், நல்ல முறையிலும் நடைபெறும் என்பதற்காக அசிஸ்டெண்ட் கமிஷனர் நிர்வாகத்தின்கீழ் ஒருங்கிணைத்துச் செய்வதற்கு அரசு முன் வருமா என்பது தான் என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்களின் பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே ஏறத்தாழ 20 கோயில்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன. 20 கோயில்களையும் இணைத்து ஒரே செயல் அலுவலருடைய நிர்வாகத்தில் கொண்டு வருவதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறோம். இங்கேயும் இரண்டு கோயில்களும் பெரிய கோயில்கள். விருத்தகிரீஸ்வரர் கோயிலுக்கு ஏறத்தாழ நான்கு லட்சம் ரூபாய் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு இருந்தாலும் கூட, நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்களுக்கு நன்றாக தெரியும் — திட்டங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் அளவிற்கு அந்த கோயில் வருவாயை உயர்த்த முடியும். அதற்கே தனியாக அசிஸ்டெண்ட் கமிஷனர் ஒருவரை இன்னும் ஒரு ஆண்டு காலத்திலே நியமிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தனித் தனியாக இருந்தால் இன்னும் நன்றாக இந்த இரண்டு கோயில்களும் வளர்ச்சி பெறமுடியும் என்று நான் கருதுகிறேன்.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் இருக்கிற அந்த விருத்தகிரீஸ்வரர் கோயிலில் அல்லது கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்தில் — அதனை அசிஸ்டெண்ட் கமிஷனர் நிலைக்கு உயர்த்தினால் நிர்வாகம் செம்மையாக, சீராக நடைபெறும். அங்கே திருப்பணி வேலைகள் எல்லாம் நடைபெறாமல் இருப்பதால், ஒரு நல்ல உயர்தர அதிகாரியை அமர்த்தினால விரைவில் இந்தத் திருப்பணி வேலைகளை எல்லாம் முடிப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கும். அதை உணர்ந்து விரைவில் இதை நிவர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கொளஞ்சியப்பர் கோயிலைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற நிர்வாக அதிகாரி சில குறைபாடுகளோடு இருக்கிறார் என்பது எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நிர்வாக அதிகாரியை மாற்றி, அந்தப் பணிகள், திருப்பணிகள் வேகப்படுத்தப்படும். அதேபோல் விருத்தகிரீஸ்வரர் கோயிலுக்கும் திட்டங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம். எனவே ஒரு அங்காடியை பலமாடிக் கட்டிடத்தைக்கட்டி அதன்மூலம் அந்தக் கோயிலின் வருமானத்தைப் பெருக்க இருக்கிறோம். திருப்பணிக் குழு போடப்பட இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு கோயில்களுடைய வளர்ச்சியை மனதிலே கொண்டு, காரியங்கள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

9-35 மணி

அங்காடிகள் அமைத்தல்

* **2232 திரு. சோ. பால்ராஜ் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாநகருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நகரின் மையப் பகுதியில் சிறு வியாபாரிகளுக்கான நிரந்தர அங்காடிகள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத்தலைவர் அவர்களே,

மதுரை நகரின் மையப் பகுதியிலே இருக்கிற கூடலழகர் கோவிலுக்குச் சொந்தமான திருக்குளத்தில் டெல்லியிலே இருப்பதைப் போல ஒரு ஏர்கண்டிசன் அங்காடி அமைப்பதற்கு அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் திட்டமிடப்பட்டது. அந்தக் கோவிலைச் சேர்ந்த வைணவர்கள், வைணவ ஆன்மீக நேயர்கள் ஒரு சங்கத்தின் மூலமாக நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கிவிட்டதன் காரணமாக இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. சோ. பால்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரின் முக்கியப் பகுதியாக உள்ள டவுன் ஹால் ரோடில் உள்ள பெருமாள் கோவிலில் உள்ள குளத்தில் இப்போது தண்ணீரும் கிடையாது. விழாவும் நடைபெறுவதில்லை. ஆகவே தடை வாங்கப்பட்டதை நீக்கி, **அந்த அங்காடிகள் கட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.**

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கொளஞ்சியப்பர் கோயிலைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற நிர்வாக அதிகாரி சில குறைபாடுகளோடு இருக்கிறார் என்பது எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது. ஆகவே அந்த நிர்வாக அதிகாரியை மாற்றி, அந்தப் பணிகள், திருப்பணிகள் வேகப்படுத்தப் படும். அதேபோல் விருத்தகிரீஸ்வரர் கோயிலுக்கும் திட்டங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம். எனவே ஒரு அங்காடியை பலமாடிக் கட்டிடத்தைக்கட்டி அதன்மூலம் அந்தக் கோயிலின் வருமானத்தைப் பெருக்க இருக்கிறோம். திருப்பணிக் குழு போடப்பட இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு கோயில்களுடைய வளர்ச்சியை மனதிலே கொண்டு, காரியங்கள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

9-35 மணி

அங்காடிகள் அமைத்தல்

* **2232 திரு. சோ. பால்ராஜ் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாநகருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நகரின் மையப் பகுதியில் சிறு வியாபாரிகளுக்கான நிரந்தர அங்காடிகள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத்தலைவர் அவர்களே,

மதுரை நகரின் மையப் பகுதியிலே இருக்கிற கூடலழகர் கோவிலுக்குச் சொந்தமான திருக்குளத்தில் டெல்லியிலே இருப்பதைப் போல ஒரு ஏர்கண்டிசன் அங்காடி அமைப்பதற்கு அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் திட்டமிடப்பட்டது. அந்தக் கோவிலைச் சேர்ந்த வைணவர்கள், வைணவ ஆன்மீக நேயர்கள் ஒரு சங்கத்தின் மூலமாக நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கிவிட்டதன் காரணமாக இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. சோ. பால்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரின் முக்கியப் பகுதியாக உள்ள டவுன் ஹால் ரோடில் உள்ள பெருமாள் கோவிலில் உள்ள குளத்தில் இப்போது தண்ணீரும் கிடையாது. விழாவும் நடைபெறுவதில்லை. ஆகவே தடை வாங்கப்பட்டதை நீக்கி, அந்த அங்காடிகள் கட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத்தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திருக்குளத்தை முழுவதுமாக மூடுவதற்கு ஆன்மீக நேயர்கள் மத்தியிலும், பக்தர்கள் மத்தியிலும், குறிப்பாக மடாதிபதிகள் மடங்களைச் சேர்ந்த பீடாதிபதிகள் இப்படிப்பட்ட குளத்தை தூர்க்கக் கூடாது என்று அறிக்கை விடுகிறார்கள். ஆகவே அதற்கு மாற்று ஏற்பாடாக நான் பலரிடத்திலே இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். அங்கே குளத்தின் மையப் பகுதியிலே உள்ள மண்டபத்தை அப்படியே வைத்துக்கொண்டு, மண்டபத்தைச் சுற்றி ஓரளவிற்கு தண்ணீர் தங்கக்கூடிய அளவிற்கு குளமும் வைத்து, அந்தக் குளத்தைச் சுற்றி ஒரு நந்தவனமும் ஏற்பாடு செய்து, நந்தவனத்தைச் சுற்றி, சாலைக்கு அருகிலே அங்காடியைக் கட்டினால், இது ஒரு மல்டி-பர்பஸ் ஸ்கீம் என்ற அளவிலே இதை மக்கள், பக்தர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். பீடாதிபதிகள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த அவையின் மூலமாக அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான எழுகடல் பகுதியில் தேவஸ்தானத்தினுடைய அனுமதியோடு கடைகள் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதைப்போல அந்தப் பகுதியிலும், அதே பிரமுகர்கள்தான் மீனாட்சி அம்மன் கோவிலைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய அனுமதியைப் பெற்று, உடனடியாக மதுரை நகரின் இதயம் போன்று இருக்கிற இந்த டவுன் ஹால் ரோடில் அங்காடிகள் கட்டினால் வருமானம் வரும். ஏழை மக்களுக்கு சிறிய கடைகள் கட்டிக் கொடுத்தால், அவர்களுடைய வியாபாரத்தின் மூலமாக அவர்களுடைய பிழைப்பும் நடைபெறும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, எழுகடல் பகுதியில் இந்த அங்காடிகள் கட்டப்படுவது முடிகின்ற தருவாயிலே இருக்கிறது. மீனாட்சி அம்மன் கோவிலுக்கு இதன் மூலமாக வருவாய் பெருகும் என்று கருதுகிறோம். அதைப்போல கூடலழகர் கோவிலைச் சேர்ந்த இந்த திருக்குளத்திலே அங்கேயிருக்கிற ஆன்மீக நேயர்களுடைய அனுமதியைப் பெற்று, இதுபோன்ற அங்காடிகள் கட்டப்படுகின்ற செயற்குறிப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தினுடைய மையப் பகுதி என்பது மஹால் பகுதியாகும். அந்த

மஹால் பகுதியில் தற்காலிகக் கடைகள்தான் இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாத அளவிற்கு அந்தப் பகுதியிலே நிறைய திருட்டுகள் நடக்கின்றன. அங்கே தற்காலிகமாக இல்லாத நிலையில், நிரந்தரமாக சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்துகிற வகையில், மஹால் பகுதியில் கடைகள் அமைப்பதோடு, அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகள் சில மணி நேரங்கள் தங்கிச் செல்கின்ற அளவிற்கு ஓய்வு பெற்றுச் செல்கிற அளவிற்குதங்கும் விடுதிகளைக் கட்டி, திருட்டையும் ஒழிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. சுற்றுலாப் பயணிகளுடைய வசதியை மனதிலே கொண்டு, அங்கே இருக்கக்கூடிய கடைகளை நிரந்தரமான கடைகளாகக் கட்டுவதற்கும், தங்கும் விடுதி அமைப்பதற்கும், சுற்றுலாத் துறையின் மூலமாக ஏற்பாடு செய்யலாம். ஆனால் திருட்டுக்களைத் தடுப்பதற்கு காவல் துறைதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9-40 மணி

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பால்ராஜ் அவர்கள் எழுப்பிய கேள்வியோடு என்னுடைய கேள்வியை இணைத்துக்கொள்ள வேண்டுகிறேன். மதுரை மாநகருக்கு வெளியிலிருந்து வரக் கூடியவர்கள் மீனாட்சியம்மன் கோவில் மேற்கு வாசல் வழியாகத்தான் உள்ளே நுழைய வேண்டும். அப்படி நுழைகின்ற அந்த நெடுஞ்சாலை ‘ டவுன் ஹால் ரோடு’ என்று அழைக்கப்படுகின்றது. அந்த டவுன் ஹால் ரோடில் மிக முக்கியமான இடத்தில் சுமார் 300 ஆண்டு களாக தண்ணீர் இல்லாமல் ஒரு குளம் தூர்ந்து போயிருக்கிறது. அதை யாரோ ஒருவர் தடை வாங்கியிருக்கிறார் என்ற காரணத் திற்காக மதுரையினுடைய அழகை அழித்துவிடக் கூடாது என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தடையை நீக்குவதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத் திருக்கிறது அல்லது நீதிமன்றத்தின் மூலமாக ஒரு கமிஷன் அந்த இடத்தைப் போய்ப் பார்த்து அந்த குளத்தை எவ்வளவு அசுத்தப்படுத்துகிறார்கள் என்பதை எல்லாம் கவனித்து விரை விலே அதற்கு நல்ல நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் நீதிமன்றத்திலே அவர்களும் அந்தக் கோவிலைச் சேர்ந்த ஆன்மீக நேயர்களும் அறநிலையத் துறையும் போய் வழக்காடிக் கொண்டு நேரத்தை வீணாக்கு வதைவிட அவர்களோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறோம்,

அவர்களுக்கும் ஏற்புடைய ஒரு திட்டத்தை உருவாக்கவிருக்கிறோம் நமக்கு அங்கே அங்காடிகள் வேண்டும், அந்தக் குளம் சுத்தமாக இருக்க வேண்டும், அதுதான் நம்முடைய நோக்கம். அவர்களுக்கு அங்கே மையத்திலே இருக்கக் கூடிய மண்டபம் வேண்டும். மண்டபத்தைச் சுற்றி சிறிய குளம் வேண்டும். அந்தக் குளத்தைச் சுற்றி ஒரு நந்தவனமும் உருவாக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். இவைகளை எல்லாம் சேர்த்து ஒரு 'Integrated Scheme' என்ற அளவிலே அந்தக் கோவிலினுடைய பக்தர்களுடைய அனுமதியைப் பெற்று விரைவிலே அந்தத் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் யோசனைப்படி ஒன்று தெப்பக் குளத்தின் மீது இருக்கின்ற தடையை நீக்கவேண்டும், அல்லது பக்தர்கள் சொல்வதைப் போன்று தெப்பக் குளத்தைப் புனிதப்படுத்த வேண்டுமென்றால் தெப்பக் குளக்கரையிலே இருக்கின்ற அந்தக் கடைகளை காலி செய்யவேண்டும். அங்கே ஒரு சாதாரண ரிக்ஷா கூடப் போகமுடியாத அளவிற்கு நெருக்கடியாக இருப்பதால், ஏராளமான லாட்ஜுகளில் இருப்பவர்கள் அவதிப்படுகிறார்கள். அதையாவது அமைச்சரவாகள் பரிசிலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, யார் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்களோ, அவர்களோடு ஒரு சமரச முடிவு ஏற்பட்டால் அவர்களே அந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வார்கள், திரும்பப் பெற்றுக் கொள்வார்கள். ஆகவே அதைப்பற்றி அதிகமாக நாம் அக்கறைப்படத் தேவையில்லை. நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொல்வதைப்போல் அந்தக் குளத்தைச் சுற்றி சாலைகளிலே கடைகள் இருக்கின்றன. நெருக்கடியான இடம். அவைகளை நானே பார்த்திருக்கிறேன். அந்தக் குறைகளைப் போக்குவதற்கு அந்தக் குளக் கரையிலே கட்டிடங்கள் கட்டி, கடைகள் கட்டி, அந்தக் கடைகளை சாலையோரங்களில் இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்கான திட்டம் இருக்கிறது.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரைப்போல் திருச்சியிலும் (குறுக்கீடு) ஒட்டிய கேள்வி தான். அவரிடம் பதில் இருக்கிறது. மலைக் கோட்டையை ஒட்டிய தெப்பக் குளத்தைச் சுற்றி இதுபோன்ற கடைகள் கட்டி தெப்பக் குளத்தையொட்டி கடைகள் கட்டுவதன் மூலம் அங்கே ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றவர்களை அகற்றி மலைக் கோட்டை தேவஸ்தானத்திற்கு

வருவாயைப் பெருக்குகின்ற செயற் குறிப்பு அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது, அது குறித்து என்ன நடவடிக்கை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உள்ள பிரச்சினைக்கும், திருச்சியிலே உள்ள பிரச்சினைக்கும் சற்று வேறுபாடு உள்ளது. மதுரையிலே குளத்திலே தண்ணீரே இல்லை. ஆனால் திருச்சியிலே உள்ள குளத்திலே அதிகமான தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. தெப்பத் திருவிழா அங்கே நடத்த முடியும். ஆகவே அங்கே குளக் கரையில் குளத்திற்குள்ளே அங்காடிகள், கடைகள் கட்டுகின்ற பிரச்சினை எழவில்லை. இருந்தாலும் குளக் கரையில் அந்தக் கடைகளை வைப்பதால் இடைஞ்சலாக இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். அந்தக் கோவிலில் இருக்கக் கூடிய அறக்காவலர்கள் அண்ணா தி. மு. க. கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள். அங்கே உள்ள நகராட்சியை அணுகி அந்தக் கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்குதல்.

*2954 திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு இந்துசமய அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தருமபுரி மாவட்டம், சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

9–45 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தருமபுரி மாவட்டம் சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்குவதற்குப் பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்தேரி என்பது 4,000 அடிக்கு மேலே இருக்கிற ஒரு உயரமான மலைப்பகுதி. 48 கிராமங்களைக் கொண்டிருக்கிற பகுதி. அந்தப் பகுதிகளிலே, வனத்துறை

வருவாயைப் பெருக்குகின்ற செயற் குறிப்பு அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது, அது குறித்து என்ன நடவடிக்கை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உள்ள பிரச்சினைக்கும், திருச்சியிலே உள்ள பிரச்சினைக்கும் சற்று வேறுபாடு உள்ளது. மதுரையிலே குளத்திலே தண்ணீரே இல்லை. ஆனால் திருச்சியிலே உள்ள குளத்திலே அதிகமான தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. தெப்பத் திருவிழா அங்கே நடத்த முடியும். ஆகவே அங்கே குளக் கரையில் குளத்திற்குள்ளே அங்காடிகள், கடைகள் கட்டுகின்ற பிரச்சினை எழவில்லை. இருந்தாலும் குளக் கரையில் அந்தக் கடைகளை வைப்பதால் இடைஞ்சலாக இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். அந்தக் கோவிலில் இருக்கக் கூடிய அறக்காவலர்கள் அண்ணா தி. மு. க. கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள். அங்கே உள்ள நகராட்சியை அணுகி அந்தக் கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்குதல்.

*2954 திரு. வ. முல்லைவேந்தன்:
மாண்புமிகு இந்துசமய அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தருமபுரி மாவட்டம், சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

9–45 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தருமபுரி மாவட்டம் சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்குவதற்குப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்தேரி என்பது 4,000 அடிக்கு மேலே இருக்கிற ஒரு உயரமான மலைப்பகுதி. 48 கிராமங்களைக் கொண்டிருக்கிற பகுதி. அந்தப் பகுதிகளிலே, வனத்துறை

மூலம் சாலைகளை அமைத்து, அங்கே கடந்த காலங்களில் பல்லாயிரக்கணக்கான சந்தன மரங்கள் களவு போயிருப்பதைத் தடுத்து, அந்த இடங்களில் எல்லாம் வனவளத்தைப் பெருக்குகின்ற முறையில் என்னென்ன திட்டங்கள் நடைமுறைப் படுத்த இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சித்தேரி சந்தன மலை, அந்த வனக் காப்பு பகுதி, ஏற்கெனவே, ' சேன்டல்வுட் சுங்கவரி ' என்ற அளவிலே சந்தன வன பாதுகாப்புப் பகுதி என்ற அளவிலே அது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே ஏறத்தாழ ஆயிரம் ஹெக்டர் பரப்பிலே சந்தன மரங்களை வளர்ப்பதற்கு ஊக்கப்படுத்துவதற்கான திட்டம் இருக்கின்றது. கடந்த ஆண்டிலே 1989–90-ஆம் ஆண்டிலே இதற்காக ரூ. 1,53,000 செலவிடப்பட்டிருக்கின்றது. தனியார் காடுகளிலே உள்ள சந்தன மரம் முழுவதும் அரசுக்குச் சொந்தமானது என்ற ஒரு நிலை இருந்தாலும், தனியார் நிலங்களிலே வளர்ந்திருக்கக் கூடிய சந்தன மரத்திற்கு ஓரளவு, அந்த மரத்தினுடைய மதிப்பில் ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. ஆகவே ஆண்டு ஒன்றுக்கு ஒரு மரத்திற்கு 10 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை இன்னும் கூட்ட முடியுமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இறுதியிலே வெட்டுகின்ற பொழுது அந்த மரத்தினுடைய மதிப்பிலே ஒரு பகுதியை அந்த தோட்டச் சொந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டும் என்ற அளவிலே இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை அந்த பகுதியிலே அரசு வனத்துறை செயல்படுத்தி வருகின்றது.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, இப்படி அரசு ஒரு பகுதியிலே வனவளத்தைப் பெருக்குகின்ற நேரத்தில் அங்கேயிருந்து ஏராளமான சந்தனக் கட்டைகள், கார்களிலும், லாரிகளிலும் கடத்தப்படுகின்றன. அந்த வண்டிகள் எல்லாம் பறிமுதல் செயயப்பட்டு வன இலாக்கா அலுவலகத்திலே கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றன. ஆனால் வண்டிகள் ஆண்டு கணக்கிலே நிறுத்தப்படுகின்ற காரணத்தால் அதிலே இருக்கிற எஞ்சின், டயர் உட்பட எல்லாம் காணாமல் போகிறது. கடைசியிலே வெறும் தகரம் மட்டுமே மிஞ்சி இருக்கிறது. இப்படி அந்த வண்டிகள் கைப்பற்றப்பட்டவுடன் ஏலம் விடப்பட்டு அந்த பணம் அரசு கணக்கிலே வைக்கப்படுகிற அப்படிப்பட்ட நடைமுறையை தமிழக அரசு கொண்டுவருமா என்பதை அறிய விரும்புகிறேன். மலைப் பகுதியிலேயிருந்து கீழே இறங்குகிற மக்கள் அவசர கால உதவிக்கு கீழே நகரத்திற்கு வரமுடியாமல் ஆறு மணிக்கு மேல் ' செக் போஸ்ட் ' போட்டு எந்த வண்டியும் வராமல் தடுத்து விடுகிறார்கள். மருத்துவ வசதிக்காக அந்த

மலைவாழ் மக்கள் நிலப்பரப்புக்கு வர முடியாத சூழ் நிலையிருக்கிறது. எனவே, தனியாக ஒரு ஆள் போட்டு மருத்துவ வசதிக்காக அந்த மலைவாழ் மக்கள் கீழே வருவதற்கு வசதி உருவாக்கித் தருமா இந்த அரசு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை வெட்டிச் செல்வது, இந்தக் கொள்ளை, இப்பொழுது தமிழ்நாட்டு வனப் பகுதியிலே குறைந்திருக்கின்றது. வீரப்பனுடைய கொள்ளைக் கும்பல்தான் இந்தக் காரியத்திலே அதிகமாக ஈடுபட்டிருக்கின்றனர். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய காவல் துறையும், கர்நாடக மாநிலக் காவல் துறையும் ஒருங்கிணைந்து அந்த கொள்ளையனை பிடிப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்து அதை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். கூடிய விரைவிலேயே அந்தக் காரியம் நிறைவுறும் என்று நான் எதிர் பார்க்கிறேன். அதைத் தவிர இந்தக் கொள்ளைகளில் பிடிக்கப்படுகின்ற கார்களைப் பற்றி இங்கே சொன்னார்கள், ஏலம் விட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக ஒரு சட்டத் திருத்தம் தேவைப்படுகின்றது. இதை விரைவிலே நாங்கள் மத்திய அரசு அனுமதி பெற்று. கொண்டு வரவிருக்கிறோம் அதைப்போலவே பல்வேறு ஆயிரக்கணக்கான வழக்குகள், இந்த சந்தன மர வழக்குகள் நிலுவையிலே இருந்து கொண்டிருக்கின்றன. இதற்காகவும் இந்த வழக்குகளை நடத்துவதற்கு மட்டுமாக திருப்பத்தூரிலே தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட இருக்கிறது.

9-50 மணி

திரு. எம். அண்ணாமலை: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டா நிலங்களில் உள்ள சந்தன மரங்களுக்கு அந்த பட்டாதாரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். சித்தேரி மலைப் பகுதிகளில் பட்டா நிலங்களில் உள்ள சந்தன மரங்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? மேலும் அந்த பட்டா நிலங்களில் சந்தன மரங்கள் பச்சை மரங்களே வனத்துறை அதிகாரிகளால் பறிக்கப்பட்டு பறிக்கப்பட்ட மரங்களுக்கு ரசீது கேட்டதற்காக அந்த மலைவாழ் மக்கள் தாக்கப்பட்டது என்பது போன்ற புகார் ஏதேனும் வந்ததா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை இங்கே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முல்லைவேந்தன் அவர்கள் கேட்ட கேள்வியிலே ஒரு பகுதி விடப்பட்டது. அங்கே மலைவாழ் மக்கள் கீழே இறங்குகின்ற போது 6 மணிக்கு மேலே

(ஆ) அவ்வாறு வரப்பெற்ற முறையீடு தொழிலாளர் ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பேரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படை குறைந்தபட்ச ஊதியம், அகவிலைப்படி இரண்டும் சேர்த்து கணக்கிட்டு நெசவாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என நிர்வாகத்தினருக்கு அவரது சார்நிலை அலுவலர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

10-20 மணி

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு அரசு விதித்த குறைந்தபட்சக் கூலியை, கூட்டுறவுத் துறையிலே கூட இதுவரை முழுமையாக அமுல்படுத்தாத காரணத்தால் தமிழ்நாட்டிலே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

யோடு கலந்து அந்த மருந்தைக் கொண்டு வருகின்ற ஆய்வுகள் நடைபெற்று மருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும், நோய் வந்த 30 நாளிலிருந்து 90 நாள் வரை இந்த நோய் வந்திருக்கிறதா என்று தெரிவதில்லை. ஆகவே தான், நோயாளிகள் மருத்துவமனைக்கு உடனடியாகச் செல்லாமல் பெரும்பாலும் நோய் முற்றிய நிலையில் தான் மருத்துவமனைக்குச் செல்கிறார்கள். ஆரம்ப நிலையிலேயே சிம்டம்ஸ், வெளிப்பாடுகள் தெரியாத காரணத்தால் இதைக் கண்டு பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற தடுப்பு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இதை முழுமையாக அழிக்கலாமா என்ற கருத்தையும் மனதில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி

* *1372* திரு. கே. ஆர். சுந்தரம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை இன்னும் சரிவர கூட்டுறவுச் சங்கங்களும் தனியார்களும் அமுல்படுத்தாமல் இருப்பதாக அரசுக்கு முறையீடுகள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவ்வாறு வரப்பெற்ற முறையீடு தொழிலாளர் ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பேரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படை குறைந்தபட்ச ஊதியம், அகவிலைப்படி இரண்டும் சேர்த்து கணக்கிட்டு நெசவாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என நிர்வாகத்தினருக்கு அவரது சார்நிலை அலுவலர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

10-20 மணி

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு அரசு விதித்த குறைந்தபட்சக் கூலியை, கூட்டுறவுத் துறையிலே கூட இதுவரை முழுமையாக அமுல்படுத்தாத காரணத்தால் தமிழ்நாட்டிலே

1990 ஏப்ரல் 26]

24—4—1990 அன்று ஆயிரக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் மதுரை, கரூர், காஞ்சீபுரம், குடியாத்தம் பகுதிகளில் மறியல் செய்தார்கள். அந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒரு கேள்வி கேட்ட போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வதாக உறுதி கூறினார்கள். இன்று வரையிலே அது அமுலாக்கப்படவில்லை. கூட்டுறவுத் துறையிலே அமுலாக்கப்படாத காரணத்தால் தனியாரும் அதை அமுலாக்கவில்லை. இனியாவது அதை அமுலாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் கைத்தறி நெசவாளர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர் சங்கங்களாக இருந்தாலும் கூட, இந்தக் குறைந்த பட்ச ஊதியம் கொடுக்க வேண்டுமென்று தொழிலாளர் துறையின் சார்பாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மறுத்து பல்வேறு காரணங்களைக் கூறினாலும், அதை எல்லாம் மறுத்து, குறைந்தபட்ச ஊதியத்தை நீங்கள் தந்தாக வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சில தனியார்கள், அந்தந்தப் பகுதியிலே இருக்கிறவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் தரவில்லை என்றால் அங்கே இருக்கின்ற நெசவாளர்கள் தொழிலாளர் நலத் துறையின் ஆணையரிடமோ அல்லது ஆய்வரிடமோ தெரிவித்தால், உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குச் சேர வேண்டிய தொகையை இந்தத் துறை சார்பாக வாங்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக உமையாம்பாள் டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்தும், பாஸ்கரன் லுங்கி கம்பெனியிடமிருந்தும், மற்றொரு கம்பெனியிடமிருந்தும்—3 கம்பெனிகளிடமிருந்து, அங்கே வேலை செய்யும் தொழிலாளர்கள் எங்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் வேண்டுமென்று தொழிலாளர் துறையிடம் கேட்டு, அவர்களிடமிருந்து—முறையே 6,084 ரூபாயும், 8,285 ரூபாயும், 8,948 ரூபாயும் அவர்களுக்கு அவார்டாக வாங்கித் தரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் சார்பாக இருக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அரசின் செயலாளர் அவர்கள் இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தை அங்கே நாம் அமுல்படுத்துவோமானால் அத்தனை சங்கங்களும் செயல்படாமல் போய்விடுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிற காரணம், இந்தத் துறையின் சார்பாக பல்வேறு சலுகைகள் அவர்களுக்குத் தரப்படுகின்றன என்று தெரிவிக்கிறார்கள். அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தருகிறோம். அவர்

களுக்குத் தொழில் செய்ய பல்வேறு உதவிகளைச் செய்யும் காரணத்தால் சங்கத்திலே இருக்கிற உறுப்பினர்களே அந்தச் சங்கத்திற்கு சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். இந்தக் குறைந்தபட்ச ஊதியம் அவர்களுக்குத் தரப்படுமானால் சங்கம் சரியாக செயல்படாது என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லியிருந்தாலும் கூட தொழிலாளர் ஆணையர் அரசின் சட்டப்படி குறைந்தபட்ச ஊதியம் அவர்களுக்குத் தர வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்களே தவிர அவர்களுக்குத் தனியாக எதுவும் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தனியார் துறையிலே வேலை செய்கிறவர்களுக்கு இந்தக் கூலி கிடைக்காமல் இருந்தால், அதற்காக நடவடிக்கை எடுத்து, வேண்டிய உதவிகளைப் பெற்றதாகச் சொல்லுகிறார்கள். நான் வற்புறுத்துவது, அரசு போட்ட உத்தரவை, அரசுத் துறையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களே அமுலாக்கவில்லை. அந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள் அதைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் துறை அதிகாரிகளே அதை அமுலாக்க மறுக்கிறார்களே, அப்படி என்று சொன்னால் இந்தக் கூலியை நிர்ணயிக்கும் போது இவைகளை எல்லாம் பரிசீலிக்கவில்லையா? பரிசீலித்த பிறகு தான் இது அமுலாக்கப்பட்டது. நீண்ட காலம் குழுக்கள் அமைத்து, பரிசீலனை செய்து, விசாரணை செய்ததற்குப் பிறகு தான் இது அமுலாக்கப்பட்டது. எனவே அதை அதிகாரிகள் அமுலாக்கப் போகிறார்களா அல்லது அவர்களே தனியாக ஒன்றை அமுலாக்கப் போகிறார்களா என்பது தான் கேள்வி. ஆகவே அரசு எடுக்கும் முடிவுகளை அதிகாரிகள் அமுலாக்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு....(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லி இருக்கிறேன். தொழிலாளர் துறை சார்பாக குறைந்த பட்ச ஊதியத்தை அரசுத் துறையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும் தந்தாக வேண்டுமென்றுதான் சொல்லி இருக்கிறோமே ஒழிய அவர்களுக்குத் தனி எக்சம்ஷன் தரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியும் முக்கியம், அதை விட நேரமும் முக்கியம்.

1990 ஏப்ரல் 26]

தனியார் துறையில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள்.

*5588 திரு. இளம்வழுதி: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தனியார் துறையில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று பிறப்பிக்கப் பட்ட அரசு ஆணையை எதிர்த்து தனியார் துறை முதலாளிகள் நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கி இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தனியார் துறையில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று அரசால் ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. ஆனால், துப்புரவுத் தொழிலாளர்களை ஒப்பந்த முறையில் பணி நியமனம் செய் வதை 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப் படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின்கீழ் தடை செய்து அரசு ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையை எதிர்த்து சில நிர்வாகிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்றிருக்கின்றார்கள்.

(ஆ) அந்த ரிட் மனுக்களுக்கு எதிராக அரசுத் தரப்பில் எதிர் உறுதி வாக்குமூலம் (Counter affidavit) தயார் செய்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய, அரசு வழக்குரைஞர் அவர் களுடன் கலந்து, அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10-25 மணி

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இது குறித்து அண்மையில் ஆல் இந்தியா லேபர் கமிஷனர்ஸ் கான்ஃபரன்சும், ஆல் இந்தியா லேபர் மினிஸ்டர்ஸ் கான்ஃபரன் சும் நடைபெற்றது. அதிலே அமைச்சர் அவர்கள் இதுபற்றி விவாதித்து இருக்கிறார்கள். இது குறித்து மத்திய அரசு சட்டம் கொண்டு வருமா? கொண்டு வந்தால் அதை இந்த அரசு அமல் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆல் இந்தியா லேபர் மினிஸ்டர்ஸ் கான்ஃபரன்சும் அதற்கு மறுநாள் ஆல் இந்தியா லேபர் கமிஷன்ர்ஸ்கான்ஃபரன்சும்

டில்லியில்நடைபெற்றது. அதில் தமிழ்நாடு அரசின் சார்பாக நான் கலந்து கொண்டேன். பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப் பட்டன. முக்கியமாக நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கு என்று ஒரு விவாதமும், அதன் பிறகு தற்காலிகத் தொழிலாளர் களை நிரந்தரப்படுத்துவதற்கு சட்டம் போட வேண்டும் என்றும், இதுபோல பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் விவாதித்து, மத்திய அரசு இதற்கான தனி ஆணை பிறப்பிக்க இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு அப்படி ஆணை பிறப்பிக்குமானால் தற்காலிகப் பணியாளர் களை நிரந்தரப்படுத்துவதற்கு நமக்கு அது வகையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, இன் னொரு முக்கியமான கேள்வி. ஈ. எஸ். ஐ., பி.எப், பென்ஷன் பெனிஃபிட்ஸ் போன்ற அடிப்படை வசதிகள் எல்லாம் இன்றைக்கு ஏழைத் துப்புரவுத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் செய்வ தற்காக ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு வேலைக்கு ஆட்களை ஏற்பாடு செய்துவிடுகிறார்கள். இதனால் சம்பந்தப்பட்ட ஒப்பந் தக்காரர்தான் கொள்ளை லாபம் அடைகிறார்களே தவிர, தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய உரிமைகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு வேலைக்கு தனியார் நிறுவனங்கள் அமைக்கும் ஏற் பாட்டைத் தடுக்க சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் இவர்களுக்காகப் போடப்பட்டு இருக்கின்றது. 50 பேர்களுக்கு மேல் வேலை செய் கின்ற இடத்தில் துப்புரவுத் தொழிலாளர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுவார்களேயானால் அது கூடாது என்று சட்டம் அரசின் சார்பாகப் போடப்பட்டு, அதில் 10 இடங்களிலே ஆய்வு செய்யப்பட்டு, இந்த அரசின் சட்டத்தை எதிர்த்து 10 கம்பெனி கள் கோர்ட்டிலே தடை உத்தரவு பெற்று இருக்கிறார்கள். அந்த 10 கம்பெனிகள் தவிர மற்ற இடங்களில் சட்டம் அமல்படுத்தப் பட்டு இருக்கின்றது. இதில் ஒரு சங்கடம் என்னவென்றால் தற்காலிகப் பணியாளர்களை நீக்க வேண்டுமென்று நமது தொழி லாளர் நலத் துறை நடவடிக்கை எடுத்தால், அவர்களை உடனடி யாக வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். தற்காலிகப் பணி யாளர்களை நீக்காமல் இருக்க நமது அரசிடம் சட்டம் இல்லை. அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று சட்டம் இருந்தால் அவர்களுக்கு உடனடியாக அரசு உதவும். அதற்காகத்தான் மத்திய அரசிலே இப்போது நடைபெற்ற கூட்டங்களிலே முடிவு செய்து இருக்கிறார்கள். இதற்காக ஒரு தனிச் சட்டம் கொண்டு

வருவதற்காக முடிவு செய்து இருக்கிறார்கள். அப்படி அது கொண்டுவரப்படுமானால் அவர்கள் அத்தனை பேரும் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

(அ) ராதாபுரம் தொகுதியில் வட்டவிளை கிராமத்தில் ஒரு பெண் கொல்லப்பட்டது தொடர்பாக காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில் விமலா என்ற ஒரு பெண்மணி கொல்லப்பட்டு, காவல் துறையினர் சரிவர நடவடிக்கை எடுக்காத ஒரு சூழ்நிலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் அந்த ஊரில் இருக்கக்கூடிய பெரிய தனக்காரர் ஒருவருடைய மகனைக் காதலித்ததாகவும், அந்தக் காதலை விரும்பாத அந்தப் பெரிய மனிதர் ஆட்களை வைத்து அடித்து, அரளிக் கொட்டையை அரைத்து வாயிலே ஊற்றி தூக்கிப் போட்டுவிட்டதாகவும் அவருடைய தாயார் பஞ்சவர்ணத்தம்மாள் நேரில் இங்கே வந்து சொல்லிச் சென்று இருக்கிறார்கள். ஆகவே அதில் காவல் துறையினர் முறையாக உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று, அந்தத் தாயார் பஞ்சவர்ணத்தை மிரட்டி இனிமேல் வந்து எதுவும் சொல்லக் கூடாது என்றும் அனுப்பியதாகவும் சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆவன செய்து உரிய நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைத் தண்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் பாப்பா உமாநாத் அவர்கள் கூறிய இந்தத் தகவல் பற்றி விசாரித்து அறிந்ததில் வட்டவிளை கிராமம், ராதாபுரம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தென்கிழக்கே உள்ள கிராமம் ஆகும். அந்த கிராமத்தில் சுப்பிரமணிய நாடார் மகள் விமலா என்ற

வருவதற்காக முடிவு செய்து இருக்கிறார்கள். அப்படி அது கொண்டுவரப்படுமானால் அவர்கள் அத்தனை பேரும் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

(அ) ராதாபுரம் தொகுதியில் வட்டவிளை கிராமத்தில் ஒரு பெண் கொல்லப்பட்டது தொடர்பாக காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில் விமலா என்ற ஒரு பெண்மணி கொல்லப்பட்டு, காவல் துறையினர் சரிவர நடவடிக்கை எடுக்காத ஒரு சூழ்நிலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் அந்த ஊரில் இருக்கக்கூடிய பெரிய தனக்காரர் ஒருவருடைய மகனைக் காதலித்ததாகவும், அந்தக் காதலை விரும்பாத அந்தப் பெரிய மனிதர் ஆட்களை வைத்து அடித்து, அரளிக் கொட்டையை அரைத்து வாயிலே ஊற்றி தூக்கிப் போட்டுவிட்டதாகவும் அவருடைய தாயார் பஞ்சவர்ணத்தம்மாள் நேரில் இங்கே வந்து சொல்லிச் சென்று இருக்கிறார்கள். ஆகவே அதில் காவல் துறையினர் முறையாக உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று, அந்தத் தாயார் பஞ்சவர்ணத்தை மிரட்டி இனிமேல் வந்து எதுவும் சொல்லக் கூடாது என்றும் அனுப்பியதாகவும் சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆவன செய்து உரிய நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைத் தண்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் பாப்பா உமாநாத் அவர்கள் கூறிய இந்தத் தகவல் பற்றி விசாரித்து அறிந்ததில் வட்டவிளை கிராமம், ராதாபுரம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தென்கிழக்கே உள்ள கிராமம் ஆகும். அந்த கிராமத்தில் சுப்பிரமணிய நாடார் மகள் விமலா என்ற

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 26

10–30 மணி

17 வயதுப் பெண் தன்னுடைய தாயான பஞ்சவர்ணம் என்பவரோடு வசித்துவருகிறாள். சுப்பிரமணிய நாடார் பனையேறும் தொழிலுக்காகப் பாண்டிச்சேரி சென்று விட்டார். விமலா ப்ளஸ்2 தேர்விலே தோல்வியடைந்ததால் வள்ளியூரிலுள்ள தனியார் டுட்டோரியல் காலேஜில் பயின்று வந்துள்ளார்.

விமலாவுக்கும் வட்டவிளை அருகிலே உள்ள உதயத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ராஜாத்தேவர் என்ற இசக்கித்தேவர் அவர்களுடைய மகன் வேம்புராஜா என்பவருக்கும் இடையே ஒன்றரை ஆண்டுக் காலமாகக் காதல்அரும்பி, மலர்ந்து இருக்கிறது. இவர்களுடைய இரகசியத் தொடர்பை அறிந்த ராஜாத்தேவர், விமலாவின் தாயான பஞ்சவர்ணத்திடம் விமலா—வேம்புராஜா உறவு நிறைவேறாது என்று தன் அதிருப்தியை வெளியிட்டிருக்கிறார்.

இருப்பினும் இரண்டு மாதங்களுக்கு முன்பாக, வேம்புராஜா பஞ்சவர்ணத்திடம் அவரது மகள் விமலாவைத் தனக்கு மணம் செய்து தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதற்கு பஞ்சவர்ணம், வேம்புராஜாவிடம், அவருடைய தந்தையின் சம்மதத்தைப் பெற்று வருமாறு சொல்லியிருக்கிறார்.

இதற்கிடையே தன்னுடைய காதல் கைக்கூடாது என்பதை அறிந்த விமலா 18—2—1990-ல் தன்னுடைய தாயாரிடம், குறும்பூர் பக்கத்தில் உள்ள அரங்கத்திவிளையில் உள்ள தன் அக்கா வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றுள்ளார். 20-ஆம் தேதி காலை சுமார் 10 மணிக்கு உதயத்தூரிலுள்ள இசக்கியம்மன் கோயில் பக்கம் சுய நினைவு இல்லாமல் விமலா கிடப்பதை ஒரு துப்புரவுத் தொழிலாளி பார்த்து, பஞ்சவர்ணத்திடம் தகவல் கூறியிருக்கிறார்.

உடனே பஞ்சவர்ணம் தன்னுடைய மகளைப் பேருந்தில் ஏற்றி, ராதாபுரம் காவல்நிலையத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். விமலா ஆபத்தான நிலையில் இருந்ததால் காவலர்கள் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு விமலாவைச் சிகிச்சைக்குக் கொண்டு செல்லும்படி அறிவுரை கொடுத்து—ஆனால் மருத்துவமனையிலே விமலா இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

20 ஆம் தேதி மாலை 4 மணிக்கு விமலாவின் தாயார் பஞ்சவர்ணம் தந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ராதாபுரம் காவல் நிலையத்திலே வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதுவரையிலே அந்த விசாரணையையொட்டி வந்துள்ள தகவல், விமலா தன்னுடைய காதல் ஈடேறாது என்ற கவலையிலே அரளிக் கொட்டையை சாப்பிட்டு இறந்ததாகத் தெரிய வந்துள்ளது. ஆனால், அம்மையார் அவர்கள் கொலை செய்துவிட்டு அவர்கள் அரளி விதை சாப்பிட்டதாக ஒரு கதை ஜோடிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் காதல் கதையினுடைய கொடுமைகளையும் பயங்கர விளைவுகளையும் பார்க்கும்பொழுது பாரதியாருடைய பாட்டுத்தான் ஞாபகத்திற்கு வருகிறது.

'' நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்,

ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்;

பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய்கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க

மூடரெல்லாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுக்கின்றாரே ''

என்ற பாரதியாருடைய பாடல்தான் ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால் பாரதியாரைப் போற்றித் துதிக்கின்ற தமிழகத்தில், பாரதியார் சொன்ன அந்த வார்த்தைகள் என்ன காரணத்தாலோ எடுபடாமல் இதுபோன்ற காதல் கொலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. காதல் கொலையா, காதல் தற்கொலையா என்பதை அரசு காவல்துறை மூலமாகத் தொடர்ந்து ஆராயும் என்ற உறுதியை மாத்திரம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : திருமதி நல்லதம்பி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : திருமதி நல்லதம்பி அவர்களும் இதுபற்றிக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி அவர்களும் இது தொடர்பாகக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது பதிவில் இருக்கிறது. அவர்களுடைய பெயரும் பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் காதல் சோகச் சித்திரத்தில் ரமணி நல்லதம்பியினுடைய பெயரும் இணைக்கப்படுகிறது. (சிரிப்பு).

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெண்ணுக்கும் அந்தப் பையனுக்கும் விருப்பம் இருந்தது, அவர்களிடையே தொடர்பு இருந்ததெல்லாம் உண்மை. அவர்கள் இருமுறை வீட்டை விட்டுச் சென்று தனியாக அந்தப் பையனுடைய இல்லத்திற்குச் சென்று காவல் நிலையத்திலே இந்தப் பெண்ணின் தாயாரும் தகப்பனாரும் அந்தப் பையனின் தகப்பனாரும் புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. அந்தச் சம்பவம் நடந்த அன்றைக்கும் அந்தப் பெண் வந்து அந்த பஸ் நிலையத்திலே இறங்கியவுடன் அவன் அழைத்துச் சென்று அங்கே அவனுடைய பம்புசெட்டிலே அவர்கள் இரண்டு நாட்கள் தங்கி இருந்திருக்கிறார்கள். குளித்துவிட்டு, ஈரத் துணிகளை அவர்கள் அந்தப் பைப்பிலே வைத்திருந்ததற்கெல்லாம், சாட்சிகள் இருக்கின்றன. அந்தப் பையனுடைய தோட்டத்திற்கு அருகிலே தான்அந்த உடம்பு கிடந்திருக்கின்றது. அதைப் பலர் பார்த்திருக்கின்றார்கள். அப்படி நிறையக் கடிதங்களெல்லாம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தாயாரிடமும் அந்தக் கடிதங்கள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் இருவரும் எழுதிக்கொண்ட கடிதங்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 174 போட்டு தற்கொலை என்று முடிப்பது தவறு. இன்றைக்குச் சட்டத்திலே இப்படிப்பட்ட கொலைகள், பெண்களுக்கு இழைக்கப்படக் கூடாது, கொடுமைகள் வரக்கூடாது என்பதற்காக Setcion 306 Compelled to Commit Suicide என்ற செக்ஷனிலேயாவது போட வேண்டுமென்ற நிலை இருக்கின்றது. அதை வலியுறுத்தி, அந்த செக்ஷனிலாவது போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

10-35 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படி போலீசார் ஒரு தவறான முடிவிற்கு வேண்டுமென்று வந்திருப்பார்களானால், நிச்சயமாக மறு விசாரணை நடத்தி உண்மை மக்களுக்குத் தெளிவாக்கப்படும்.

(ஆ) இராஜபாளையம் வட்டம், வடக்கு மங்கநல்லூர் கிராமத்தில் சலவைத் தொழிலாளர்கள் குடியிருந்து தொழில் செய்யும் இடத்தில் சாராயத் தொழிற்சாலை கட்ட நடவடிக்கை எடுப்பதால் அம் மக்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்பு குறித்து.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இராஜபாளையம் தாலுக்கா, வடக்கு மங்கநல்லூர் கிராமத்தில் 400-க்கு மேற்பட்ட சலவைத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக குடும்பமாக தொழில் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழிலுக்கான 'டோபி கானா' மாதிரி அந்த இடத்

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெண்ணுக்கும் அந்தப் பையனுக்கும் விருப்பம் இருந்தது, அவர்களிடையே தொடர்பு இருந்ததெல்லாம் உண்மை. அவர்கள் இருமுறை வீட்டை விட்டுச் சென்று தனியாக அந்தப் பையனுடைய இல்லத்திற்குச் சென்று காவல் நிலையத்திலே இந்தப் பெண்ணின் தாயாரும் தகப்பனாரும் அந்தப் பையனின் தகப்பனாரும் புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. அந்தச் சம்பவம் நடந்த அன்றைக்கும் அந்தப் பெண் வந்து அந்த பஸ் நிலையத்திலே இறங்கியவுடன் அவன் அழைத்துச் சென்று அங்கே அவனுடைய பம்புசெட்டிலே அவர்கள் இரண்டு நாட்கள் தங்கி இருந்திருக்கிறார்கள். குளித்துவிட்டு, ஈரத் துணிகளை அவர்கள் அந்தப் பைப்பிலே வைத்திருந்ததற்கெல்லாம், சாட்சிகள் இருக்கின்றன. அந்தப் பையனுடைய தோட்டத்திற்கு அருகிலே தான்அந்த உடம்பு கிடந்திருக்கின்றது. அதைப் பலர் பார்த்திருக்கின்றார்கள். அப்படி நிறையக் கடிதங்களெல்லாம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தாயாரிடமும் அந்தக் கடிதங்கள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் இருவரும் எழுதிக்கொண்ட கடிதங்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 174 போட்டு தற்கொலை என்று முடிப்பது தவறு. இன்றைக்குச் சட்டத்திலே இப்படிப்பட்ட கொலைகள், பெண்களுக்கு இழைக்கப்படக் கூடாது, கொடுமைகள் வரக்கூடாது என்பதற்காக Setcion 306 Compelled to Commit Suicide என்ற செக்‌ஷனிலேயாவது போட வேண்டுமென்ற நிலை இருக்கின்றது. அதை வலியுறுத்தி, அந்த செக்‌ஷனிலாவது போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

10-35 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படி போலீசார் ஒரு தவறான முடிவிற்கு வேண்டுமென்று வந்திருப்பார்களானால், நிச்சயமாக மறு விசாரணை நடத்தி உண்மை மக்களுக்குத் தெளிவாக்கப்படும்.

(ஆ) இராஜபாளையம் வட்டம், வடக்கு மங்கநல்லூர் கிராமத்தில் சலவைத் தொழிலாளர்கள் குடியிருந்து தொழில் செய்யும் இடத்தில் சாராயத் தொழிற்சாலை கட்ட நடவடிக்கை எடுப்பதால் அம் மக்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்பு குறித்து.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இராஜபாளையம் தாலுக்கா, வடக்கு மங்கநல்லூர் கிராமத்தில் 400-க்கு மேற்பட்ட சலவைத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக குடும்பமாக தொழில் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழிலுக்கான 'டோபி கானா' மாதிரி அந்த இடத்

1990 ஏப்ரல் 26] [திரு. கே. ரமணி]

தில் அமைத்து அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 7 ஏக்கர் 73 செண்ட் நிலம். அந்த நிலத்தில் தான் அந்தக் குடும்பங்கள் 'டோபி கானா' அமைத்து தொழில் செய்து வாழ்கிறார்கள்.

அந்த இடத்தில் ஒரு புதிய சாராய வடிப்புத் தொழிற்சாலை உருவாக்க வேண்டுமென்று அரசின் சார்பில் ஏற்பாடு நடப்பதாகச் சொல்லி, அங்கேயிருக்கிற தாசில்தாரும், போலீசாரும் அந்த இடத்தில் தொழிற்சாலை கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிந்து, அந்த மக்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தாங்கள் பரம்பரையாக அனுபவித்து வருகிற அந்த இடத்தில், அதற்கு பக்கத்திலோ அல்லது அதற்குள்ளோ இந்த மாதிரி தொழிற்சாலை வந்தால் அந்தப் பகுதியில் 'என்விரான்மெண்ட்டல் பொல்லூஷன்' சுற்றுச் சூழல் கெட்டு அங்கே அவர்கள் தொழில் செய்ய முடியாத மோசமான நிலை ஏற்படும் என்று வழக்காடி, அவர்களுக்கு தடையுத்தரவு கொடுக்கப்பட்டது. அந்த தடையுத்தரவு வந்த பிறகும், அங்கேயிருக்கிற பெரிய மனிதர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் உட்பட போலீசாருக்கு எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கொடுமையை செய்யக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால், அதைக் கேட்காமல் சம்பந்தப்பட்ட தாசில்தார் போலீசார் உதவியைக் கொண்டு 18-4-1990 தேதியன்று அந்த இடத்திற்குச் சென்று அவர்கள் வெள்ளாவி வைக்கிற பாத்திரங்கள் உட்பட அனைத்தையும் உடைத்து எறிந்து, சுற்றி இருக்கிற கம்பி வேலிகளைப் பிடுங்கி எறிந்து, அந்த இடத்தில் அவர்கள் தொழில் செய்ய முடியாமல் அவர்களை அடித்து, துன்பப்படுத்தி, அவர்கள் தொழில் செய்ய வாய்ப்பில்லாமல், தொழிற்சாலை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர்களிடமிருந்து தந்திகள் வந்திருக்கின்றன. அந்த தந்திகளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அந்த இடத்தில் 'டோபி கானா' -வில் 400 குடும்பங்கள் வாழ, தொழில் செய்ய வழி செய்யவேண்டும். சாராயத் தொழிற்சாலைக்கு, பக்கத்தில் வேறு எங்காவது ஒரு நல்ல இடத்தைப் பார்த்து அதைக் கொண்டு செல்ல இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஒரு பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுகுறித்து திரு. ரமணி அவர்கள் ஏற்கெனவே என்னிடத்தில் அவர்களுக்கு வந்துள்ள தந்திகளை வழங்கினார். நான் அதைப் பற்றி உடனடியாக விசாரித்த அளவில், இத்தகைய தொழிற்சாலைக்கு பல இடங்கள் பல்வேறு பகுதிகளில் டம் பார்க்கப்படுகின்றன. அப்படி ஒரு இடமாக அந்த இடமும் பார்வையிடப்பட்டது. ஆனால் இப்போது அந்தத் தொழிற்சாலையை அங்கே அமைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்பதை திரு. ரமணி அவர்களும், அந்த சலவைத் தொழிலாளர்களும் மகிழ்ச்சி அடையும் வகையில் அறிவித்துக் கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 26

*திரு. எஸ்.ஆர். இராதா : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக எனக்கும் தந்தி வந்தது. தேவையில்லாமல் நடவடிக்கை எடுத்து, அவர்களை அப்புறப்படுத்தி, அவர்களுடைய உடைமைகளை எல்லாம் பாழ்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் விசாரித்த வரையில் அப்படி அந்த அளவிற்கு, யாருக்கும் சேதாரம் ஏற்படவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. அப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. ரமணி அவர்களும் சொன்னது உண்மையாக இருக்குமானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று பாரதப் பிரதமரிடம் 25-4-1990 ஆம் நாளன்று அளித்த மனுவிலுள்ள வாசகங்கள் பற்றிப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் குறித்து.

10-40 மணி.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, காவிரி நதி நீர் பங்கீட்டு விவகாரம் தமிழகத்தினுடைய கவனத்தை ஈர்த்து இருக்கிறது. அது நம்முடைய மொத்தமான கவலைக்குரிய பிரச்சினையாக மாறி இருக்கிறது என்பதை நாம் அறிவோம். நம்மிடையே இந்தப் பிரச்சினை குறித்து ஒரு ஒருமித்த கருத்தும், ஒருங்கிணைந்த அணுகுமுறையும் தேவை என்பதால் யாருக்கும் இதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், பத்திரிகையில் இன்றைக்கு வந்திருக்கிற சில செய்திகள் நமக்கு கவலையூட்டுவதாக அமைந்திருக்கின்றன. நேற்றையதினம் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து ஒரு மகஜரை சமர்ப்பித்ததைக் குறித்து செய்தி இன்றைக்கு சில பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதுவும் குறிப்பாக இந்து பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி எங்களுக்கு எல்லாம் கவலையூட்டுவதாக அமைந்திருக்கிறது. அதிலே ஒரு வாசகம் The memorandum noted that the agreement on sharing of waters between Tamil Nadu and Karnataka had ended in 1974.
1974-லே இந்த ஒப்பந்தம் முடிவுற்றுவிட்டது என்று ஒரு வாசகம், அந்த மகஜரிலே குறிக்கப்பட்டு இருப்பதாக இன்றைக்கு இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. 1924-லே இந்த ஒப்பந்தம் இரண்டு மாநிலங்களுக்கும் இடையே நிறைவுபடுத்தப்பட்டபோது, 1974-லே 50 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஒப்பந்தத்தினுடைய சில ஷரத்துக்கள் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்,

*திரு. எஸ்.ஆர். இராதா : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக எனக்கும் தந்தி வந்தது. தேவையில்லாமல் நடவடிக்கை எடுத்து, அவர்களை அப்புறப்படுத்தி, அவர்களுடைய உடைமைகளை எல்லாம் பாழ்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் விசாரித்த வரையில் அப்படி அந்த அளவிற்கு, யாருக்கும் சேதாரம் ஏற்படவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. அப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. ரமணி அவர்களும் சொன்னது உண்மையாக இருக்குமானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று பாரதப் பிரதமரிடம் 25-4-1990 ஆம் நாளன்று அளித்த மனுவிலுள்ள வாசகங்கள் பற்றிப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் குறித்து.

10-40 மணி.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, காவிரி நதி நீர் பங்கீட்டு விவகாரம் தமிழகத்தினுடைய கவனத்தை ஈர்த்து இருக்கிறது. அது நம்முடைய மொத்தமான கவலைக்குரிய பிரச்சினையாக மாறி இருக்கிறது என்பதை நாம் அறிவோம். நம்மிடையே இந்தப் பிரச்சினை குறித்து ஒரு ஒருமித்த கருத்தும், ஒருங்கிணைந்த அணுகுமுறையும் தேவை என்பதால் யாருக்கும் இதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், பத்திரிகையில் இன்றைக்கு வந்திருக்கிற சில செய்திகள் நமக்கு கவலையூட்டுவதாக அமைந்திருக்கின்றன. நேற்றையதினம் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து ஒரு மகஜரை சமர்ப்பித்ததைக் குறித்து செய்தி இன்றைக்கு சில பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதுவும் குறிப்பாக இந்து பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி எங்களுக்கு எல்லாம் கவலையூட்டுவதாக அமைந்திருக்கிறது. அதிலே ஒரு வாசகம் The memorandum noted that the agreement on sharing of waters between Tamil Nadu and Karnataka had ended in 1974.
1974-லே இந்த ஒப்பந்தம் முடிவுற்றுவிட்டது என்று ஒரு வாசகம், அந்த மகஜரிலே குறிக்கப்பட்டு இருப்பதாக இன்றைக்கு இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. 1924-லே இந்த ஒப்பந்தம் இரண்டு மாநிலங்களுக்கும் இடையே நிறைவுபடுத்தப்பட்டபோது, 1974-லே 50 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஒப்பந்தத்தினுடைய சில ஷரத்துக்கள் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்,

1990 ஏப்ரல் 26] **[திரு. எம். அப்துல் லத்தீப்]**

50 ஆண்டுகளுக்குப் பிறகு உருவாகிற நிலைமையை அனுசரித்து என்றுதான் அதிலே ஒரு ஷரத்து இடம் பெற்றிருக்கிறது. ஆனால் 1924-லே நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தில் 50 வருடங்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் தானாக காலாவதியாகிவிடும் என்ற ஒரு ஷரத்தை அதிலே நாம் காண முடியாது. ஒப்பந்தம் தொடர்கிறது. ஆனால் சில ஷரத்துக்கள் தான் அதிலே 50 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு உருவாகும் புதிய சூழ்நிலையை அனுசரித்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்பதற்கான முறையான ஒரு ஷரத்து அதிலே இணைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் 1974-லே கர்நாடகம் மேற்கொண்ட நிலை, இது காலாவதியாகிவிட்டது என்பது கர்நாடகத்தினுடைய நிலையாகும். தமிழகத்தினுடைய நிலை இந்த ஒப்பந்தம் காலாவதியாகவில்லை, அது தொடர்கிறது, அதனுடைய ஷரத்துக்களில் சிலவற்றைத்தான் நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமே தவிர காலாவதியாகக்கூடாது என்பது தமிழகத்தினுடைய தொடர்ந்த நிலையாகும். ஆனால் கர்நாடகம் மேற்கொண்ட நிலை, 1974 இலே இந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது, என்பது அதனுடைய நிலை. இன்றைக்குப் பிரதமருக்குக் கொடுத்த இந்த மகஜரில் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களே 1974-லே இந்த அக்ரிமெண்ட் என்டட் என்ற ஒரு வாசகத்தை அவர்கள் இணைத்து பிரதமரிடத்திலே கொடுத்து இருப்பது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் இந்த ஒப்பந்தங்களைப் பொறுத்த வரையில், வாக்கியங்களையும், சொற்களையும் வைத்து வியாக்கியானம் செய்கின்ற ஒரு நிலை, அக்ரிமென்ட் என்று சொன்னாலே, அதிலே பயன்படுத்தப்பட்டு இருக்கிற வாக்கியங்கள், சொற்கள் இவைகளை வைத்துத்தான் வியாக்கியானங்களைச் செய்து ஒப்பந்தத்தினுடைய சட்டபூர்வமான நிலையை நாம் நிலைநிறுத்த முடியும். அப்படி இருக்கும்போது, ஒப்பந்தத்தில் குறிக்கப்படாத ஒன்றை, நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், மாநிலத்தினுடைய பிரதிநிதித்துவத்தை வகிக்கிறோம் என்று பாராளுமன்றத்திலே பணியாற்றுகிற ஒரு சிலர் இத்தகைய ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தி, இந்த ஒப்பந்தம் முடிவுற்று, காலாவதியாகிவிட்டது என்று சொல்வது, தமிழகத்திற்கு மிகப் பெரிய பாதகம் மட்டுமல்ல, கர்நாடகத்தினுடைய நிலைக்கு அவர்களாகவே சென்று ஆக்கம் கொடுக்கின்ற ஆதரவு கொடுக்கின்ற வகையில், இது நடந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, வெளியிலே சொல்லப்படுகிற சில கருத்துக்கள் கூட அப்படியே அமைந்துவிடுவதும் துர்பாக்கியமானதாகும். இதைக் குறித்து நம்முடைய பிரதான எதிர்க் கட்சியினுடைய துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் கூட இதே நிலையைத்தான் மேற்கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றிய கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து அரசாங்கத்தினுடைய நிலை என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக, இது முக்கியமானது என்பதால், இதைச் சொல்கிறேன்.

"We hold Mr. Karunanidhi and the D.M.K. Government responsible for failure to renew the Cauvery agreement that ended in 1974."

இந்த ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில், இந்த அக்ரிமெண்டைப் பொறுத்தவரையில், அது நீடிக்கிறது. சில ஷரத்துக்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது ஒன்று. இந்த ஒப்பந்தம் 1974-லே மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். அதுதான் ஒப்பந்தத்தினுடைய நிலை. 1974-லே மறுபரிசீலனை செய்யப்படவேண்டிய இந்த ஒப்பந்தத்தைக் குறித்து அன்று இருந்த அரசு, நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், அன்று இருந்த அரசுக்கோ, முதலமைச்சருக்கோ வக்காலத்து வாங்க வேண்டும் என்று....

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதிலே ஒரு திருத்தம். ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று கூட கிடையாது. நேற்றுகூட காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள்.

"Review" என்பதற்கும், "Renewal" என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. "Reconsider" என்று இருக்கிறது. ஒப்பந்தம் முழுவதும் "Reconsider" அல்ல. ஒப்பந்தத்திலே உள்ள ஒரு 4 கிளாஸ், அதைத்தான் "Reconsider" செய்யப்பட வேண்டும் என்று இருக்கிறது. ஒப்பந்தம் It is a permanent one. அது என்றைக்கும் நிலையான ஒன்று, ஒப்பந்தம். அது முடிந்து விட்டது, காலாவதியாகிவிட்டது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது ஒரு பழியைச் சுமத்துவதற்காக, தங்களை அறியாமலேயே தமிழகத்தை சில பேர்கள் கர்நாடகத்திற்குக் காட்டிக் கொடுத்து விடுகிறார்கள்.

10-45 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : அரசியல் கூடாது என்பதற்காகத் தான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஒப்பந்தம் நீடிக்கிறது. ஆனால் அதனுடைய சில ஷரத்துக்களை அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல, 4 ஷரத்துக்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். 1974-லே அது மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். அன்று 1974-லேயிருந்து இங்கிருந்த அரசு தொடர்ந்து அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டது. 1975 ஆம் ஆண்டு வரையில் இருந்த அரசு பேச்சுவார்த்தையில் தொடர்ந்து தன்னுடைய முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தது. அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சி

இல்லாமல் ஆகிவிட்ட நிலை. அதற்குப் பிறகு வந்தவர்களாவது நீண்டகாலமாக ஆட்சி செய்து கொண்டிருந்தவர்கள் இது தொடர்பாக ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கலாம். ஆனால் அது எல்லாம் இப்போது பிரச்சினை இல்லை. நான் அந்த அரசியல் பிரச்சினைக்கு எல்லாம் போகவில்லை. ஒரு கட்சியைக் குறை சொல்ல வேண்டுமென்பதற்காக மிக பார தூரமான தீய விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு கருத்தை இந்த ஒப்பந்தமே காலவாதியாகிவிட்டது என்ற ஒரு கருத்தைச் சொல்வது ஏற்புடையதல்ல என்ற காரணத்தினாலே நான் அதுகுறித்து அரசாங்கத்தினுடைய விளக்கங்களை, தெளிவுகளை எதிர் பார்ப்பதோடு இது தொடர்பான விஷயத்தில் எல்லா கட்சிகளும் கொஞ்சம் அரசாங்கம் தொடர்பான முறையிலே தங்களுடைய கருத்துக்களை, தங்களுடைய முடிவுகளை, சமர்ப்பிக்கின்ற மகஜர்களில் சமர்ப்பிக்குமேயானால், இத்தகைய வாசகங்களைப் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலையும் உருவாகாது, இந்தக் குறைகளும் ஏற்படாது. தொடர்புடைய அமைச்சர்களோடு, தொடர்பு கொண்டு நடந்து கொண்டாலே அது முறையாகவும் இருக்கும் என்ற கருத்தையும் நான் வலியுறுத்தி, தயவுசெய்து அமைச்சரவர்கள் இதைத் தெளிவு படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காவிரிப் பிரச்சினையைப் பற்றி இன்றைக்கு எழுந்திருக்கின்ற நிலைமையில் வீரேந்திர பாட்டீல் அவர்கள் திரும்பத் திரும்ப இது பேச்சுவார்த்தைக்கு உகந்தது என்ற கருத்தை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்த வரையிலும் நேற்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் திட்டவட்டமாக, தெளிவாக, முடிவாக, பேச்சுவார்த்தை கிடையாது. நடுவர்மன்றத் தீர்ப்புதான் நமக்குத் தேவை என்று அறிவித்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் அவர்களைச் சந்தித்து இங்கே அரசுத் தரப்பில் கொடுத்திருக்கின்ற கோரிக்கையில் என்னென்ன வற்புறுத்தப்பட்டிருக்கிறதோ, அதன் அடிப்படையில்தான் அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்களே தவிர, மாண்புமிகு லத்தீப் அவர்கள் கூறியதைப் போல் 1974 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் முடிவதாக நிச்சயமாக அவர்கள் தெரிவிக்கவில்லை என்பதை மட்டும் நான் இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற கருத்தின் அடிப்படையில்தான் அவர்கள் எழுதிய கடிதமும் அமைந்திருக்கிறது. வேண்டுமானால் அப்படி அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருப்பார்களேயானால், நான் அந்தக் கடிதத்தினுடைய நகலைக்கூட வாங்கித் தரத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் நிச்சயமாகச் சொல்கிறேன். 1974 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் முடிந்தது என்று நாங்கள் எந்த நிலையிலேயும் எடுத்துச் சொல்லவில்லை. எடுத்துச் சொல்ல

வும் மாட்டோம். உபரி நீர் பிரச்சினை என்ற நிலையில்தான் அது வருகிறதே தவிர, ஒப்பந்தம் முடிவுற்றது என்று சொல்கின்ற நிலை வராது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட கொஞ்சம் கோபமாகச் சொன்னார்கள். இதைக் காட்டிக் கொடுத்ததாக ஆகிவிடும் என்று. நான் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த காவிரி நீர் பிரச்சினையில் நமக்குள்ளே இருக்கின்ற கருத்து வேறுபாடு காரணமாக நாம் போராடுவது என்ற நிலை வேறு. இன்றைக்கு நாம் இன்னொரு அரசாங்கத் தினிடத்திலே வாதாடி உரிமையைப் பெறுவதற்கு உச்சநீதிமன்றத் திலே இருக்கின்ற நிலைமை என்பது வேறு. நமக்குள்ளே ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. நீண்டகாலமாக இருக்கின்ற கருத்து வேறுபாடுகள். அந்தக் கருத்து வேறுபாடுகளை எல்லாம் வைத்துக்கொண்டு, நாம் போட வேண்டிய சண்டைகளை எல் லாம் நாம் உரிய நேரத்தில் போட்டால், அது பலனுள்ளதாக இருக்கும்.

ஆனால் இன்றைக்கு வீரேந்திர பாட்டீல் ஒரு கருத்தை திரும்பத் திரும்பச் சொல்லி கர்நாடகத்தில் இருப்பவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் வற்புறுத்த வில்லை. நமக்கு நடுவர் மன்றம் தான் தேவை. வேறு வழி கிடையாது. இதை நீண்டகாலமாகப் பேசியாயிற்று, பேசு வதற்கு இதிலே எந்த பிரச்சினையும் கிடையாது என்ற நிலையை உருவாக்கவேண்டுமென்பதற்காகத் தான் நேற்றைக்குக் கூட நான் வற்புறுத்தி நம்முடைய முதல்வர் அவர்கள் டில்லியில் இந்த நேரத்திலே இருப்பாரேயானால் இப்படிப்பட்ட கருத்துக் கள் வருவதைத் தடுத்து நம்முடைய உரிமைகளைப் பெறுவதற்கு வாதாடலாம் என்று சொன்னேன். அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது சரியான சூழ்நிலையில் அமையவில்லை என்று. அவர்கள் சொன்னதை வைத்து திரும்ப பதில் சொல்ல வேண்டாம் என்று நான் நேற்றைக்கு விட்டு விட்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த அவைக்கும் தெரி வித்துக் கொள்கிறேன். இதிலே நமக்குள்ளே எந்த கருத்து வேறு பாடும் நடுவர் மன்றத்திலே இல்லை. மீண்டும் நான் தெரி வித்துக் கொள்கிறேன். இதிலே இருக்கின்ற கருத்து வேறுபாடு களை நாம் பேசித் தீர்த்துக் கொள்வதற்கு, வாதாட வேண்டிய நேரத்தில் வாதாடிக் கொள்ளலாம். இன்றைக்கு உச்ச நீதி மன்றத்திலே நமக்கு நடுவர் மன்றம் வேண்டும் என்ற நிலையை எடுத்து, அதற்காக மட்டும் நாம் பேசி வாதாடி அந்த நிலையைப் பெற வேண்டுமென்பதை மட்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

10-50 மணி

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, முதல்வர் அவர்கள் சற்று முன்பு சொல்கிற போது கூட நான் நேற்று இங்கே நினைவுபடுத்தியதைச் சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிந்ததைத்தான் நான் நினைவுபடுத்தினேன். ஆனால் எந்த இடத்திலுமே It is to be renewed என்று அந்த ஒப்பந்தத்

திலே போடப்படவில்லை. காவிரி நீர்ப் பிரச்சினை வருகின்ற போது பல்வேறு சமயங்களிலே நானும் ஒரு பிரதிநிதியாக அழைக்கப்பட்டிருக்கிறேன். இது மூன்றாவது முறை சட்டசபை யிலே நான் இருக்கின்ற காரணத்தினாலே அழைக்கப்பட்டு இருக்கிறேன். ஒரு தடவை கூட அது ended என்றோ it is to be renewed என்றோ எந்த இடத்திலும் வரவில்லை. It is to be reviewed, It is to be reconsidered. அதுகூட என்ன ? இந்த வழக்கை இன்னும் சிறப்பாக எப்படி பயன்படுத்த லாம் என்பதுதான். உதாரணமாக நாம் அதிகமாக விளைச் சலை செய்துவிட முடியும் ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீரில் என்றால் கர்நாடகம் நமக்குத்தானே அதைத் தர வேண்டும். நம்முடைய அனுபவத்திலும், ஆற்றலிலும், திறமையிலும் ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீரை வைத்துக் கொண்டு அதிக விளைச் சலை தர முடியும் என்பதை நமது கடந்த காலம் நிரூபிக்கிறது என்றால் அந்த மிச்சத் தண்ணீரைக் கூட நமக்குத்தானே தர வேண்டும் ? அதுதான் அதிலே இருக்கின்ற உட்பொருளே தவிர வேறு எதுவும் இல்லை. எனவே, ஆயக்கட்டு பாதிப்பது என்பது உலக நாடுகளில் இருக்கின்ற எத்தனையோ—இண்டர் ஸ்டேட் அல்ல—இண்டர்-நேஷனல் வாட்டர் டிஸ்பியூட்டிலே கூட ஏற்கெ னவே இருக்கின்ற உரிமை பாதிக்கப்படுவது என்பது கிடையவே கிடையாது. நமக்குக் கூட இண்டர்-ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் ஆக்ட் 1956-லே நமக்கு டிரிபியூனலிலே கொடுப்பதற்கு, கேட்பதற்கு உரிமை இருப்பதைப் போலவே டிரிபியூனலிலேதான் விடுவதற்கு அதிகமான நியாயம், முழுமையான நியாயம் இருக் கிறது என்ற காரணத்தினாலே இதிலே கருத்து வேறுபாட் டிற்கே இடம் இல்லை. என்ன இருந்தாலும் இங்கே குறிப்பிட் டிருப்பது கூட அப்படியே It is not the text of the memorandum—it is noted என்று வருகிறது. அதிலிருந்து எடுத்து எழுதப்பட்ட செய்தியாக இருக்குமோ என்று நான் கருதுகின்ற காரணத்தினாலே டெக்ஸ்டில் அப்படி இருக்காது என்று நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவதைப் போலவே நானும் நம்புகிறேன். எப்படி இருந்தாலும் நமது நிலையை, இந்த அரசாங்கத்தின் நிலையை கன்னியாகுமரியி லிருந்து திருத்தணி வரை இருக்கின்றவர்களுடைய நிலையை- இது நமக்கு நிரந்தர உரிமையை வழங்குகின்ற ஒன்று—இதில் யார் தலையிட்டு அந்த உரிமையைப் பறித்தாலும் தமிழகம் கொதித்து எழும் என்பது உறுதி என்ற நிலையை நான் இங்கே அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. கோ. **வீரையன் :** தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. இங்கு தொடர்ந்து ஒரு வாரமாக நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய காங்கிரஸ் கட்சி யினுடைய துணைத் தலைவர் அவர்களும், ''தமிழகம் ஒன்று பட்டு நிற்கிறது, ஒன்றுபட்டு நிற்கிறது, ஒன்றுபட்டு நிற்கிறது.''

என்று இங்கே கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வெளியிலே அவர்களுடைய கட்சியும், தலைவர்களும், நாடாளுமன்றத்திற்குப் போகின்ற தூதுக் குழுவிலும் மாறுபட்டு, அங்கே வெளியிலே நடவடிக்கை செய்து கொண்டு இங்கே ஒன்றுபட்டு நிற்கிறோம், என்று கூறிக் கொண்டிருப்பது எந்த அளவிற்கு மிகப்பெரிய கெடுதலை உண்டாக்குகிறது என்பதை.....

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய லத்தீப் பிரிவைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு மிக முக்கியமான பிரச்சினையை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். அவையினுடைய கவனத்திற்கு அவர் கொண்டு வந்ததின் மூலம் நாளைய தினம் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டால் அதிலே வாதாடுகின்ற நேரத்திலும் அல்லது நடுவர் மன்றத்திற்கான நிலைகளை எடுத்திட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திலே வாதிடுகின்ற நேரத்திலும் அதிலே எடுத்து வைக்கின்ற வகையிலும் தமிழ்நாடு தன்னுடைய வாதத்தை அழுத்தம் திருத்தமாக வைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அவர் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார் என்றே நான் கருதுகின்றேன். இன்று காலையிலே பத்திரிகையிலே, அதிலும் குறிப்பாக இந்து பத்திரிகையிலே வந்துள்ள இந்த இரண்டு செய்திகளும் ஓரளவு அதிர்ச்சி அளிக்கத்தக்க செய்திகளே ஆகும். ஏனென்றால் முதலில் சென்ற—தமிழக அரசின் சார்பாக சென்ற—குழுவில் இரண்டு கட்சிகள் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலைகள் அவர்களுக்கு ஏற்பட்டது. அதுகுறித்து அவர்கள் விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். அதோடு நின்றுவிடாமல் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதற்கான பதிலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மூத்த துணைப் பொதுச் செயலாளர் வெளியிடும் பொழுது இந்து பத்திரிகையில் வந்துள்ள அதே வாசகத்தைப் படிக்கிறேன். 'Asked why the AIADMK did not join the All party Delegation to meet the Prime Minister, he said that we hold Mr. Karunanidhi and the D.M.K. Government responsible for failure to renew the Cauvery agreement that ended in 1974. So we decided to keep out of that Delegation,' என்று மிகத் தெளிவாக பட்டவர்த்தனமாக பத்திரிகையிலே அவர் இப்படிக் கூறியதாக செய்தி வெளிவந்திருக்கிறது.

10–55 மணி

அது ஒரு கட்சி மாச்சரியத்தோடு தொடர்ந்து அவர் சொல்லிக் கொண்டே வருகின்ற பதில் என்ற அளவிலே விட்டு விட்டாலும் கூட தூதுக் குழுவாக சென்றவர்கள் தமிழகத்தின் சார்பாக மற்றொரு குழுவாக சென்றவர்கள், காங்கிரஸ் நண்பர்

களும், அ.தி.மு.க. நண்பர்களும் அவர்களோடு சென்ற அவர்களுடைய தோழமைக் கட்சி நண்பர்களும் தந்த அந்த முறையீட்டில், மெமோரண்டத்தில் The memorandum noted that the agreement on sharing of waters between Tamil Nadu and Karnataka had ended in 1974 and it has to be renewed after taking into consideration fresh facts without affecting the existing rights of the farmers of Tamil Nadu என்று இந்த வாக்கியம் அதிலே அமைந்து இருப்பதைப் பார்க்கும் போது திரு. வீரேந்திரப் பாட்டீல் அவர்கள் 1968 ஆம் ஆண்டு நான் அவரை முதன் முதலாக டெல்லியில் இந்தப் பேச்சு வார்த்தைக்காக தமிழகத்தினுடைய பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையிலே அண்ணா அவர்களால் அனுப்பப் பட்டபோது இதே வாசகத்தைத் தான் அவர் சொன்னார். 24 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டோடு முடிந்து விடுகிறது என்று 6 ஆண்டுக்கு முன்பே அவர் சொல்லத் தொடங்கிவிட்டார். ஏன் என்று அவர் அதற்குச் சொன்ன காரணம் இது தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் உள்ள ஒப்பந்தம் அல்ல, இது ஏற்கெனவே இருந்த மைசூர் அரசினுடைய பூகோளத்திற்கும் ஏற்கெனவே இருந்த சென்னை ராஜதானி, மெட்ராஸ் ஸ்டேட், மெட்ராஸ் ப்ராவின்ஸ் என்று அந்த நிலப் பரப்புக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தமே அல்லாமல் இது பொது ஒப்பந்தமாக எங்களால் கருதப்பட மாட்டாது; நிரந்தர ஒப்பந்தமாக கருதப்பட மாட்டாது. ஏன் என்றால் இது மைசூருக்கும், சென்னை ராஜதானிக்கும் நடை பெற்ற ஒப்பந்தம். அது மட்டும் அல்ல. வெள்ளைக்காரன் காலத்திலே போடப்பட்ட ஒப்பந்தம். எனவே, இப்போது சுயராஜ்யம் வந்த பிறகு அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளு வதற்கு இல்லை என்கின்ற இந்த வாதங்களை அவர் அடுக்கிக் கொண்டே போனார். இப்போது அதே நிலையிலே அவருடைய வாதத்தை வலுப்படுத்துகின்ற வகையில் உண்மையிலேயே இந்து பத்திரிகையில் வந்து இருக்கின்ற இந்த இரண்டு வாசகங் கள் அவர்கள் சொன்னதாக இருக்குமானால் அல்லது மெமோ ரண்டத்திலே குறிப்பிட்டதாக இருக்குமானால் அது அவர்களை அறியாமலே, தமிழ்நாட்டு மக்களுக்கு, தஞ்சை விவசாயிகளுக்கு, காவிரி நதிதீர விவசாயிகளுக்கு அவர்களை நம்பி இருக்கின்ற தமிழ்நாட்டுப் பெருமக்களுக்கு இழைக்கின்ற ஒரு பெருந் தீங்காக முடிந்துவிடக்கூடும். எனவே, தான் அந்த ஒப்பந்தம் என்ன என்பதை நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அதில் The Mysore Government and the Madras Government further agree that the limitations and arrangements embodied in Clauses iv—viii supra shall at the expiry of 50 years from the date of the execution of these presents, we open to reconsideration in the light of the experience gained and of an examination of the possibility of the further extension of irrigation within the territories of the respective Governments and to such modifications and additions as may be mutually agreed upon as the result of such reconsi-

deration என்று மிகத் தெளிவாக இருக்கிறது. நான்காவதிலிருந்து எட்டாவது வரையில் உள்ள அந்த பிரிவுகள் மட்டும் தான் 'ரீ-கன்சிடரேஷனுக்கு' வரவேண்டுமே அல்லாமல் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல எந்த இடத்திலும் 'ரெனீவல்' என்கின்ற வார்த்தை இந்த ஒப்பந்தத்திலே கிடையாது. 'எண்டட்' என்ற வார்த்தை யும் எழுபத்தி நான்கோடு இது முடிந்து விடுகிறது என்ற வார்த்தையும் இந்த ஒப்பந்தத்திலே எங்கும் கிடையாது. எனவே இது 'பர்மனென்டு' ஒப்பந்தம். ஆனால் எந்த நான்கைப் பற்றி நாம் 'ரீ-கன்சிடர்' பண்ணி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றால் :

(1) Return of the areas newly brought under cultivation to be funished to the other Government அதாவது ஒவ்வொரு மாநிலத்தி லும் புதிதாக பாசனத்திற்கு எடுக்கப்பட்டிருக்கிற பரப்பளவு.

(2) Extension of irrigation in Mysore, மைசூரில் பாசனத்திற்கு விரிவுப்படுத்தப்பட்ட பகுதி.

(3) Details of the reservoir to be furnished by Mysore, புதிதாக மைசூரில் கட்ட இருக்கும் நீர்த்தேக்கத் திட்டங்கள்.

(4) Reserve storage in Krishnaraja Sagar may be utilised for generation of power by Mysore. கே.ஆர். சாகரில், கிருஷ்ணராஜ சாகரில் மின் உற்பத்தி செய்வதற்காகப் போடுகின்ற திட்டங்கள் குறித்து, இவைகளை குறித்து தான் 'ரீ-கன்சிடர்' பண்ண வேண்டும் என்று இருக்கிறதே அல்லாமல் நம்முடைய பழைய ஆயக்கட்டுகளுக்கு தரப்படுகின்ற தண்ணீரை 'ரீ-கன்சிடர்' பண்ண வேண்டும், ஒப்பந்தம் எழுபத்தி நான்கோடு முடிவடைகிறது என்று எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

11-00 மணி

அது மாத்திரமல்ல. அந்த ஒப்பந்தத்தினுடைய கடைசிப் பகுதி யில் "..The Madras Government and the Mysore Government hereby agree that if at any time there should arise any dispute between the Madras Government and the Mysore Government touching the interpretation or operation or carrying out of this agreement, such dispute shall be referred for settlement to arbitration" என்று மிகத் தெளிவாக அந்த ஒப்பந்தத்தினுடைய கடைசி பகுதியிலே இருக்கிறது. இதை மேலும் வற்புறுத்துகின்ற வகையில் 1956 ஆம் ஆண்டு ஒரு சட்டம் நிறைவேற்றப்

பட்டிருக்கின்றது நாடாளுமன்றத்தில் அதுதான் 'Inter-State Water Dispute Act' அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் அதிலே இந்த 'may' 'shall' தகராறு வந்தது. 'may be constituted' என்று தான் சட்டத்திலும் இருந்தது. ஆனால் அந்தச் சட்டம் நிறைவேறுவதற்கு முன்பு சில திருத்தங்கள் கொடுக்கப்பட்டு 'may' என்ற இடத்தில் எல்லாம் 'Should' என்கின்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு, கட்டாயமாக 'tribunal' போட்டுத் தான் தீரவேண்டும் என்ற அளவிலே அது திருத்தப் பட்டிருக்கிறது. அது கிளாஸ் 4-ல் "The Committee are of opinion that when a State Government makes a request for the reference of a water dispute to a Tribunal the Central Government should have no discretion in the matter and that a Tribunal should be constituted for the adjudication of the water dispute. At the same time the Committee realise that when a request is received from a State Government in this behalf the Central Government should be given an apportunity to settle the disputes by negotiations if possible. If, howevr, negotiations fail, the dispute should be referred to Tribunal as a matter of course...." என்று மிகத் தெளிவாக 'may' என்கின்ற சொல்லுக்குப் பதிலாக 'should' என்கின்ற அந்த சொல்லே போடப்பட்டு மிகத் தெளிவாக 'Tribunal-க்கு' விடுவது பற்றியும் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1956-ஆம் ஆண்டு 'Inter-State Water Dispute Act நமக்கு உதவிகரமாக அமைந்திருக்கிறது. இவைகளையெல்லாம்' வைத்துத்தான் இன்றைக்கு நாம் மத்திய அரசோடு வாதாடிக் கொண்டிருக்கிறோம். முதல் அமைச்சரே சென்றிருக்க வேண்டும், முதல் அமைச்சரே சென்றிருக்க வேண்டும் என்று இங்கே சொல்லப்பட்டது. முதல் அமைச்சர் ஏன் செல்லவில்லை என்று வெளியிலே கூட பேசப்படுகிறது. பிரதமரைப் பார்ப்பதற்கே முதல் அமைச்சர் பயப்படுகிறார் என்று எல்லாம் சொல்லப்படுகிறது. ஆம், பிரதமர் என்னைக் கட்டித் தழுவிக் கொள்கிறார், அதனால் ஒருவேளை நான் பயப்படுகிறேனோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இப்படி எல்லாம் பேசப் படுகிறது. அது எல்லாம் அரசியல். அதற்கெல்லாம் நான் செல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராதா அவர்களும் நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் இலக்கியச் செல்வர் அவர்களும் இங்கே சொன்னார்கள். நாங்கள் அந்த 'மெமோரண்டத்தை' பார்க்கவில்லையென்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே எதிர்க்கட்சியிலே, இரண்டு பிரதான எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் 'மெமோரண்டத்தை' பார்க்காமல் அவர்களுக்குக் காட்டாமல் அவர்கள் கொண்டு போயிருக்கிறார் கள் என்பது விந்தையிலும் விந்தை. இருந்தாலும் பார்த்த பிறகாவது அவர்கள் அதற்கு தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள் என்று நம்பி இந்த அளவிலே அமை கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நான் விளக்கத்திற்காகச் சொல்கிறேன். அவர்கள் கொடுத்திருக்கிற ‘மெமோரண்டம்’ நம்முடைய, அரசாங்கத்தின் சார்பிலே கொடுத்திருக்கிற ‘மெமோரண்டத்தை’ அடிப்படையாக வைத்துத்தான், கொடுக்கச் சொல்லி அந்த ‘மெமோரண்டத்தின்’ நகல் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் கொடுத்திருக்கிற மெமோரண்டத்தினுடைய நகல் எனக்குத் தெரியவில்லை என்பதனாலே அது எங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது என்பது அல்ல. ஆனால் இதிலே இருக்கிற பிரச்சினை எல்லாம் மீண்டும் மீண்டும் இதை விவாதத்திற்குரிய (குறுக்கீடு) இதிலே அ.தி.மு. கழகத்தினுடைய கருத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் நீண்ட நாட்களாக குழுக்களில் எல்லாம் தீர்மானம் போட்டு இருக்கிறோம் அந்த நகலை எல்லாம் நான் வைத்திருக்கிறேன். அதை வைத்துத் தான் இதைக் கொடுத்திருக்கிறார்களே தவிர நிச்சயமாக 1974 ஆம் ஆண்டோடு (குறுக்கீடு) தயவு செய்து ‘மெமோரண்டத்தை’ அவர்களிடத்திலே இருந்து இப்பொழுது வாங்கச் சொல்லி நான் அதை உங்களுக்குத் தரவேண்டும், அப்படி இருந்தது என்றால், இதோடு முடிகிறது இந்தப் பிரச்சினை என்று இருந்திருந்தால், நிச்சயமாக அது தவறுதான், நான் ஒன்றும் தவறு என்பதை மறுக்கவில்லை. ஆனால் நான் நிச்சயமாகச் சொல்வேன் இதை விவாதத்திற்கு நீங்கள் எடுத்துக் கொள்வீர்களேயானால், பல்வேறு தவறுகள் இருக்கின்றன. அந்தத் தவறுகளை எல்லாம் இப்பொழுது சுட்டிக்காட்டுகின்ற நேரம், இல்லை. இன்றைக்கு 26-ஆம் தேதி இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்ற நிலையிலே இது இருக்கிறது. எனவே அந்த தவறுகளைச் சுட்டிக்காட்டி எங்களுக்குள்ளே இருக்கிற வாதங்களை, திரு. வீரையன் கூட சொன்னார்கள். ஏதோ இங்கே இரண்டு கட்சித் தனித்தனியான நிலையை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று. கட்சியிலிருக்கிற நிலையை கட்சி எடுத்துத்தான் ஆகும். அதனாலே நீங்கள் சொல்லுவதையெல்லாம் நாங்கள் கேட்க வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் பிரச்சினை என்ன என்பதை நீங்கள் பார்க்கவேண்டுமே தவிர கட்சி வேறுபாடுகள் (குறுக்கீடுகள்) தயவு செய்து. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விவாதம் வேண்டாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முடிக்கட்டும்.

11-05 மணி

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவரவர் கட்சியிலே அவரவர்கள் உறுதியாக இருப்பார்கள்.** பல பிரச்சினைகள் இன்றைக்கு.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1990 ஏப்ரல் 26]

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லி முடித்து விடலாம். (குறுக்கீடு) நீங்கள் தயவு செய்து உட்காருங்கள், அதைப் பிறகு பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய லத்தீப் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார். அதைத் தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரும் தங்களுடைய, கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். நான் அரசு நிலையைச் சொல்லி இருக்கிறேன். அதிலே, அவர்களுடைய கருத்து, உள்ள படியே அப்படிப்பட்ட நிலை எடுக்கப்பட்டு இருக்காது என்பது ஆகும். அது உண்மையாக இருந்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். எஸ்.டி.எஸ். அவர்கள் அப்படிச் சொல்ல வில்லையென்றாலும், மெமோரண்டத்திலே அப்படி போடப் படவில்லை என்றாலும் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். அப்படி, போடாத ஒன்றை, ஒரு நடுநிலை பத்திரிகை, பெரிய பத்திரிகை இந்து பத்திரிகை வேண்டுமென்றே போட்டிருக்குமானால் அது மிக மிகக் கண்டனத்திற்குரிய ஒன்றாகும். எனவே நாளைய தினம் அவர்கள் அதைக் கொண்டு வந்து இங்கே காட்டுவார்களே யானால் நாம் இந்து பத்திரிகையைக்கூட கண்டித்து இங்கே ஒரு தீர்மானம் போடலாம். ஏனென்றால் இது ஒரு மிகப் பெரிய விவகாரம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வரதராசன், நீங்கள் உட்காருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, நாங்கள் அந்தக் கருத்து வேறுபாடுகளை மறந்த சூழ்நிலையில்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீரையன் பேசியதால் அவர் அப்படிச் சொல்கிறார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்களும் கட்சி விவரங்களைத்தானே சொன்னீர்கள். (குறுக்கீடு) திரு. வீரையன் அவர்களே அப்படிச் சொல்லி இருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. (குறுக்கீடு) அவர் சொன்னார், அதற்கு இவர் பதில் சொல்லி விட்டார், நீங்கள் அதற்கு மேலே பிரச்சினையைக் கிளப்பக் கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் பேசுவது எதுவும் பதிவாகாது.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, எனவே இந்தக் கருத்து வேறுபாடுகள் வருமானால், அந்தக் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க வேண்டுமென்ற சூழ்நிலையில், நிச்சயமாக, காவிரிப் பிரச்சினை பொறுத்த வரையில் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுங்கள், அவர்கள் பேசுவது எதுவும் பதிவாகாது என்று சொல்லி விட்டேன் இல்லையா, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலும் நாம் ஒத்த கருத்தோடு இருக்கிறோம். ஒத்த வகையிலே இருக்கிறோம் என்ற வகையில் நாங்கள் நிச்சயமாக இருப்போம், பத்திரிகையிலே வந்திருக்கிற அந்தச் செய்தியை நாம் தவிர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால் அதைத் தவிர்க்க வேண்டிய நிலையில் நாம் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விஷயத்தில் எல்லா கட்சியைப் போல மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றுபட்டு நின்று இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காக ஆரம்பத்திலேயிருந்து இந்த நிமிஷம் வரையிலும், இனி மேலும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்போம். ** என்று அவர் சொல்வது, இதற்குச் சம்பந்தம் இல்லாத, அப்பாற்பட்ட, அந்நியமான ஒரு செய்தி. அதை தயவுசெய்து நீங்கள் நீக்க வேண்டும். இப்போதும் நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இங்கே, ஒற்றுமை ஒற்றுமை என்று நாம் தொடர்ந்து சொல்லிக்கொண்டு, வெளியிலே அந்த ஒற்றுமை இல்லாத வார்த்தைகளும், சமாச்சாரங்களும் வரக் கூடாது என்பதுதான். அதற்கு இருக்கிற ஆதாரங்கள் முழுவதும் ஆதாரப்பூர்வமாக நம்முடைய முதலமைச்சர் முன்பு வைத்திருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவருக்கும் எங்களுக்கும் சண்டையில்லை. அவர் வெளியிலே விட்ட அந்த வார்த்தை சரியானதல்ல. ஒரு கட்சிக்கு ஏற்படுத்தக்கூடிய ஒரு அவமதிப்பு அது. அதை நீக்கவேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை நாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விநாயகன் அவர்கள் சொல்கிறபோது எங்களையும் சேர்த்துத்தான் சொன்னார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிற நேரத்திலும் எங்கள் கட்சியையும் சேர்த்தே தான் சொன்னார்கள். நான் இந்த அவையின் முன்னாலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சமர்ப்பிக்க விரும்புவது, கட்சிகளுக்குள்ளே இருக்கின்ற பிரச்சினைகளைப் பேசலாம், வாதிடலாம், அந்தக் கட்சி, இந்தக் கட்சி என்றெல்லாம் இப்போது நாம் பேசலாம். ஆனால், அமைதியாக, நேற்றும் சொன்னதற்கு ஒன்றும் சொல்லாமல் இருந்து, இன்றும் சொல்லாமல் இருப்பதற்கு காரணம், ஔவை சொன்னதைப் போலே, இரண்டு மன்னர்கள் நீங்கள் ; சண்டையிடுகிறீர்கள். ஆத்தி மாலை வென்றால் என்ன ; வேப்பமாலை வென்றால் என்ன? வேப்ப மாலை தோற்றால் என்ன ; ஆத்தி மாலை தோற்றால் என்ன? தோற்பது தமிழல்லவா என்றாள். அதைப்போலே நமக்குள் இருக்கிற சண்டையிலே எந்தக் கட்சி ஓசத்தி என்று போடுவதைவிட தமிழ்நாடு, அதனுடைய நிலையிலே நின்று வெற்றி பெறுகிறது என்பதை மட்டுமே இப்போது பேசுவோமே. மற்றவைகளையெல்லாம் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறதே. இதுபற்றிப் பேசுவதற்குக் காரணமே அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு வெளியில் நடக்கிற ஒரு சம்பவத்தை உள்ளே இழுத்த காரணத்தால் தான் வந்தது. அதற்குப் பிறகு கூட, அது நொந்ததாக இருந்தாலும் கூட அமைதியாக இருப்பதற்குக் காரணம் நமக்குள் வாதம் இடுவதற்குப் பதிலாக 'நடந்தாய் வாழி காவேரி' என்று இலக்கியத்தில் மட்டும் அல்லாமல் இன்றும், என்றும் இருக்கவேண்டும் என்ற ஆசையின் காரணத்தால்தான் நாங்கள் அமைதியாக இருந்தோம். இதிலே இங்கே ஒன்று பட்டு நிற்பதையே அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறபோது, இங்கேயும் அதைக் கொண்டு வருவானேன்? (குறுக்கீடுகள்)

11–10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லி விடுகிறேன். இதிலே இரண்டு நிலை. ஒன்று திரு. வீரையன் அவர்கள் ** என்று சொன்னார்கள். (கூச்சல்-குழப்பம்) அது தொடர்பான செய்திக்கு பதில் சொல்கிறபோது திரு. இராதா அவர்கள் ** என்று சொல்லியிருக்கிறார்.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிலே இருக்கின்ற கட்சி நிலை பற்றி எடுத்துச் சொன்னதால்தான் அவர் சொல்லி இருக்கிறார். இந்த நிலையில் **என்ற தொடரை யார் பயன் படுத்தியிருந்தாலும் அந்தத் தொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எங்களுடைய கட்சியைப் பற்றி அவர் சொல்லும்போதுதான் நான் சொன்னேன். நிச்சயமாக நான் அவரை அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. அவர் எங்கள் கட்சியைப் பற்றி விமர்சனம் செய்கிற நிலை வருமேயானால் இனி அவருடைய கட்சி பற்றி விமர்சனம் செய்கிற நிலைதான் வரும். எனவே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம், நான் தான் சொல்லிவிட்டேனே. (குறுக்கீடு) அதைச் சொல்லியாகி விட்டது. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை குறித்து நான் ஒரு கருத்தை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் எழுப்பின அந்த ஐயத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக பதிலளித்து இருக்கிறார்கள். அவைகள் நிகழாது ; நிகழ்ந்து இருக்காது. அப்படித்தான் நிகழ்ந்து இருக்குமேயானால் அது தவறு என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட அந்த மெமோரண்டத்தைப் பார்த்த பிறகு சொல்வ தாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி மெமோராண் டத்தைப் பார்த்துவிட்டு விளக்கம் அளிக்கிறபோது மேலும் சில விளக்கங்களை அவர்கள் பெறவேண்டும் என்பதற்காக இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே இந்து பத்திரிக்கையில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சியி னுடைய எம். பி.-க்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எம். பி.-க்களும் கொடுத்த மகஜரில் அடுத்து ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள், காவிரி பிரச்சினையில் ஒவ்வொரு எழுத்தையும் கவனமாகக் கோர்க்க வேண்டி இருக்கிறது. அவர்கள் எழுதி இருக்கிறார்கள் The memorandum alleged that Karnataka had constructed dams and impounded the waters, thereby denying Tamil Nadu its due shares. O.K.

....as a result the inflow into Mettur Dam between June and September which averaged to 377 TMC ft. up to 1972 declined to 220 TMC ft என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஏனென்றால் இது தமிழகத்திற்கு மிகப் பெரிய ஒரு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். காரணம் அவர்கள் சொன்னார்கள் ஜூன் டு செப்டம்பர் வரையில் ஆவரேஜ் ஆக 377 டி. எம். சி. தண்ணீர் வருகிறது என்று சொல்கிறார்கள். இதுவரையில் ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் என்ற நான்கு மாதத்தில் 377 டி. எம். சி. தண்ணீர் நமக்குக் கிடைத்தால் நாம்

1990 ஏப்ரல் 26] *[திரு. துரைமுருகன்]*

தண்ணீருக்கு ஆலாகப் பறக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் இந்த நான்கு மாதத்திற்குள் 377 டி. எம். சி. தண்ணீர் என்று சொல்வது ஒரு ஆண்டு முழுவதும் வரக்கூடிய வரத்து. அதை ஒரு நான்கு மாதத்திலேயே தமிழகம் பெறுகிறது என்று ஒரு மெமோரண்டத்திலே குறித்து பிரதமரிடத்திலே கொடுத்தால் நாளைக்கு கர்நாடக அரசு என்ன சொல்லும் ? நான்கு மாதத்தில் 377 டி. எம். சி. தண்ணீரைத் தமிழ்நாடு பெற்றுக் கொண்டிருக்கிறது என்று வாதிட மாட்டார்களா ? அது மட்டுமல்லாமல், அதற்கிடையில் கிடைக்கிற நீர் அதிகமாகக் கணக்கிடப்பட்டு கொடுத்திருக்கிறது. இது மிகப் பெரிய தவறான தகவல். சாதகம் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, இந்த விஷயத்தில் பாதகம் செயயாமல் இருங்கள்; தமிழகம் கையெடுத்துக் கும்பிடும்.

11-15 மணி

திரு. எஸ். ஆர். இரர்தர் : தலைவர் அவர்களே, இதை மீண்டும் பிரச்சினையாக எழுப்புகிற நிலை இருக்கிறது. ஆனால் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி விட்டார்கள். நான் இதில் விவாதத்திற்கு வரவேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆனால் 1970-ஆம் ஆண்டில் இதே மன்றத்தில், 6-3-1970-ல் ஹேமாவதி அணையைக் கட்டப்படவே கூடாது என்பது நமது அரசின் வாதம் அல்ல, ஹேமாவதி அணையை கட்டுவதில் நமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லையென்று..

மாண்புமிகு திரு. துரைமுருகன் : நான் சொன்னது, நாலு மாதத்தில் 377 டி. எம். சி. தண்ணீர் அவர்கள் தந்ததாக, அந்த மகஜரில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதுதான். அது தவறு என்று சொல்கிறேன். திரு. இராதா சொல்கிற மாதிரி (குறுக்கீடு) அவரே இன்னும் அதைப் பார்க்கவில்லை. பார்த்து, அப்படி நான்கு மாதத்தில் 377 டி. எம். சி. தண்ணீர் தமிழ்நாட்டுக்கு வரும் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருந்தால், அது தவறு அல்லது ரைட் என்று சொல்லவேண்டும். (குறுக்கீடு) 377 டி. எம். சி. வருகிறது என்று நிரூபித்தால் பரவாயில்லை. அதை விட்டுவிட்டு மறுபடியும் எங்கோ போய்க்கொண்டிருப்பது நல்லதல்ல. அவருக்கு ஹெல்ப் பண்ண வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் வேறு ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை (குறுக்கீடு) இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்றுதான் சொன்னார். நாளைக்குப் பார்த்து விட்டுச் சொல்லலாம் என்றுதான் சொல்கிறார். நீங்களே பார்த்துவிட்டு, அதையே விவாதத்திற்கு வைக்கலாமே.

திரு. எஸ். ஆர். இராதா : நாளைக்கு அந்த மாதிரிக் கருத்துக்கள் பத்திரிகையில் வந்தால்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அவருடைய கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்ட ஒரு மனு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராக இந்த மன்றத்தோடு சம்பந்தப்பட்டவருக்கு இந்தப் பிரச்சினை பற்றி காட்டாமல் அங்கே அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அது கூட தெரியாமல் இவர் வந்திருக்கிறார். அவர் பேசுகிறார்—பழைய கதையை. எதையோ எடுத்து வந்திருக்கிறார். முதலில் சொல்லச் சொல்லுங்கள் 377 டி. எம். சி தண்ணீர் நாலு மாதத்தில் தமிழகத்திற்கு கர்நாடகத்திலிருந்து வருகிறதா என்று, 200 டி. எம். –சி. யாகக் குறைந்திருகிறது என்று சொல்கிறார்களே, அது சட்ட விரோதம். Can you prove it? It is utterly wrong? They are ignorant to prepare the memorandum.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசுவது முறையான நிலை அல்ல. (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விரும்பினால் காவிரிப் பிரச்சினையில் ஒரு நாள் கூட தனியாக விவாதம் வைத்துக் கொள்ளலாம். இப்போது அவர் கேட்டதற்குப் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் அந்த மெமோரண்டத்தைப் பார்க்கவில்லை. உங்களுக்கு அந்த மெமோரண்டம் காட்டப்படவில்லை. அப்படியிருக்கும்போது நாளைக்கு அப்படிப் போடப்படவில்லை என்று நீங்கள் சொன்னால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்வதால் நான் இதைத் தனியாக விவாதத்திற்கு வைத்துக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன். ஆனால் அவர்கள் மனுவை தனியாகக் கொடுத்துவிட்டார்கள். எங்களுக்கு தெரிவிக்கவில்லை என்பதாலேயே பெரிய சூழ்நிலை வந்து விட்டதாகச் சொல்வது தவறான ஒன்று. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி, அவர்கள் பேசி, அவர்கள் ஒரு மகஜரை தயாரித்து அவர்களிடம் கொடுக்கிறார்கள். அப்படி அங்கே கொடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அங்கே டில்லியில் இருந்து அதைச் செய்திருக்கிறார்கள். நாடாளுமன்றக் கட்சி என்ற அளவில் அவர்கள் அங்கே கூடிப் பேசி முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆனால் அது இங்கே சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாமல் செய்து விட்டார்கள் என்று சொன்னால், இது எங்களைப் பிரிப்பதற்கு அல்லது எங்களுக்குள் குழப்பத்தை உண்டாக்கி, அதன் மூலம் நீங்கள் ஒரு லாபத்தை அடைய

1990 ஏப்ரல் 26] [திரு. எஸ். ஆர். இராதா]

வேண்டுமென்று கருதுவீர்களேயானால் நான் நிச்சயமாகத் சொல்கிறேன். அது நடக்காது. நாங்கள் ஒற்றுமையாக இருப்போம். பிரச்சினை அதில் இல்லை. காவிரிப் பிரச்சினையை தனியாகக் கொண்டு வாருங்கள். தனியாக விவாதிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். தனியாக ஒரு விவாதம் வைத்துக்கொள்ள முதலமைச்சர் அவர்கள் நேரத்தைக் குறிப்பிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்செந்தூரில் வாடகைக் கார்கள் நிறுத்த இடம் கோரி மறியல் செய்தவர்கள் மீது தடியடி நடத்தியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, ரெ. பிச்சைமுத்து, குமரி அனந்தன், திருமதி ரமணி நல்லதம்பி ஆகியோர், ''24–4–1990 அன்று சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் நகரத்தில், வாடகைக் கார்கள் நிறுத்த தனி இடம் ஒதுக்கக் கோரி மறியல் ஈடுபட்டுள்ளவர்கள் மீது தடியடித் தாக்குதல்கள் நடத்தியதால் அங்கே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் நகரத்தில் கடந்த 24–4–1990 அன்று வாடகைக் கார்களை வைத்திருக்கக் கூடியவர்கள் அந்த வாடகைக் கார்களை நிறுத்துவதற்கான தனியாக ஒரு இடம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கோரிக்கையை வைத்து, அமைதியான முறையில் மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த மறியலில் ஈடுபட்ட வழக்கறிஞர் திரு. ராமமூர்த்தி அவர்களையும், நகர கம்யூனிஸ்ட் கட்சித் செயலாளர் வைகை ராஜு என்பவரையும் வட்டார கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் சுடலை மற்றும் சிலரையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் காவல் துறை காவலர்களும் மிக மோசமாக அடித்து, அத்துமீறிய முறையில் பூட்ஸ் காலால் உதைத்து பயங்கரமான முறையில், தாறுமாறாகப் பேசியும் மிகவும் தவறான முறையில் நடத்தியிருக்கிறார்கள்.

வேண்டுமென்று கருதுவீர்களேயானால் நான் நிச்சயமாகத் சொல்கிறேன். அது நடக்காது. நாங்கள் ஒற்றுமையாக இருப்போம். பிரச்சினை அதில் இல்லை. காவிரிப் பிரச்சினையை தனியாகக் கொண்டு வாருங்கள். தனியாக விவாதிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். தனியாக ஒரு விவாதம் வைத்துக்கொள்ள முதலமைச்சர் அவர்கள் நேரத்தைக் குறிப்பிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்செந்தூரில் வாடகைக் கார்கள் நிறுத்த இடம் கோரி மறியல் செய்தவர்கள் மீது தடியடி நடத்தியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, ரெ. பிச்சைமுத்து, குமரி அனந்தன், திருமதி ரமணி நல்லதம்பி ஆகியோர், ''24–4–1990 அன்று சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் நகரத்தில், வாடகைக் கார்கள் நிறுத்த தனி இடம் ஒதுக்கக் கோரி மறியல் ஈடுபட்டுள்ளவர்கள் மீது தடியடித் தாக்குதல்கள் நடத்தியதால் அங்கே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் நகரத்தில் கடந்த 24–4–1990 அன்று வாடகைக் கார்களை வைத்திருக்கக் கூடியவர்கள் அந்த வாடகைக் கார்களை நிறுத்துவதற்கான தனியாக ஒரு இடம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கோரிக்கையை வைத்து, அமைதியான முறையில் மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த மறியலில் ஈடுபட்ட வழக்கறிஞர் திரு. ராமமூர்த்தி அவர்களையும், நகர கம்யூனிஸ்ட் கட்சித் செயலாளர் வைகை ராஜு என்பவரையும் வட்டார கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் சுடலை மற்றும் சிலரையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் காவல் துறை காவலர்களும் மிக மோசமாக அடித்து, அத்துமீறிய முறையில் பூட்ஸ் காலால் உதைத்து பயங்கரமான முறையில், தாறுமாறாகப் பேசியும் மிகவும் தவறான முறையில் நடத்தியிருக்கிறார்கள்,

11-20 மணி

அது மட்டுமல்லாமல், அந்த 40 வாடகைக் கார்களை, போலீஸ் நிலையத்திற்கே எடுத்துக் சென்றிருக்கிறார்கள். இது அந்த வட்டாரத்திலே, ஏற்கெனவே பல்வேறு கோரிக்கைகளுக்காக, இன்றைக்கு பொதுமக்கள், மகஜர்களை கொடுத்தும், அதிகாரிகளை நேரிலே பார்த்தும், கோரிக்கைகள் நிறைவேறாத நிலையிலே, கடைசி ஆயுதமாக அவர்கள் ரோடு மறியலிலே ஈடுபடுகிறார்கள். அல்லது பஸ்ஸை மறிக்கிறார்கள் அல்லது கடைக்கு முன்னாலே மறிக்கிறார்கள். கடந்தக் காலத்திலே கூட தூத்துக்குடியிலே இருக்கின்ற மெயின் லைனிலே இருக்கின்ற ஆத்தூர் பகுதியிலே ஆயிரக்கணக்கான விவசாயிகள் தண்ணீர் வேண்டுமென்று சொன்ன கோரிக்கைக்காக இந்த ரோட்டிலே 2, 3 நாட்கள் மறியல் செய்தார்கள். அங்கு சென்று கொண்டிருந்த பேருந்துகள் எல்லாம் கூட வேறு வழியாக திருப்பி விடப்பட்டன. ஆகவே, மக்களுக்கு இருக்கக் கூடிய கோரிக்கைகளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு கடைசி ஆயுதமாக, நியாயமான, அமைதியான முறையில் நடத்துகின்ற இந்த மறியல் போராட்டங்களில் காவல் துறை மிகவும் மோசமாக நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அனைவரும் அவையில் கொஞ்சம் அமைதி காத்தால் உதவியாக இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்வேறு கோரிக்கைகளுக்காக உழைக்கிற மக்கள், அல்லது சாதாரண மக்கள், ஏழை எளிய ஏனைய மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை அரசாங்க அதிகாரிகளிடத்தில் சொல்கிற நேரத்தில், அது பல்வேறு காலங்களில் சொல்லப்பட்டாலும்கூட நிறைவேறாதபோது, இப்படி ஒரு கவனத்தை ஈர்ப்பதற்காக, மறியல் என்று சொல்லி, கைது ஆவதற்காக செல்கிறார்கள். அப்படி மறியலில் ஈடுபடும் போது காவல் துறையினர் செய்ய வேண்டிய கடமை என்ன? அவர்களைக் கைது செய்ய வேண்டும் அல்லது அவர்களுக்கு நல்லது செய்வதாக இருந்தால் நல்ல காரியங்களை செய்து, நல்ல வார்த்தை கூறி போராட்டத்தை நிறுத்த வேண்டும். ஆனால் அவர்களாகவே தடியடி நடத்தி, பூட்ஸ் காலால் உதைத்து மிகக் கேவலமாக, அந்நிய ஆட்சி கூட செய்ய கூசுகின்ற அளவுக்கு காரியங்களை செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக என்னிடத்தில் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அங்குள்ள நகரச் செயலாளர், வழக்கறிஞர் அத்தனைபேரும் அங்கே மோசமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள். 40-க்கும் மேற்பட்ட கார்களை காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த வட்டத்தில் பதட்ட நிலை ஏற்பட்டு,

வழக்கறிஞர்கள்கூட வழக்குமன்றத்தைப் புறக்கணித்துவிட்டு, வழக்குமன்றம் செல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மோசமான நிலை. மக்களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்ற அவர்கள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதற்காகவோ அல்லது வேறு ஏதோ காரணத்திற்காகவோ சில அதிகாரிகள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். பல்வேறு இடங்களில் நடக்கிற போராட்டங்களில் அரசும், காவல் துறையினரும் இந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்று முடிவு எடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். ஆகவே, இது பற்றி அவசரமாக விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விட்டு இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, திருச்செந்தூர் பகுதியிலே, அந்த டாக்சி ஓட்டுநர்கள், தங்கள் வாகனங்களை நிறுத்துகின்ற இடங்களில், போலீஸ்காரர்கள் தொந்தரவு செய்கிறார்கள் என்பதால் தங்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்கி தர வேண்டுமென்று அறவழியில் போராட்டத்தில் ஈடுபடுகின்ற நேரத்தில், காவல் துறையினர் அந்த வாகனங்களை எல்லாம் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுவிட்ட காரணத்தால் அதை அவர்கள் எதிர்த்து சாலை மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒரு முடிவை ஏற்படுத்தித் தர வேண்டும்.

பல்வேறு நேரத்தில், டாக்சி ஓட்டுநர்கள் போலீஸ்காரர்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேவைக்கு வண்டியை எடுத்து வா என்று அவர்கள் அதிகாரம் செய்கின்ற நிலை. இதனால் ஓட்டுநர்களுக்கு பொருளாதாரத்தில் பாதிப்பு. இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட காரணத்தால் அவர்கள்மீது காழ்ப்புணர்ச்சிக் கொண்டு அதை வெளிப்படுத்துகின்ற நிலையிலே காவல் துறையினர் மிகக் கொடுமையாக அவர்களிடத்தில் நடந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலை எங்கள் பகுதியிலே, பல பகுதிகளிலே பல காலமாக ஓட்டுநர்களிடம் காவல் துறையினர் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, டாக்சி ஓட்டுநர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். அவர்கள் டாக்சிகளை எங்கு நிறுத்த வேண்டும். எப்படி நடந்து கொள்ள வேண்டும், அதுபோன்று உரிமைகள் பற்றி எல்லாம் முடிவு எடுத்தாக வேண்டும். காவல் துறையினர் தங்களுடைய தொழிலுக்காக செல்கின்றபோது கூட டிரைவர்களிடம் வண்டியை எடுத்துவா என்று சொல்லி வற்புறுத்துகின்ற நிலை

இனிமேல் தவிர்க்கப்பட வேண்டும். இப்படி அராஜக நிலையிலே மிருகத்தனமாக, ஓட்டுநர்கள் பிழைப்பை நடத்த முடியாத அளவுக்கு அவர்களை அடித்து, நொறுக்கி இருக்கின்ற நிலையை கண்டிக்கின்ற வகையிலே அந்தப் பகுதியிலே ஏற்பட்டுள்ள கைதுகள் குறித்தும், காவல் துறையினரின் அடிதடிகளைக் குறித்தும், அங்கே பதட்ட நிலை நீடிப்பதால் இவைகள் பற்றி எல்லாம் அவசரமாக முடிவெடுக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-25 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் பேருந்து நிலையத்திற்குள் டாக்சிகளை நிறுத்த ஒரு டாக்சி நிறுத்தும் இடம், வேண்டுமென்று திருச்செந்தூர் டாக்சி ஓட்டுநர் சங்கம் ஏ.ஐ.டி.யு.சி. கோரி வந்தது. அந்தக் கோரிக்கை குறித்து விவாதிக்க 24-4-1990 அன்று காலை 8-30 மணி அளவில் திருச்செந்தூர் வட்டாட்சியர், அவருடைய அலுவலகத்தில் அந்தச் சங்க நிர்வாகிகளோடு ஒரு கூட்டம் நடத்தினார். அதுதான் அவர் செய்த தவறு. கோரிக்கை பற்றி விவாதிக்க ஒரு கூட்டம் நடத்தினார். சங்க நிர்வாகிகள் அந்தக் கூட்டத்திற்கு வந்தார்கள். வட்டார வளர்ச்சி அதிகாரி திரு. முருகேசன், காவல் துறை ஆய்வாளர் திரு. .பாண்டி, டாக்சி ஓட்டுநர் சங்கத்தின் சார்பில் திரு சுடலை, திருச்செந்தூர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர், திரு. வைகைராஜ், டாக்சி ஓட்டுநர் சங்க முன்னாள் தலைவர் மற்றும் சங்க ஆலோசகர் வழக்கறிஞர் திரு. இராமமூர்த்தி ஆகியோர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். டாக்சியை எங்கே நிறுத்துவது என்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, திருச்செந்தூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் சில நபர்கள் தங்கள் வண்டிகளைச் சாலையின் குறுக்கும், நெடுக்குமாக நிறுத்தி, வாகனப் போக்குவரத்தைத் தடை செய்து, சாலை மறியல் போராட்டத்திலே ஈடுபட்டிருப்பதாக காவல் நிலைய ஆய்வாளருக்குத் தகவல் கிடைத்தது. அதன் காரணமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 24 பேர் கைது செய்யப்பட்டார்கள். சாலை மறியலுக்குப் பயன்படுத்தப்பட்ட 26 வாகனங்கள் பறி முதல் செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன. இந்தத் தகராறுதான் இன்றைய தினம் இவ்வளவு பெரிய அளவுக்கு இந்த மன்றத்தினுடைய அலுவல்களை எல்லாம் ஒத்தி வைத்து விவாதிக்கப்பட வேண்டுமென்ற அளவிலே பேசப்பட்டிருக்கிறது. இதைச் சாதாரணமாக வட்டாட்சியர் தன்னுடைய அலுவலகத்திலேயே அவர்களை அழைத்துப் பேச முடிவு செய்து, அனைவரையும் அழைத்து, அனைவரும் வந்திருக்கும்போது, வந்திருக்கிறவர்களுக்கே தெரியாமல் வெளியிலே சாலை மறியல்

போராட்டம் நடைபெற்ற காரணத்தாலே இத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அழகர்சாமி அவர்களும், திருமதி ரமணி நல்லதம்பி அவர்களும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களை மனதிலே கொண்டு, மேலும் அங்கே அமைதி நிலவவும், அந்த ஓட்டுநர் சங்கம் கோருகின்ற உரிமை நியாய மானதாக இருந்தால் அதைக் கவனிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர வர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவா திக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படு கிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) காஷ்மீரில் உள்ள ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டு மாணவர்கள் படிப்பைத் தொடர முடியாமல் திரும்பி வந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் மற்றும் எம். இராமச்சந்திரன் ஆகி யோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள் ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''காஷ்மீரில் உள்ள ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர் கள், தற்போது அங்கு நிலவும் சம்பவங்களினால் படிப்பைத் தொடர முடியாமல் தமிழ்நாட்டுக்குத் திரும்ப வந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நமது நாட்டில் 17 வட்டார பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஸ்ரீநகரில் உள்ள இக்கல்லூரி 1960-ல் ஆரம்பிக்கப் பட்டது. இக்கல்லூரி அம்மாநிலத்தில் நிலவிவரும் கிளர்ச்சியின் காரணமாக தற்போது மூடப்பட்டுள்ளது. பொதுவாக வட்டார பொறியியல் கல்லூரிகளில் உள்ள இடங்களில் பாதி அந்தந்த மாநிலங்களாலும், மீதம் உள்ள இடங்கள் பிற

போராட்டம் நடைபெற்ற காரணத்தாலே இத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அழகர்சாமி அவர்களும், திருமதி ரமணி நல்லதம்பி அவர்களும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களை மனதிலே கொண்டு, மேலும் அங்கே அமைதி நிலவவும், அந்த ஓட்டுநர் சங்கம் கோருகின்ற உரிமை நியாய மானதாக இருந்தால் அதைக் கவனிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர வர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவா திக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படு கிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) காஷ்மீரில் உள்ள ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டு மாணவர்கள் படிப்பைத் தொடர முடியாமல் திரும்பி வந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் மற்றும் எம். இராமச்சந்திரன் ஆகி யோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள் ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''காஷ்மீரில் உள்ள ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர் கள், தற்போது அங்கு நிலவும் சம்பவங்களினால் படிப்பைத் தொடர முடியாமல் தமிழ்நாட்டுக்குத் திரும்ப வந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நமது நாட்டில் 17 வட்டார பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஸ்ரீநகரில் உள்ள இக்கல்லூரி 1960-ல் ஆரம்பிக்கப் பட்டது. இக்கல்லூரி அம்மாநிலத்தில் நிலவிவரும் கிளர்ச்சியின் காரணமாக தற்போது மூடப்பட்டுள்ளது. பொதுவாக வட்டார பொறியியல் கல்லூரிகளில் உள்ள இடங்களில் பாதி அந்தந்த மாநிலங்களாலும், மீதம் உள்ள இடங்கள் பிற

மாநிலத்தை சார்ந்தவர்களுக்கு மைய அரசினாலும் பிரித்து அளிக்கப்படுகிறது. இக்கல்லூரியில் சுமார் 50 தமிழ் மாணவர்கள் பயின்று வரக்கூடும். இவர்களில் சிலர் தொழிற் கல்வி இயக்குநரை நேரடியாக சந்தித்து தங்களையும் அந்த மாநிலத்தின் சூழ்நிலையைக் கருதி, இம்மாநிலத்தில் திருச்சியில் உள்ள பொறியியல் கல்லூரிக்கு இடமாற்றம் செய்து தருமாறு கோரினார்கள். இம் மாணவர்களுக்கு மைய அரசு இட ஒதுக் கீட்டின் கீழ் இடமளிக்கப்பட்டதால் இக்கோரிக்கை மைய அரசின் வழியாக வர வேண்டும் என அவர்களிடம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு அசாதாரண நிகழ்ச்சி என்ப தாலும், ஸ்ரீநகரில் உள்ள வட்டார பொறியியல்கல்லூரி ஜனவரி 1990 முதல் வகுப்புகள் நடத்தவில்லை என்பதாலும் இம் மாணவர்களின் கோரிக்கை தொடர்பாக மைய அரசிடமிருந்து கருத்துரு பெறப்பட்டால், அவர்களுக்கு 1990–91 கல்வி யாண்டு முதல் இடமளிப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலை நான் கவனித்தபோது, காஷ்மீர் நிலவரம் தீர்ந்தபாடில்லை. தீரும் என்ற நிலையும் இல்லை. கிட்டத்தட்ட 33 மாணவர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், பலவிதமான செமஸ்டர் படிப்பு களில் ஈடுபட்டு படித்துக்கொண்டிருந்த மாணவர்களுடைய நிலை இன்று தர்மசங்கடமாக இருக்கிறது. அங்கே ஏற்பட்ட சம்பவங்களினால் ரிஜினல் இன்ஜினியரிங் காலேஜ் மூடப்பட்ட உடனே, தமிழ்நாட்டு மாணவர்கள் படிப்பைத் தொடர முடி யாமல் திரும்பி வந்துள்ளார்கள். எல்லா ஸ்டேட் மாண வர்களும் அங்கே படிக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட் டைச் சேர்ந்த மாணவர்களைப் பொறுத்துத்தான் நம் முடைய கவலை. மற்ற மாநில மாணவர்களுக்கு ஆங்காங்கே இடம் கொடுத்திருக்கிறார்கள். குறைந்த எண்ணிக்கை யுள்ள இந்த 33 மாணவர்கள் மத்திய அரசின் உதவியினால் தான் அங்கே சேர்ந்தார்கள். அவர்களை மறுபடியும் வேறு இன்ஜீனியரிங் கல்லூரிகளில் சேர்க்க தொடர்பு கொண்டிருக் கிறோம் என்று சொல்லும்போது, காலம் கடந்து கொண் டிருக்கிறது. பல செமஸ்டர் படிப்பு அவர்களுக்கு வீணாகிக் கொண்டிருக்கிறது. அதையெல்லாம் கருத்தில் கொண்டு நம்முடைய கல்லூரிகளிலோ அல்லது வேறு ரீஜினல் இன்ஜி னியரிங் கல்லூரிகளிலோ அவர்களை சேர்க்க ஆவன செய்யு மாறு வேண்டுகிறேன்.

11-30 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஷ்மீரில் ஏற்பட்ட பல்வேறு விதமான குழப்பங்கள் காரணமாக அங்குள்ள வட்டாரப் பொறி

யியல் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து அங்கே படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு இருப்பதை இந்த அரசு அறியும். அந்த மாணவர்களுடைய விண்ணப்பத்தை இங்கே ஏற்க வேண்டுமானால் அதுவும் வட்டாரப் பொறியியல் கல்லூரியிலே அவர்களைச் சேர்க்க வேண்டுமானால் மத்திய அரசு ஜம்முவிலுள்ள காஷ்மீர் வட்டாரப் பொறியியல் கல்லூரியில் உள்ள அந்த மாணவர்களுக்கு இங்கே இடம் தரலாம் என்று தெரிவிக்க வேண்டும். அது ஒரு சாதாரண குறிப்புத்தான். அந்தக் குறிப்பை அவர்கள் அனுப்பினால் அவர்களுடைய உடன்பாட்டோடு அந்த மாணவர்களை இங்கே சேர்க்க முடியும். அது பற்றி அந்த மாணவர்களிடத்திலே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மிக விரைவிலே கிடைக்கக் கூடும். இது ஏறத்தாழ விடுமுறைக் காலம். எனவே கல்லூரி துவங்குகிறபோது அந்த மாணவர்கள் உரிய வகுப்பிலே இடம் பெறத்தக்க அளவுக்கு வாய்ப்புகளை உருவாக்கலாம் என்று நான் நம்புகிறேன்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதியாக இருந்த காஷ்மீரம் இப்போது அமைதிக்குப் பங்கமான நிலையில் இருக்கிறது. பஞ்சாபிலே திருச்சியைச் சேர்ந்த ஒரு மாணவர் இந்தமாதிரி ஒரு சூழ்நிலையிலே கல்லூரியில் இருக்கிறபோது இறந்து விட்டார். அது போல, மாணவர்களை கல்லூரியிலே படிக்க வைக்கிறபோது அவர்களுடைய கவலை தான் பெற்றோர்களுக்கு இருக்கிறது. அந்த வகையிலே அங்கு 33 மாணவர்கள் தான் இருக்கிறார்கள். இந்த அறிக்கையில் கூட அந்த மாணவர்களின் மனுக்களைப் பெற்று மத்திய அரசிலிருந்து அறிவிப்பை எதிர்பார்ப்பதாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கமே அதற்காக எழுதி இந்த மாணவர்களுடைய நிலைமை இப்போது மோசமாக இருப்பதற்குக் காரணம்—கல்வி கற்று தேர்வு எழுதுகிற காலம் இது. இப்போது தேர்வு எழுதுகிற காலத்திலே அவர்கள் கல்லூரிக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்ற காரணத்தினால் — அந்த 33 மாணவர்களும், ஒவ்வொரு வகுப்பிலே ஒவ்வொரு ஆண்டிலே குறைவாகத் தான் இருப்பார்கள்; 12 பேர், 13 பேர் தான் இருப்பார்கள். ஆகவே அந்தக் குறைவான மாணவர்கள் இருக்கிற காரணத்தால் நம்முடைய அரசே மத்திய அரசுக்கு எழுதி இங்கு திருச்சியிலே வட்டாரப் பொறியியல் கல்லூரியிலே படிப்பதற்கு வழிவகை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அமைச்சரவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே ஒன்றும் பெரிய கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் வட்டாரப் பொறியியல் கல்லூரியிலே படிப்பவர்கள் என்ற முறையிலே, வட்டாரப் பொறியியல் கல்லூரியிலேயே சேர்க்கப்படுவது தான் முறை; பாடத் திட்டம் முதலானவற்றில் ஒரே முறையான பாடத் திட்டத்திலே இடம் பெற முடியும்.

ஆனால் மத்திய அரசின் பொறுப்பும் வட்டார பொறியியல் கல்லூரிக்கு இருக்கிறது. எனவே திருச்சியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி தமிழக அரசால் மட்டும் நடத்தப்படுவதல்ல; மத்திய அரசினுடைய பிரதிநிதியும் அங்கு இருக்கிறார். அந்த மத்திய அரசுக்கு காஷ்மீரிலுள்ள அந்தக் கல்லூரி மூடப்படுகிற நிலைமை இருப்பது தெரியாமல் இருக்க முடியாது. எனவே ஒரு கல்லூரியிலிருந்து இன்னொரு கல்லூரிக்கு மாறுவதற்கு மத்திய அரசினுடைய அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் மிக விரைவாக நமக்குத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. ஏனென்றால் இதிலே முதல் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான். அந்தக் கடமை அவர்கள் மூலமாக நிறைவேறுவதற்கு மாணவர்களுடைய வேண்டுகோளும் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கும் என்று கருதுகிறேன்.

(ஆ) என்.ஆர்.ஈ.பி.மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி.) திட்டங்கள் பேரூராட்சிகளுக்கு விரிவுப்படுத்தப்படாதது குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ''என்.ஆர்.ஈ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற 'தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம்' கிராம ஊராட்சி மன்றங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு, பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

நடப்பாண்டு முதல் பேரூராட்சிகளிலும் தொகுப்பு வீடுகள் கட்டப்படும் இத்திட்டம் அமல்படுத்தப்படும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள். துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இதுவரை அரசின் ஆணை பிறப்பிக்கப்படாத காரணத்தால் இந்த நடப்பு ஆண்டில் இந்த திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே விரைவாக அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முயற்சி செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் மத்திய அரசின் பொறுப்பும் வட்டார பொறியியல் கல்லூரிக்கு இருக்கிறது. எனவே திருச்சியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி தமிழக அரசால் மட்டும் நடத்தப்படுவதல்ல; மத்திய அரசினுடைய பிரதிநிதியும் அங்கு இருக்கிறார். அந்த மத்திய அரசுக்கு காஷ்மீரிலுள்ள அந்தக் கல்லூரி மூடப்படுகிற நிலைமை இருப்பது தெரியாமல் இருக்க முடியாது. எனவே ஒரு கல்லூரியிலிருந்து இன்னொரு கல்லூரிக்கு மாறுவதற்கு மத்திய அரசினுடைய அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் மிக விரைவாக நமக்குத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. ஏனென்றால் இதிலே முதல் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான். அந்தக் கடமை அவர்கள் மூலமாக நிறைவேறுவதற்கு மாணவர்களுடைய வேண்டுகோளும் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கும் என்று கருதுகிறேன்.

(ஆ) என்.ஆர்.ஈ.பி.மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி.) திட்டங்கள் பேரூராட்சிகளுக்கு விரிவுப்படுத்தப்படாதது குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ''என்.ஆர்.ஈ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற 'தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம்' கிராம ஊராட்சி மன்றங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு, பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

நடப்பாண்டு முதல் பேரூராட்சிகளிலும் தொகுப்பு வீடுகள் கட்டப்படும் இத்திட்டம் அமல்படுத்தப்படும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள். துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இதுவரை அரசின் ஆணை பிறப்பிக்கப்படாத காரணத்தால் இந்த நடப்பு ஆண்டில் இந்த திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே விரைவாக அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முயற்சி செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

11-35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை முடிந்த பிறகு அந்தந்தத் துறையினுடைய மானியக்கோரிக்கை முடிவுற்றதற்குப் பிறகு தான் அரசு ஆணைகள் வழங்கப்படும் என்பதையும், முந்தா நாள் — 24 அன்றுதான் அந்த மானியக் கோரிக்கை முடிவுற்றிருக்கிறது என்பதையும் அது சம்பந்தப்பட்ட ஆணை விரைவாக அனுப்பப்படும் என்பதையும், நிச்சயமாக இந்த வருஷம் பேரூராட்சிகளில் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதையும் நான் அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5 அறிக்கைஅளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(6) சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்

(அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையில், ஒரு கொள்கைப் பிரச்சினை இருப்பதனால் இதை எதிர்க்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

11-35 மணி

மரண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை முடிந்த பிறகு அந்தந்தத் துறையினுடைய மானியக்கோரிக்கை முடிவுற்றதற்குப் பிறகு தான் அரசு ஆணைகள் வழங்கப்படும் என்பதையும், முந்தாநாள் — 24 அன்றுதான் அந்த மானியக் கோரிக்கை முடிவுற்றிருக்கிறது என்பதையும் அது சம்பந்தப்பட்ட ஆணை விரைவாக அனுப்பப்படும் என்பதையும், நிச்சயமாக இந்த வருஷம் பேரூராட்சிகளில் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதையும் நான் அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5 அறிக்கைஅளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(6) சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்

(அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையில், ஒரு கொள்கைப் பிரச்சினை இருப்பதனால் இதை எதிர்க்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

11-35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை முடிந்த பிறகு அந்தந்தத் துறையினுடைய மானியக்கோரிக்கை முடிவுற்றதற்குப் பிறகு தான் அரசு ஆணைகள் வழங்கப்படும் என்பதையும், முந்தா நாள் — 24 அன்றுதான் அந்த மானியக் கோரிக்கை முடிவுற்றிருக்கிறது என்பதையும் அது சம்பந்தப்பட்ட ஆணை விரைவாக அனுப்பப்படும் என்பதையும், நிச்சயமாக இந்த வருஷம் பேரூராட்சிகளில் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதையும் நான் அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5 அறிக்கைஅளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(6) சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்

(அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையில், ஒரு கொள்கைப் பிரச்சினை இருப்பதனால் இதை எதிர்க்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் . "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் மே 10 ஆம் தேதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது முடியாது என்பதாலே, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுக ஸ்டேஜிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் மே 10 ஆம் தேதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது முடியாது என்பதாலே, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுக ஸ்டேஜிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. மானியக் கோரிக்கைகள்–1990–91, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 4—பொதுவிற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்

திரு. எல். கணேசன் முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ.29,58,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு.எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமங்கலி பெண்கள் அணியும் வெள்ளி ஆபரணங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து விவாதிக்க நான்கீழ்க்கண்டவெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,58,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

11-40 மணி

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,58,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. சி. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, 'சிறு தொழிலான பனியன் தொழிலுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை குறைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,58,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஆ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 59,61,79,000--க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,61,79,000-ல் ரூ. 100- குறைக்க வேண்டும் ".

Thiru Mr SUNDR DOSS :Mr. Speaker Sir, "to discuss the need to prohibit the use of Goverrment vehicles by the Government servant son holidays and outside office hours for personal uses" I move that the amount of Rs. 59,61,79,000 under Demand No .9 be reduced by a sum of Rs.100.

திரு. செ. நூர்முகமது : தலைவர் அவர்களே, "மத்திய அமைச்சரவையில் அமுலிலிருப்பது போல் மாநில அமைச்சர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்க வேண்டிய தேவை குறித்து விவாதிக்க' நான் ழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,61,79,000-ல் 100 குறைக்க வேண்டும் ".

(இ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 87,28,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். "

1990 ஏப்ரல் 26]

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, "செங்கை அண்ணா மாவட்டத்துடன் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செய்யார் மற்றும் வந்தவாசி வட்டங்களை இணைத்து அதை இரு மாவட்டங்களாகப் பிரித்து ஒரு பகுதிக்கு செங்கை அண்ணா மாவட்டம் என்றும் வடக்குப் பகுதி மாவட்டத்திற்கு மறைந்த தமிழக முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்டு வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,28,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தொகுதி மக்களின் முறையீடுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரையுடன் நூற்றுக் கணக்கான மக்களின் மனுக்கள் அனுப்பப்பட்டு ஆறேழு மாதங்களாகியுள்ளதால் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,28,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் முன் தர்ணா ஆர்ப்பாட்டம் நடத்துவது போன்ற ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட்டு வந்தவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,28,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஈ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

திரு. எல். கணேசன்: (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 266,90,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. எம். தங்கவேல் : தலைவர் அவர்களே, ஓய்வூதியம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைக் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 266,90,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுநாள்வரை ஓய்வூதியம் வழங்கப்படாத தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 266,90,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எம். சிரங்கன் : தலைவர் அவர்களே, ஓய்வூதியங்கள் காலதாமதமாகாமல் குறித்த நேரத்தில் உறுதியாகக் கிடைக்க வகை செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,66,90,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

(உ) கோரிக்கை எண் 43—பல்வகை.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 129,62,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 129,62,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

1990 ஏப்ரல் 26]

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 129,62,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, வெளி மாநில லாட்டரிச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்வதில் சில வற்றைதடை செய்யப்பட்ட பிறகும் ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் குறித்தும் அதில் தமிழ் நாட்டிற்கு வரவேண்டிய வருவாய் வராதது குறித்தும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 129,62,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

(ஊ) கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,20,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,20,33,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,20,33,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

11-45 மணி

(எ). கோரிக்கை எண் 59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 401,88,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 401,88,93,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,01,88,93,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

திரு.எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கொள்கைக் குறிப்புகள் மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை நான் படித்ததாக அவைக்குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியதற்குப் பிறகு. இறுதியாக என்னுடையதில் உரையிலே அவர்களுக்கு நிறைவு தரும் உரையை நிகழ்த்துகிறேன் என்று கூறி அமைகிறேன்.

* 177-226-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது

1990 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று விவாதம் இரண்டு மணி நேரம் தொடரும். அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர் அவர்கள் பதில் சொல்லுவார்கள் அதற்கேற்ப நேரம் வரையறுக்கப்பட்டு இருக்கிறது. அனைவரும் உரிய நேரத்தில் விவாதத்தை முடித்து ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஓய்வு ஊதியங்களும், மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் மாநில ஆட்சித் தலைவர்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தைத் துவக்கி வைக்கின்ற நேரத்தில், இன்று மாநில ஆட்சித் தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள், முதலமைச்சர், இவர்களைப் பொறுத்தவரையில் பல்வேறு அரசு விழாக்களிலே கலந்துகொள்கிறபோது அந்தந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்கள் முறையாகப் போடப்பட்டு உள்ளதா என்பதைத் தெரிந்து கொண்டு, அவர்களையும் அழைத்துக்கொண்டு அந்த நிகழ்ச்சியிலே முதலமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக எதிர்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிற தொகுதியிலே அரசு அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளில் எங்களை நிறைய புறக்கணிக்கச் செய்கின்ற சூழ்நிலையை அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றுகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக எனது தொகுதியிலே கடந்த 2 மாதத்திற்கு முன்னதாக முதல்வர் அவர்கள் ஒரு செயற்கை வைரத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுவிழாவிற்கு வருகை தந்தார்கள். அதிலே என் பெயர் முறையாகப் போடப்படவில்லை. அது மட்டுமல்லாமல், முறையாகவும் அழைப்பிதழ் அனுப்பப்படாமல் முதல்வர் அவர்கள் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார்கள். இதை கவனத்தில் கொண்டு, மேற்கொண்டு இனிமேல் நடைபெறுகின்ற அரசு விழாக்களிலே முறையாக பெயர்களைப் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, எனது பக்கத்து தொகுதியான கிருஷ்ணராயபுரம் தொகுதியில் மாயனூரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா நடைபெற்றது. அதில் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு கட்டிடத்தை

திறந்துவைத்தார்கள். ஆனால் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அறிவழகனுக்கு முறையாக அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை அதுமட்டுமல்ல. அந்தத் தொகுதியினுடைய பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிற தம்பிதுரை அவர்களுடைய பெயரை அந்த அழைப்பிதழிலே முறையாகப் போடாமல் கீழே போட்டிருக்கிறார்கள். இதைமாற்றி, எதிர்க்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கிற தொகுதிகளை புறக்கணிப்பதை இனிமேல் நீடிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், இன்று மாவட்ட அளவில் வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அந்த வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் முறையாக நடைபெறுவதில்லை. மேலும் அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு மாநில அரசு முன்வரவேண்டும். அதுமட்டுமல்லாமல், மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர்கள் குறைந்தது 2, 3 ஆண்டுக் காலமாவது தொடர்ந்து நீடிக்கவேண்டும். அப்படி தொடர்ந்து நீடித்தால்தான் அந்த மாவட்டத்தில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நன்றாக கவனத்தில் கொண்டு அந்த நிர்வாகத்தைச் செம்மையாக செயல்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கும், நன்றாகவும் இருக்கும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, மாயனூரிலே நடைபெற்ற மாவட்ட ஆசிரியர் பயிற்சி மைய துவக்க விழா நிகழ்ச்சியில் அந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் அறிவழகன் பெயரை வெளியிடவில்லை என்றும், அவர்களை அழைக்கவில்லை என்றும், அவர் சொன்ன தகவலின் அடிப்படையில் இவர் பேசுகிறார். ஆனால் அவருக்கு அழைப்பிதழ் தரப்பட்டு, எல்லோருக்கும் அனுப்புவதைப்போல, அவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டு பெயரும் வெளியிடப்பட்டு உள்ளது. அந்த உறுப்பினர் அந்த விழாவிலே வந்து கலந்து கொண்டு, அங்கேயே பேசினார். என்னை நேரில் அழைக்கவில்லை, என் பெயரைப் போடவில்லை என்று. அழைப்பிதழிலே பெயர் இருக்கிறது, அவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் 2, 3 இடங்களில் வெவ்வெறு இடங்களிலே இருக்கிற பழக்கம் உள்ளவர். இந்த அழைப்பிதழை கொடுக்கச்

சென்றவர்கள் அவர்கள் பார்த்த இடத்திலே கிடைக்கவில்லை என்கிறார்கள். சரியான முகவரிக்கு அனுப்பியதாக அதிகாரிகள் அங்கேயே விடை சொன்னார்கள். நான் மறுபடியும் அன்றைக்கு பதில் சொல்கின்றபோது யாரையும் புறக் கணிக்கக்கூடாது என்று அந்த விழாவில் நான் பேசினேன். அதற்குக் கூட அவர் இல்லை. இப்படிக் குறைப்படுவதை ஒரு தொழிலாக ஆக்கக்கூடாது. முறையாக அழைத்தால்கூட தங்களை நேரில் வந்து சி.ஈ.ஓ. அல்லது வேறு அதிகாரிகளோ அவர்களை நேரில் வந்து கூப்பிட்டுக் கொண்டு போகிற அளவிற்கு எந்த நிகழ்ச்சிக்கும் அழைக்க மாட்டார்கள். அப்படி அழைக்கவும் முடியாது. அதே வேலையாக அதிகாரிகள் இருக்கமுடியாது. முறையாக பெயரிடுவார்கள், அழைப்பை அனுப்புவார்கள், தபாலில்தான் வரும். அதை ஏற்றுக்கொண்டு பெருந்தன்மை யோடு மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொள்ளவேண்டுமே தவிர தவறான பிரச்சாரத்தில் ஈடுபடுவது நல்லது அல்ல.

11–50 மணி

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழைப்பிதழில் பெயர் போடப்பட்டுள்ளது. ஆனால் அழைப்பிதழ் முறையாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அமைச்சரவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தபால் தான் அனுப்ப முடியுமே தவிர, போய்க் கையில் கொடுக்கமுடியாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு பிரச்சினைக்கு வரவும்.

திரு. எம்.தங்கவேல்: தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத் திற்கு மாவட்ட ஆட்சித் தலைவராக வருகின்றவர்கள் குறைந்த பட்சம் 2, 3 ஆண்டுகளுக்காவது மாவட்ட ஆட்சித் தலைவராக அம்மாவட்டத்தில் செயல்பட்டால்தான் நல்லமுறையில் அந்த மாவட்டம் செயல்படமுடியும். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக வருகின்றவர்கள் தமிழ் தெரிந்தவராக இருக்க வேண்டும். தமிழ் தெரிந்தவராக இருந்தால்தான், அந்த மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளையும் ஏழை விவசாயிகள் மற்றும் அன்றாடம் கூலி வேலை செய்கின்றவர்களுடைய பிரச் சினைகளையும் நேரடியாகச் கேட்டு, பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும். எனவே மாவட்ட நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறைந்த பட்சம் 2, 3 ஆண்டுகளாவது அங்கே இருக்கவேண்டும்.

எங்களுடைய திருச்சி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக பொறுப்பேற்ற சுந்தரதேவன் என்பவரை, மாவட்ட ஆட்சித் தலைவராக பொறுப்பேற்ற 2 மாதங்களில் அந்த மாவட்டத்தை விட்டு மாற்றிவிட்டார்கள். காரணம் அவர் ஆளும் கட்சியினருக்கு சரியான ஒத்துழைப்பு தரவில்லை என்ற எண்ணத்தோடு அவரை மாற்றி விட்டார்கள். எனவே இனிமேல் அது மாதிரி நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : ஏற்கெனவே இந்த விவகாரம் இந்த அவையில் பேசப்பட்டு, அவருடைய விருப்பத்தின் பேரில் தான் அவர் மாற்றப்பட்டார் என்ற செய்தியையும் இந்த அவையில் சொல்லியிருக்கிறோம். திரும்பவும் அவர் மாற்றப்பட்டதற்கு ஒரு உள்நோக்கம் கற்பிப்பது என்பது சரியல்ல. ஏற்கெனவே இந்த மன்றத்திலே பேசப்பட்டு பதில் அளிக்கப்பட்டது.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள், அவருடைய விருப்பத்தின்பேரில் மாற்றப்பட்டார் என்று சொன்னார்கள். ஆனால் அவருடைய விருப்பத்தின்பேரில் அது நடைபெறவில்லை. அது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த மாவட்ட ஆட்சித் தலைவரை மாற்றிய உடனேயே அங்குள்ள சர்வகட்சியைச் சார்ந்தவர்கள் ஒரு போராட்டத்தை கூட நடத்தினார்கள். அது மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக்கூட வந்திருக்க முடியும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அவர் விருப்பத்தின் பேரில் மாற்றப்படவில்லை என்பதை எப்படி நீங்கள் நிரூபிப்பீர்கள் ? நாங்கள் ஆட்சியில் இருக்கிறோம். ஒருவர் விருப்பத்தின் பேரில் மாறுதல் கேட்பது எங்களுக்குத்தான் தெரியும். நாங்கள் அதன் பேரில் இந்த அவையில் சொல்லியிருக்கிறோம். இந்த மாமன்றத்தில் உண்மைக்கு மாறான கருத்துக்களை சொல்லக் கூடாது. ஆகையால் நாங்கள் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு நீங்கள் திருப்பி ஒரு உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல.

திரு. எஸ். ஆர். ராதா : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, அங்கே அதற்கு ஒரு கிளர்ச்சி நடைபெற்று, போராட்டம் நடைபெற்று இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அடிக்கடி மாற்றக் கூடாது. 2, 3 ஆண்டுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரே இடத்தில் பணியாற்றவேண்டும். அவ்வாறு மாற்றப்படுகின்ற நிலை தவிர்க்கப்படவேண்டும் என்பது தான் களுடைய கருத்து.

1990 ஏப்ரல் 26]

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை பற்றி ஆழமாகப் போனால், அவர் விருப்பத்தின்பேரில் கட்டாயமாகப் போகவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படி எழுதிக் கொடுத்தார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அங்கே நடந்ததைத்தான் நான் சொல்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்திற்குக் கீழே கிராம நிர்வாகம் உள்ளது.. கிராம நிர்வாக அதிகாரியாக பி.டீ. ஓக்கள் உள்ளார்கள். அவர்கள் முழு நேர அரசாங்க ஊழியர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவருக்குக் கீழே பணியாற்றுகின்ற வெட்டியான், தலையாரி போன்ற கிராமப் பணியாளர்கள் பகுதி நேர ஊழியர்களாக உள்ளார்கள். பி.டீ.ஓக்கள் மட்டும் முழு நேர ஊழியர்களாக இருந்து, தலையாரி, வெட்டியான் போன்றவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருந்தால், அந்த கிராம நிர்வாகம் சரியாக செயல்படுவதற்கு கிராமப் பணியாளர்கள் ஒத்துழைப்புதர இயலாது என்பதை தெரிவித்துக்கொண்டு, ஆகவே கிராம நிர்வாகப் பணியாளர்களான வெட்டியான் தலையாரி போன்றவர்களை அரசு முழு நேர ஊழியர்களாக ஆக்கி, அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகிறதோ, அந்தச் சலுகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுத்தவரையில் இப்போது கொடுக்கப்படுகின்ற சம்பளத்தைவிட உயர்த்திக்கொடுக்கவேண்டும். தொகுதியிலே, கிராமப்புறங்களிலே மக்கள் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அடிக்கடி சுற்றுப் பயணம் மேற்கொள்கின்ற காரணத்தினாலே, அவர்களுக்கு ஒரு காரும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாதத்திற்கு 50 லிட்டர் டீசலும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்படி வழங்கினால் தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி சம்பந்தப்பட்ட எந்த கெட்ட பெயரும் ஏற்படாது என்று தெரிவித்துக்கொண்டு, அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வந்து, என்னுடையஉரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம் ,

11-55 மணி

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு தற்காலிக பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்களுடைய பேரவைச் செயலாளர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற பல்வேறு மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியத்தின் மீது என்னுடைய

கருத்துக்களைக்கூற விழைகிறேன். மாவட்ட நிருவாகம் என்ற மானியக் கோரிக்கையின் கீழ் என்னுடைய கருத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருணையான பார்வைக்கு ஆவன விரைந்து செய்வதற்காக சமர்ப்பிக்கின்றேன். இன்றைக்கு செங்கற்பட்டு வட்டம் என்பது பரந்து விரிந்து கிடக்கின்ற ஒரு வட்டமாகும். வட்டத்தின் கோடியில் அமைந்துள்ள புதுப் பட்டணம், சதுரங்கப்பட்டணம், மாமல்லபுரம், கல்பாக்கம் போன்ற இடங்கள் வட்டத் தலைமையிடத்திலிருந்து சுமார் 35, 40 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளதால் பாமரமக்கள் தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து தங்களுக்கு தேவையான காரியங்களை செய்து கொள்ள முடியவில்லை. ஒரு முறை தாலுக்கா அலுவலகத்திற்கு வந்தால் தங்கள் காரியம் அன்றே முடிவடைந்து விடும் என்ற நிலையில் தாலுக்கா அலுவலகம் இல்லை. பல்வேறு அலுவல் காரணமாக அதிகாரிகள் அலுவலகத்தில் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது நிர்வாக காரணத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும், இதனால் பாமர மக்கள் அல்லல் அதிகமாக இருக்கிறது. பெரும் பரப்பையும் மக்கள் தொகையும் கொண்ட செங்கற்பட்டு வட்டத்தை இரண்டாக பிரித்து திருக்கழுக்குன்றம் வட்டத்தை ஏற்படுத்தி அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மானியக் கோரிக்கைக்கு சிறிது சம்பந்தப் படாத ஒரு கோரிக்கையை கருணையும் நிதியும் ஒருங்கே தன்னகத்திலே வைத்துக் கொண்டுள்ள எங்கள் தானைத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன். சென்னை நகரத்துக்கு மிக அருகிலேயே ஒரு நகரம் அமைந்திருக்கிறது, அது செங்கற்பட்டு நகரம். அங்கிருந்து பல்லாயிரக் கணக்கானவர்கள் சென்னைக்கு தினந்தோறும் அலுவல் காரணமாக வந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். சுருக்க சொன்னால் சென்னை நகரத்தின் ஒரு கணிசமான வேலைப் பளுவை, வீட்டு வசதி என்ற பளுவை செங்கற்பட்டு நகரம் தாங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த நகரத்திலே பணி செய்யும் அலுவலர்களுக்கு நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும் சென்னை நகரத்திற்கு இணையாக வழங்கப்பட மறுக்கப்படுகிறது. ஆனால் இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் செங்கற்பட்டு நகரத்தைத் தாண்டி அமைந்துள்ள காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த கிராமங்களில் பணியாற்றுகின்ற பள்ளி ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் இந்த சலுகைகளைப் பெறுகின்றனர். மேலும் ஒரு வேடிக்கை என்னவென்றால் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையும் ஒரே 'காம்பவுண்ட்க்குள்' அமைந்திருக்கிறது. மருத்துவக் கல்லூரியும் மருத்துவமனையும் ஒரே முதல்வரின் கீழ் இயங்கி வருகின்றன. அங்கே மருத்துவக் கல்லூரியிலே பணியாற்றுகின்ற பேராசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி கிடைக்கிறது. ஆனால், மருத்துவ

மனையிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு அந்த வீட்டு வாடகைப்படியும், நகர ஈட்டுப்படியும் கிடைக்கவில்லை. ஒரே முதல்வர் சம்பளம் வழங்குகிறார். ஆனால் இரண்டு வேறு பாடான நிலையிருக்கிறது. எனவே, செங்கை நகரத்து மக்க ளுடைய நீண்டநாள் கோரிக்கையான அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கனிவோடு கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங் களும் என்ற தலைப்பில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கு ரூ.16,36,000 ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். ஆனால் அரசு ஊழியர்கள் விண்ணப்பம் போட்டு இரண்டு ஆண்டு காலம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. மேலும், நாளுக்குநாள், சிமெண்ட், இரும்பு, மற்ற பொருட்களின் விலை ஏறிக் கொண்டு இருக்கின்ற நிலையில், விண்ணப்பம் போட்டு 6 மாத காலத்திற்குள்ளாக அவர்களுக்கு வேண்டிய கடன் உதவியை அளித்தால் அவர்களுக்கு நன்மை ஏற்படும். எனவே, இதனையும் மாண்புமிகு முதல்வர் கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திருமண முன்பணம் ரூ.133 லட்சம், மோட்டார் வண்டி கள் வாங்குவதற்கு ரூ.315 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உள்ள படியே இது பாராட்டுக்குரிய ஒன்றாகும். வளர்ந்துவரும் இன்றைய தேவைகளின் அடிப்படையில் இவற்றிற்கு மேலும் நிதி ஒதுக்கி அதிகமாக அரசு ஊழியர்கள் பயன் அடையத்தக்க வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

12-00 மணி

இன்றையதினம் தமிழக அரசிற்கு வருவாயை ஈட்டித்தரு கின்ற காமதேனுவாக கர்ப்பக விருட்சமாக வணிகவரித் துறை செயலாற்றிக் கொண்டிருக்கிறது, என்பது யாவரும் அறிந்த ஒன்று. 1984–85ல் வணிக வரித் துறை ஈட்டித் தந்தது ரூ. 905 கோடியாகும். 1989–90 ஆம் ஆண்டு அதன் மூலம் வருகின்ற வருவாய் 1,759 கோடியாகும். கிட்டத்தட்ட வரு வாய் இரண்டு மடங்காகியிருப்பது உள்ளபடியே பராாட்டுக்குரிய ஒன்றாகும். குறிப்பாக கழக அரசு பொறுப்பு ஏற்ற பிறகு மேற்கண்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் காரணமாக கிட்டத்தட்ட 450 கோடி ரூபாய் கடந்த இரண்டு ஆண்டுகளில் வருவாயை உயர்த்தி இருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். நடப்பாண் டில் வணிக வரித் துறை மூலம் நமக்கு கிடைக்கும் வருவாய் சுமார் 2,000 கோடியை எட்டும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. கலைஞர் அவர்கள் வரி ஏய்ப்பவர்களைத் தடுப்பதற்காக பல்வேறு முறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். அவை

அனைத்தும் வெற்றி பெற வேண்டும் என்றால் கீழ் மட்டத்திலே பணி புரியும் ஊழியர்கள் நல்ல முறையிலே எந்தவிதமான புகாருக்கும் இடம் இல்லாத அளவிற்கு பணிபுரிய வேண்டும். மேல் அதிகாரிகள் அவ்வப்போது கீழ் மட்டத்தில் நடக்கும் பணிகளை கண்காணித்து எங்கெங்கே தவறுகள் நடக்கின்றனவோ அவற்றை அவ்வப்போது சரி செய்ய வேண்டும். அப்பொழுது தான் நிர்வாகம் செம்மையாக நடக்க முடியும். அப்போதுதான் மக்களுக்காக உருவாக்கப்படுகின்ற திட்டங்கள் அவர்களுக்கான நல்வாழ்விற்காகப் போடப்படும் திட்டங்கள் சீராக அடித்தளத்து மக்களுக்கு சென்றடையும் என்பதை கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். இவ்வளவு கடுமையாகப் பணியாற்றிவரும் வணிக வரித் துறையில் உள்ள 48 செக் போஸ்ட்களில் 14 தான் சொந்தக் கட்டிடங்களில் இருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. மீதம் உள்ள இடங்களுக்கு சொந்தக் கட்டிடங்களைத் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக தாம்பரம் அருகில் உள்ள இரும்புலியூர், பூவிருந்தவல்லி சோதனைச் சாவடிகள் அருகே லாரிகள் நிறுத்துவதற்கு தனியாக சாலை போடப்பட்டு இருந்தாலும், இடம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், லாரிகள் அந்த இடங்களில் நிறுத்தப்படாமல் நடு சாலைகளிலே நிறுத்துவதன் காரணமாக போக்குவரத்திற்கு வெகுவாக இடைஞ்சல் ஏற்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைகளான என். எச். 45, என்.எச். 7ல் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. மேலும் இதனால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே கடுமையான சட்டத்தின் மூலமாக அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பலமுனை வரி போடப்பட்ட பல இனங்களுக்கு ஒருமுனை வரி போட்டிருப்பதன் காரணமாக வணிகர்களுக்கும், மக்களுக்கும் சொல்லொணாத மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் வருவாயை பார்த்துக் கொண்டிருக்கின்ற அரசு இதுவல்ல என்றும் மக்களுக்கு எந்த வகையிலாவது நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இந்த அரசு செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். அடுத்து வரிவிதிப்பு வட்டங்கள் என்று ஒவ்வொரு வட்டத்திற்கும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வணிகர் நல வாரியம் அமைத்து வணிகர் நலம் பேணும் இந்த அரசு அதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை வெகுவாகப் பாராட்டுகிறேன்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளை செவ்வனே செய்ய பொது மக்களின் வேதனைகளை உடனுக்குடன் சரி செய்ய தொகுதியளவில் ஒரு அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அலுவலகம் நிரந்தரமாக எப்போதும் இருக்க வேண்டும். எந்தக்

1990 ஏப்ரல் 26] [திரு. வீ. தமிழ்மணி]

கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்தாலும் அதை பயன்படுத்திக் கொள்கின்ற அளவிற்கு அங்கே ஒரு டைப்பிஸ்டையும் ஒரு காவலரையும் கொண்ட அலுவலகம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் கூட்டப் பெறுவதன் நோக்கம் பல சமயங்களில் நிறைவேறுவதில்லை என்ற நிலை இருக்கிறது. அங்கே பொது மக்களின் பிரதிநிதிகளால் கொண்டுவரப்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதாக காணோம். பொதுமக்கள் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டும். தீர்க்கும் வகையிலே நடவடிக்கை அமைய ஆணைகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நிச்சயமாகக் கூட்டப்பட வேண்டும் என்று அறிவுரை, ஆணை வழங்கப் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பரிசுச் சீட்டுகள் விற்பனையைப் பொருத்தவரையில் இந்தியாவில் விற்பனையாகும் மொத்த விற்பனையில் தமிழகத்தில் மட்டும் சுமார் 40 சதவிகிதம் வருடத்திற்கு 400 கோடிக்கு மேல் பரிசுச் சீட்டு விற்பனையாகிறது என்ற தகவல் கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

12-05 மணி

எனவே, தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளை அதிக அளவில் விற்றிட, பல கவர்ச்சிகரமான குலுக்கல்களை நடத்தி, மிக அதிகமான பரிசுகளை வழங்கிட அரசு முன் வர வேண்டும். அதே நேரத்தில், இன்றைக்கு பரிசுச் சீட்டுகளை மாவட்டந் தோறும் குலுக்கி மக்களிடத்திலே நம்பிக்கை ஏற்படுத்துகின்ற வகையில் அதைச் செயல்படுத்துவதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

அடுத்து, அமைச்சர்கள் பற்றிய மானியக் கோரிக்கையில் நான் ஒன்றைச் சொல்ல விழைகிறேன். இங்கே இருக்கின்ற அமைச்சர்களில் பெரும்பாலானவர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுக்கு இந்த அரசு வழங்குகின்ற சம்பளம் போதுமானதாக இல்லை. அவர்களுக்குக் கொடுக்கின்ற படியும் போதுமானதாக இல்லை என்கின்ற குறை இருக்கிறது. அவர்களுடைய காருக்கு வழங்கப்படுகின்ற பெட்ரோல் அளவும் குறைவாக இருக்கிற காரணத்தால், நாங்கள் அவர்களை தொகுதிக்கு அழைத்தால், அவர்கள் உடனுக்குடன் வருகின்ற அளவில் இல்லாத நிலை ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் சேர்த்து இந்த அரசு சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதற்குண்டான காரணம், உங்கள்

அனைவருக்கும் புரியும். அப்போதுதான் எங்களுடைய கோரிக்கையும் நிறைவேறும் என்ற எண்ணத்தை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், சிறுசேமிப்பைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் இன்றைக்கு தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. பரிசுகள் வழங்குவதன் மூலம், அதன் துணைத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு இரகுமான்கான் அவர்கள் இதில் அரிய ஆலோசனைகள் மூலம் இன்றைக்கு சுமார் 800 கோடிக்கு மேல் சிறுசேமிப்பில் முன்னிலை வகித்திருக்கிறார்கள்.

மேலும் ஒரு கருத்தை நான் இங்கே சொல்ல விழைகிறேன். தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து நிறுவனங்களிலும் இருக்கின்ற ஒப்பந்தக்காரர்களிடத்திலே இன்றைக்கு இரண்டரை சதத்தை இரண்டரை ஆண்டுகளாகப் பிடித்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்தப் பணத்தை சிறுசேமிப்பிற்கு பத்திரமாக வழங்கி, அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்று, அவற்றை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரணி தாலுக்காவையும், போளூர் தாலுக்காவையும் இணைத்து ஆரணியில் ஒரு வருவாய் கோட்டத்தை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இன்று வருகின்ற மானியக் கோரிக்கைகளிலே பொதுவாகவும் சில கருத்துக்களைச் சொன்னாலும், குறிப்பாக நிர்வாகத்தைப் பற்றி இங்கே சொல்வதற்கு இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறேன். கீழே அடிமட்டத்திலேயிருக்கின்ற, ஒரு கிராமத்திலே இருக்கின்ற வெட்டியானிலிருந்து அந்த மாவட்டத்தைக் கட்டியாளுகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் என்று சொல்லுகின்றவரை, ஒரு கோபுரம்போலே இது அமைந்திருக்கிறது. அதனுடைய உச்சியிலே அமர்ந்திருப்பது போலே கலெக்டர் இருந்தால், டி. ஆர்.ஓ., ஆர்.டி.ஓ., அடிஷனல் கலெக்டர், சப்-கலெக்டர், தாசில்தார், டெபுடி தாசில்தார், ஆர்.ஐ., மணியக்கார், கர்ணம்— இப்போது என்றால் கிராம நிருவாக அதிகாரிகள்— வி.ஏ.ஓ., தலையாரி, வெட்டியான் என்று போய்க் கொண்டிருக்கிறது. இடையிலே நமது ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் நகரசபைகள் இவைகளெல்லாம் அந்தப் கோபுரத்தினுடைய கலையழகு வாய்ந்த, மக்களால் பெரிதும் போற்றிப் பாதுகாக்கப்படுகின்ற அந்த சிற்பங்கள் போலே அமைந்து இருக்கின்றன.

அந்த மாவட்ட ஆட்சி நிர்வாகத்தினுடைய அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்கின்ற ஒருவராக இருப்பவர்தான்

மாவட்ட ஆட்சித் தலைவர். அவர் வருவாய்த் துறையை நேரடியாகப் பார்க்கவில்லை என்று சொன்னாலும், அதற்கும் கண்காணிப்பாளராக அவர்தான் இருக்கிறார். மிகப் பெரும் பொறுப்பு 'டெவலப்மென்டல் புரோகிராம்ஸ்' என்று சொல்கின்ற வளர்ச்சித் திட்டங்கள், அவருடைய நேரடிப் பார்வையிலேயே இருக்கின்றது என்று சொல்லலாம், ஆனாலும் கூட, காவல் துறையாக இருந்தாலும், சுகாதாரமாக இருந்தாலும் கல்வியாக இருந்தாலும், இன்னும் பல துறைகளாக இருந்தாலும் அனைத்துக்கும் முழுப் பொறுப்பை ஏற்க வேண்டியவராகவும், அனைத்தையும் ஒருங்கிணைத்து அணைத்துச் செல்ல வேண்டியவராகவும் இருக்கிறவர் மாவட்ட ஆட்சித் தலைவர். இப்போது கூட, அதனால்தான் அதைப் பெருமையாகப் பேசுவார்கள். கிராமத்திலே சொல்கின்றபோது,' என்ன பெரிய கலெக்டர் என்ற நினைப்போ?' என்று சொல்கிற அளவிற்கு அது ஆட்சித் தலைவர் என்று சொல்கின்ற ஒரு பெரிய புகழோடுகூடிய, ஆனால் பொறுப்போடு கூடிய ஒரு பதவியாக இருக்கிறது. பெருந்தனக்காரர்களாக இருக்கின்றவர்களையும், எங்கோ ஒரு சின்னஞ் சிறு கிராமத்திலே குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களையும் ஒரு சேரப் பாதுகாக்கின்ற ஒரு பெரும் பொறுப்பு அவருக்கு இருக்கின்றது.

12-10 மணி

எனவே யார் யார் மக்கள் மத்தியிலே தொடர்போடு இருக்கிறார்கள் என்பதை காட்டுவதற்காகத் தான் அரசு ஒரு முடிவு எடுத்து இதிலே பணி ஆற்றுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தங்களுடைய அடையாளத்தைக் காட்டுகின்ற வகையில் '' ஐடெண்டிடி பேஜ் '' தன்னுடைய பெயர் குறிப்பிட்டு இருக்கின்ற அடையாள பெயர் அதிலே தன்னுடைய சட்டையிலே பொறிக்கவேண்டும் என்று சொல்கிறார். அப்படி ஒரு ஆணை இருக்கிறது. ஏறத்தாழ 11 இலட்சம் பேர் என்றால் பிளாஸ்டிக்கில் அதை செய்வதாக இருந்தால் ஒன்று 7 ரூபாய் ஆகிறது என்று சொல்கிறார், மொத்தம் 77 இலட்சம் ரூபாய் ஆகும். ஏறத்தாழ 1 கோடி ரூபாய் ஆகும். இதிலே எத்தனை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது பெரிய அதிகாரிகள் தங்களிடம் பணிபுரிகின்ற ஊழியர்கள் அல்லது அதற்கு கீழே பணிபுரிகின்றவர்கள் இவைகளை எல்லாம் அணியச் சொல்கிறார், மக்கள் பார்த்த உடனே நான் ராமசாமியை பார்த்துவிட்டு வந்தேன். மாடசாமியை பார்த்துவிட்டு வந்தேன் என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றால் அநேகமாக அலுவலகங்களிலே அது இல்லை. ஆக ஒரு கோடி ரூபாய் பெருமானம் உள்ள ஒரு காரியத்தை செய்யச் சொல்லி அது செயல்படாமல் இருக்கிறது என்பதை அவர்கள் கவனத்தில் கொண்டு வந்து,—ஒரு சட்டம் போட்டால், அந்தச் சட்டம் நடைபெறாமல், லெனின் ஒரு இடத்திலே புகை பிடிக்கவேண்டும் என்று அமர்ந்த நேரத்திலே புகைப் பிடிக்கக் கூடாது என்று போட்டு இருந்த அறிவிப்புப் பலகையை மாற்றி,

பின்னாலே தள்ளிப்போட்டுதான் புகைப் பிடித்தார் என்று சொல்வார்கள், வேடிக்கையாக சொல்கின்றபோது. ஏன் என்றால் ஒன்று இருக்கிறபோது அதை மறுக்கக் கூடாது என்பதுதான். இதிலே நான் இந்த சின்ன காரியமாக இருந்தால் அதை சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் இப்போது ஒரு அதிகாரியிடம் போய் பேசுவது என்று சொன்னால் அந்த அதிகாரியை அணுகுகின்ற சாதாரண மக்கள் எப்படி போய் அணுகுவது என்று தயங்குகிறார்கள். அதனால் என்ன நடக்கிறது என்றால், அரசாங்கத்தில் ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள், துயர் தீர்க்கும் நாள், திங்கட்கிழமை என்று எல்லா அதிகாரிகளும் அவர்கள் இடத்திலேயே இருக்கவேண்டும் என்று. அதைப்போல மனுநீதித் திட்டம் என்று ஒன்றைப்போட்டு இருக்கிறார்கள். அந்த மனு நீதித் திட்டத்தில் மக்கள் கூடலாம். அதிகாரிகளிடம் தங்களுடைய குறைகளைத் தெரிவிக்கலாம். ஆக மக்கள் அதிகாரிகளைத் தேடி போவதற்குப் பதிலாக அதிகாரிகள் மக்களைத் தேடிப் போகிறார்கள் என்று சொல்லுகின்ற ஒரு நிலை. மக்கள் தேடி வரும் ஒவ்வொரு திங்கட்கிழமைதோறும் அதிகாரிகள் இருப்பார்கள் என்று சொல்லுகின்ற ஒரு நிலை. இந்த இரண்டு பற்றி ஆராய்ந்த S. P. Ambrose Grievances Day and Manu Needhi Thittam have failed to serve the purpose for which they were instituted. என்று சொல்லுகிறார் என்றால், Report on District Administration in my view the Grievances Day and Manu Needhi Thittam have failed to serve the purpose for which they were instituted. எதற்காக மனு நீதித் திட்டமும், அந்த துயர் தீர்ப்பு நாளும் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அவைகள் பயன் அற்றவைகளாக தங்களுடைய நோக்கத்திலே தோற்றுவிட்டனவாகத்தான் நான் காண்கிறேன் என்று அவர் எழுதியிருக்கிறார். ஆகவே இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லுவதற்கு காரணம் என்ன என்று சொன்னால், மனு நீதி நாள் என்று சொல்லி போகின்றபோது அங்கே வருகின்ற அதிகாரிகள் முடிவு எடுக்கின்ற அதிகாரிகளாக இல்லை, அவர்கள் முடிவு எடுத்து அறிவிக்கின்ற அளவுக்கு அதிகாரம் படைத்தவர்களாக இல்லை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வரவேண்டும் என்று இருந்தாலும் பல நேரங்களிலே வருவது இல்லை.

நிலம், நீர், பட்டா இவைகள் சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் கவனிக்கப்படுவதும் இல்லை. அதைப்போல இந்த துயர் தீர்க்கும் நாளிலே திங்கட்கிழமைகளிலே கொடுக்கப்படுவதற்கு அதற்கு ஏதாவது ஸ்பெசல் டிரீட்மெண்டு இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. இவைகள் எல்லாம் நான் சொல்வது ''அம்புரோஸ் கமிட்டி''-யிலிருந்து நான் எடுத்துச் சொல்கிறேன். அரசாங்கம் நியமித்த கமிட்டியிலிருந்து எல்லா அதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்டு இருக்கின்ற குறிப்பைச் சொல்கிறேன்.

1990 ஏப்ரல் 26] [திரு. குமரி அனந்தன்]

சந்தானம் கமிட்டி என்ன சொல்லுகிறது என்றால் ஒரு பணியை எடுத்துக்கொண்டால் அந்தப் பணி இவ்வளவு நாட்களுக்குள் முடிய வேண்டும் என்று, there must be a time limit இல்லை என்று சொன்னால் அந்தப் பணி இழுத்துக்கொண்டே போகிறது.

12-15 மணி

இன்னும் ஒன்று என்ன சொல்கிறார் என்றால் பேப்பர் ஒர்க் அதிகமாக இருக்கிறது. இந்த நாட்டு மக்கள் எளியவர்களாக இருக்கின்ற காரணத்தால் எதை யாரிடம் கேட்க வேண்டும் என்று தெரியாமல் இருக்கின்ற காரணத்தால் நாங்கள் தெரிந்து சொல்கிறேன் என்று சொல்லுவதற்கு ஒரு இடைத் தரகர் அங்கே உட்காருகிறார். ஊழல் அங்கே தான் முளைக்க ஆரம்பிக்கிறது. ஆகவே, ஒரு தகவல் தெரிய வேண்டும் என்று சொன்னால் '' இட் இஸ் சேலபிள் '' என்று தான் வருகிறது. அது விற்பனைக்கு இருக்கிறதே தவிர அது தானே கிடைப்பதாக இல்லை. அவருக்கு ஏதோ காசு கொடுக்கவேண்டும் அப்போதுதான் அந்தத் தகவலை அவர் கேட்டு தெரிந்து கொள்வார். அதற்கு பதிலாக சந்தானம் கமிட்டி என்ன சொல்லுகிறது என்றால், Information must be made available to public on request பப்ளிக் கேட்கிறார் என்றால் அந்தத் தகவலை எது எது, என்ன என்ன இடத்திலே, எங்கெங்கே நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லுகின்ற தகவல்கள் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்பினால் அந்தத் தகவல்களைக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகின்ற அந்த சந்தானம் கமிட்டி ரிப்போர்ட் இருக்கிறது. இந்த பழைய ரிப்போர்ட்டுகளை எல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால் புதுப் புது கருத்துக்கள் வருவதற்கு முன்னால் புதுப் புது உணவுகளை உண்பதற்கு முன்னால் ஏற்கனவே உண்ட உணவு செரித்து விட்டதா என்று பார்த்தாலே மனிதனுக்கு நோயே இல்லை என்று வள்ளுவர் எழுதுகிறார். ஆகவே, ஏற்கெனவே சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவைகள் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டனவா என்று கேட்கின்ற அளவுக்கு இதனை வைக்கிறேன். ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். இரண்டு பேரும் இணைந்து செயல்பட வேண்டிய ஒரு இடம் இந்த மாவட்ட நிர்வாகம். இந்த மாவட்ட நிர்வாகத்திலே ஒருவரோடு ஒருவர் தோழமைக் கொண்டும் பயன்பட்டும், பயனைப் பெற்றும் இந்த இரண்டு பேரும் செம்மையாக இருந்தார்கள் என்று சொன்னால் எந்தப் பிரச்சினையும் இல்லை. சின்ன உதாரணத்திற்குச் சொல்கிறேன், வளர்ச்சித் திட்டங்கள் சரியாக நடைபெறவில்லை என்றால், வறுமை வருமானால் கொலை நடக்கிறது; கொள்ளை நடக்கிறது; வழிப்பறி நடக்கிறது; இவைகள் அத்தனையும் நடக்கிறது. இப்போது பல இடங்களிலே நீங்கள் பார்க்கலாம் இதெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. வளர்ச்சித் திட்டம் சரியாக இருந்தாலும்

கூட சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படவில்லையென்றால், கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற கும்பல், சங்கிலி பறிக்கின்ற கும்பல் இவைகளெல்லாம் அதிகரிக்குமேயானால் நிம்மதியாக ஒருவன் பூட்டை பூட்டிக்கொண்டு கூட வெளியே வர முடியாது. முக மூடிக் கொள்ளை நடக்கிறது. வளர்ச்சி ஒரு பக்கம் நடந்து கொண்டே இருக்கவேண்டும். இன்னொரு பக்கம் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுகின்ற காரியம் நடைபெற்றுக்கொண்டே இருக்க வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கிணைத்துச் செய் கின்ற ஒரு இடமாக அமைய வேண்டியது எது என்று சொன்னால் மாவட்ட நிர்வாகம். நாம் சில புதிய திட்டங்களைப் போடுகின் றோம். கிராம மணியக்காரர் என்று சொல்கிற ஒன்று, அதைப் போல மணியக்காரர் என்று சொல்கின்ற ஒருவர், இவர்க ளெல்லாம் இருந்துகொண்டிருந்தார்கள். இந்த இரண்டு பேரை யும் நாம் மாற்றுவதற்கு பல காரணங்கள் இருந்து கொண்டிருக்க லாம், ஏறத்தாழ 24 ஆயிரம் பேர் மாற்றப்பட்டதற்கு ஒரு காரணம் இருந்து இருக்கலாம்.

ஆனாலும்கூட இவர்களை மாற்றுகின்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சராக இருந்த எம்.ஜி. ஆர். என்ன சொன்னார் என்றால் மாற்றப்படுகின்றவர் களிலே, அவர்கள் இனிமேல் வேலைக்கு வாய்ப்பு இல்லாதவர்களாக இருக்கின்றவர்களாக இருந் தால் அவர்களுக்கு ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து விடு வோம். அவர்களிலேகூட படித்தவர்கள் இருந்தால் அவர்களை நாம் திருப்பி வேலைக்கு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னார். அப்படி செய்வதற்கும் இந்த மணியக்காரர், கர்ணம் போன்றவர் களிலே சிலராவது இருக்கவேண்டுமென்பதற்கு என்ன காரணம் என்று சொன்னால் மிகப் பழமையானவர்களாக அந்த ஊரிலே யிருந்து பழகியவர்களாக, எது எது எங்கெங்கு இருக்கிறது என்று தெரிந்தவர்களாக அவர்கள்தான் இருக்கிறார்கள். கவுரவம் மிக்க வர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் கைநீட்டி ஒரு 50 ரூபாய் வாங்குவதற்குக்கூட கூச்சப்படுவார்கள். ஏனென்றால், தொன்று தொட்டு, அந்த ஊரிலே பரம்பரையாக, இருந்துகொண்டிருக் கின்றவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். இன்று புதிது புதிதாக வருகின்றவர்களை நாம் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்கள் சரியாக பயிற்சி பெறாத காரணத்தினாலே நிலம் எங்கே இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. எல்லா நிலங்களும் ஒன்றுபோல தோன்றுகிறது அவர்களுக்கு, வயலாக இருந்தால், வயல்கள் ஒன்றுபோல தோன்றுகிறது. என்ன வித்தியாசம் என்று பார்க்கிறார். இந்த வயலிலே 5 பனை இருக் கிறது ; அந்த வயலிலே 4 பனை இருக்கிறது என்று சொல்கின்ற போது என்றாவது ஒரு நாள் 5 பனை இருக்கின்ற இடத்திலே ஒரு பனையை வெட்டிவிட்டால் இந்த நிலம் யாருக்கு என்று அவருக்குத் தெரியாது. இந்த அளவிற்கு அவருக்குப் பழக்கம், பயிற்சி, அங்கேயிருக்கின்ற நடைமுறைகள் தெரியாமல் இருக் கின்ற காரணத்தினாலே பல பிரச்சினைகள் எழுகின்றன. இப் போது எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால், பட்டா

புதுப்பிப்பது என்று சொல்கிறோம். யூ.டி.ஆர். என்று சொல்லப்படுகின்ற சிஸ்டத்தின்படி தூரத்திலே நின்றுகொண்டு அது யாருடைய நிலம் என்று சொன்னால் ராமன் நிலம், லட்சுமணன் நிலம் என்று எழுதிவிட்டுப் போய் விடுகிறார். நீங்கள் கிராமப் புறங்களிலே போய் பார்த்தீர்கள் என்று சொன்னால் இந்த அப்—டேட்டிங் இருக்கிறதே இப்போது தற்கால நிலையிலே இன்றளவு என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்கு என்று பட்டா போட்டு வைத்திருக்கின்ற விஷயத்தைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் பலருடைய நிலம் கால்மாறி போய் கிடக்கிறது. யாருடைய நிலமோ யாருக்கோ போய் கிடக்கிறது. கிராமங்களிலே பல குழப்பங்களுக்கு அது காரணமாக இருக்கிறது. இவைகளையெல்லாம் சிந்திக்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

அதைப்போல இங்கே ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்கிறேன். இரண்டு மூன்று அதிகாரிகள் தவறு செய்கின்ற காரணத்தினாலே என்ன நடக்கிறது என்று பாருங்கள்; ஏற்கெனவே ரெஜினாமேரி என்று சொல்கிற பெண்ணினுடைய நிலம் இப்போது வெற்றிச்செல்வன் என்பவருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. சர்வே நெம்பர் 214/1, 214/2 முத்துக்குமாரசாமி என்பவருடைய நிலம் முத்துக்குமரனுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. சர்வே நெம்பர் 64/1 மோகன்லால் என்பவருடைய நிலம் கிருஷ்ணசாமிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு பெரிய பட்டியலையே நான் வைத்திருக்கிறேன். பட்டியல் முழுவதும் படிப்பது என்று சொன்னால் எனக்கு நேரம் போய்விடும் என்கின்ற காரணத்திற்கு, கிராமப் பொது மக்கள், விஜயமாநகரம் அஞ்சல், விருத்தாச்சலம் வட்டம் என்று இருக்கிறது. இதுகுறித்து உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். தவறு நடந்து இருக்கிறது. சில அதிகாரிகளால் தவறு நடந்து இருக்கிறது. அதனை சுட்டிக்காட்டுவதற்காக பொது மக்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், ஊராட்சி மன்ற தலைவருடைய தலைமையிலேயே உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கலெக்டர் முதற்கொண்டு இதை காதுகொடுத்து கேட்கவில்லை என்று சொன்னால் அவர்களுக்கு வெறுப்பு வரத்தானேச் செய்யும். வெறுப்பு வளருகின்ற நேரத்திலே அதிகாரிகளை அவர்கள் எப்படி நடத்துவார்கள் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காக இதனை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, இங்கிருந்து அதிகாரிகள் போவதைப்பற்றிச் சொன்னார்கள். அதிகாரிகளாக இருக்கட்டும் குறிப்பாக அமைச்சர்களாக இருக்கட்டும், அவர்கள் புறப்பட்டு சென்றார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கவேண்டியிருக்கிறது. நான் சொல்வதற்காக யாருமே குறை கண்டுவிடக்கூடாது. கோபப்பட்டு விடவேண்டாம். இங்கே ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு காகிதம் இருந்தது என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டிலே வந்ததற்குப் பின்னாலே, அந்தக் காகிதத்திலே ஒரு பக்கம் கவிதை எழுதினார்கள். நான் பிரரேபிக்கிறேன் என்று ஒருவர் சொல்வார். வாய் தவறி பிரசுரிக்கிறேன் என்று கூட

சொல்லிவிடக்கூடும். அதை நான் முன்மொழிகிறேன் என்றெல்லாம் மிக அழகாகக் கொண்டு வந்தார்கள், பாராட்டுகிறேன். இப்படி கவிதை எழுதியது ஒரு பக்கம், கண்டபடி எழுதியது இன்னொரு பக்கம். ஏன் இதனை சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு விழா நடைபெறுகிறது என்று சொன்னால், அதற்கு ஆளுயர சுவரொட்டி, அடுக்கடுக்கான, ஆயிரக்கணக்கான குழல் விளக்குகள், இப்படிப்பட்ட மேடை, ஜிகினா வேலை, மின்சார சரவிளக்குகள், இவைகளெல்லாம் பெரிதும் வந்தது, உண்மையை ஒத்துக்கொள்வதாக இருந்தால், சரித்திரத்தைப் பார்த்துக் கொண்டு வந்தால் நமது திராவிட முன்னேற்றக் கழகம் பிரபலமானதற்குப் பிறகு அல்லது அதன்மூலமே பிரபலமானது என்று கூட சொல்லலாம். அதனாலே என்ன ஆயிற்று ? இப்போது யார் வேண்டுமென்றாலும், ஆள் உயர சுவரொட்டி அடிக்க வேண்டியிருக்கிறது; யார் வேண்டுமென்றாலும், அந்த விழா என்று சொன்னால், அதற்குத் தகுந்தவாறு காரியம் செய்கிறான். அமைச்சர் வருகிறார்; இவ்வளவு துரத்திற்கு இந்த விழாவை நடத்தவில்லை என்று சொன்னால், கோபித்துக் கொள்வாரோ....

12–20 மணி

திரு. அ. இரகுமான்கான்: விழாவினுடைய எளிமை குறித்து. இலக்கியச் செல்வர் இங்கே விளம்பினார். அவர்கள் கட்சியின் சார்பாக, மறைமலை நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு எளிமையின் சின்னம் தானோ ?

திரு. குமரி அனந்தன் : எளிமையின் சின்னம் மட்டுமல்ல; பெருமையின் சின்னமும் கூட. அருமைக்குரிய நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். நான் அவர்களுக்கு சொன்னேன். நீங்கள் வந்ததற்குப் பின்னர், அந்த கலாச்சாரம் பரவிற்று. மற்றவர்களும் செய்கின்ற சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்று சொன்னேன். அதை என்னுடைய பேச்சுக் குறிப்பில் பாருங்கள்; நான் மிகுந்த எச்சரிக்கையோடு பேசிக் கொண்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் நேரம் குறைவாக இருக்கிற காரணத்தினாலே; வேறு எதுவும் இல்லை. ஆதலாலே, அப்படி ஒரு கலாசாரம் பரவி இருக்கிறது என்பதற்காக சொல்லவந்தேன். ஆகவே, இப்பொழுது என்ன? ஒரு அமைச்சர் வந்தால், அவருக்கு வரவேற்பு கொடுக்க வேண்டுமென்றால், ஊராட்சி ஒன்றியத்திலே 250 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த 250 ரூபாயிலே, மேடை போடுவானா ? விளக்கு அமைப்பானா ? பந்தல் போடுவானா ? விருந்து கொடுப்பானா ? சுவரொட்டி அடிப்பானா ? எது செய்ய முடியும் ? உடனடியாக அவன் என்ன செய்கிறான் ? அவன் திரும்புகின்ற இடம் காண்ட்ராக்ட் தான். காண்டிராக்ட்டரிடம் திரும்புவதாக இருந்தால், காண்டிராக்ட் கொடுக்கின்ற இடம் 'சிமெண்ட்' தான். அதனாலே அவன் கட்டுகின்ற அந்த

1990 ஏப்ரல் 26] *[திரு. குமரி அனந்தன்]*

தொகுப்பு வீடு என்ன ஆகிறது என்பதைப் பார்த்தால், கட்டி முடிந்து, உடனேயே சுவர் வாய் பிளக்கிறது; ரொம்பவும் கேட்டால், அது வாய் திறந்து சொல்லும்; என்ன காரணத்திற்காக நான் இதைக் குறைத்தேன் என்று. பனங் கொம்பு போட்டு விட்ட காரணத்தினாலேதான், கெட்டுப் போய் விட்டது என்று சொல்கிறான். பிஞ்சு பன மரத்தை, வீட்டு மேலே போட்டால் அப்படித்தான் வளையும். மேட்டுத் தளை வளைந்து கொடுக்கும் என்னுடைய வீட்டிலே மாடி இருக்கிறது. அந்த மாடி, நான் சின்னஞ்சிறு வயதாக இருந்தபோது கட்டியது. பன மரம்தான் போட்டு இருக்கிறார்கள் அங்கே. இன்னும், தேக்கை விட உறுதியாக நின்று கொண்டிருக்கிறது. அந்த வைரம் பாய்கிறபோது இன்னும் உறுதியாக நின்று கொண்டிருக்கிறது. இந்த கான்டிராக்டர் போடுவது மட்டும் ஏன் வளைகிறது? பிஞ்சு பனைமரம்; இல்லையென்று சொன்னால், வைரம் பாயாத பனை மரம். அதேபோல் கதவு உடைகிறது; ஜன்னல் கீழே விழுகிறது என்று சொன்னால் எங்கோ பணத்தைக் கொண்டு செலவிடுகிறார்கள். எங்கோ மட்டும் என்று நான் சொல்லவில்லை. அவர்களும் தவறு செய்வதற்கு காரணம் இருக்கிறது. அவன் தவறு செய்வதை தட்டிக் கேட்க முடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன என்று சொன்னால், 'நீ கட்டிக் கொடு இந்த மேடையை; நீ போட்டுக் கொடு இந்த பந்தலை, என்று எப்போது சொல்கிறோமோ, அப்போதே நாம் அவரை தட்டிக் கேட்க முடியாதவராகப் போய் விடுகிறோம். இன்னும் ஒன்று.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : இன்னும் 5 மணித் துளிகள் தான் இருக்கின்றன.

திரு. குமரி அனந்தன் : வெறும் வர்ணனையே நான் சொல்லவில்லையே. எனக்கு எந்த நேரம் வருகிறது என்று நீங்கள் 2 மணி அடிக்கிறீர்களோ, அப்போது அந்த இடத்திலேயே, பாதி இருந்தால் கூட, விட்டு விடுகிறேன்.

அதனாலே, நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். 'அப்ரோப்ரியேட் டெக்னாலஜி'—அங்கிருந்து பணம் வருகிறது; வருகிற பணத்தை, ராஜீவ் காந்தியே நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி விட்டார் என்று சொன்னோம். என்ன காரணம் அனுப்பியதற்கு? ஒரு மாநில அரசாங்கத்திற்கு அந்தப் பணம் வருகிறது என்றால், உடனேயே அது நிதி இலாகாவுக்குப் போகிறது. நிதி இலாகாவுக்குப் போகிறது என்றால்,—அந்த ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு வருகிறதா அடுத்தாற் போலே என்றால், இல்லை. அதற்கு காலதாமதம் ஆகிறது. அதுவரை பணம் எங்கே முடங்கி கிடக்கின்றது? எனவே, அங்கு போகட்டும் என்று சொன்னார். போகட்டும் என்று சொன்னது மட்டுமல்ல, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தலை எண்ணி பணம் கொடுக்கப்பட்டது. அதிலே

'பிரையாரிடி'யை முடிவு செய்வது என்று பஞ்சாயத்து தலைவருக்கு ஒதுக்கப்பட்டது. ஏனென்று சொன்னால், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த மாவட்டத்தினுடைய நிர்வாகத்தினுடைய பொறுப்பிலே கொடுக்கின்ற போது, தடங்கல் இல்லாமல் நேரடியாக அந்த மக்களுக்குப் போய் சேர்கின்ற ஒரு சூழ்நிலை வருகிறது. இப்படியெல்லாம், அதிகாரிகளைப் போட்டு நாம் நல்ல முறையிலே பண்ண வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் காரியத்தைச் செய்தோம். இனிமேல் அது என்ன ஆகப் போகிறதோ என்பது எனக்குத் தெரியாது. ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். அருமைக்குரிய பெருமக்களே, இந்த ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் எல்லாம், இந்தப் பணியிலே இருக்கிறவர்கள் எல்லாம், யூ.பி.எஸ்.சி.-யிலே ஐ.ஏ.எஸ். தவிர, இங்கே இருக்கின்ற டெபுடி கலெக்டர்ஸ், சப் கலெக்டர்ஸ் என்ற 'ரேங்க்'கில் வருகிறவர்கள் எல்லாம், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே இருந்து வருகிறார்கள். அந்த தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே என்ன கேள்வி கேட்கப்படுகிறது தெரியுமா? டெபுடி கலெக்டர்ஸ், சப் கலெக்டர்ஸ்களிடம் ''ஃபோபர்ஸ் பேரம்'' பற்றி எழுது என்று, இந்த பேரம் பற்றி எழுத, அந்தப் பாட்டன் ஏன் கேட்கிறான்? என்ன தேவை அங்கே ஏற்படுகிறது? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு என்ன காரணம்? ஆட்சி மாறி விட்டது என்பதற்காக, எல்லா கட்சிகளையும் மாற்றக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அருமைக்குரிய பெருமக்களே, ஒரு இடத்திலே கலவரம் நடக்கிறது என்றால், அந்த கலவரத்தை எப்படி நிறுத்துவது, அது எப்படி வந்தது என்று பார்க்க வேண்டும். இனிமேல் வராமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். அதையெல்லாம் சிந்திக்கிறோமா? இல்லை. ஒரு சிறு பொறியாக இருக்கிறது. அதை நாம் விரைந்து ஆய்ந்து பார்த்திருப்போமேயானால், அவையெல்லாம் அங்கேயே அழிக்கப்படும். தஞ்சாவூரிலே தியாகிகள் ஸ்தூபியை யாரோ அடித்து நொறுக்குகிறார்கள் என்று சொன்னார்கள். எரித்தார்கள் என்று சொன்னார்கள். முதலிலே எரித்தார்கள், பிறகு, அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். முதலிலே அது எரியுண்ட போது அது எப்படி இருந்தது என்றால் புகை இருந்தது.

12-25 மணி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தீ போட்டிருக்கிற அடையாளம் இருந்தது; அப்படி என்றால் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் இருக்கிற அத்தனை அங்கங்களும் என்ன சொன்னது தெரியுமா? ரிக்ஷாக்காரர்கள் குளிர் காய்வதற்காக டயரை எரித்தார்கள். அதனால் வந்தது என்று சொன்னார்கள். கொஞ்ச நாள் கழித்து அடித்து நொறுக்கப்பட்டதா? இல்லையா? அன்றைக்கே ஆய்ந்து இருந்தால் அது நடந்திருக்குமா? இல்லையா?

திருப்பத்தூருக்கு நான் அண்மையில் சென்றிருந்தேன் அங்கே ஒரு கூட்டம். ராமகிருஷ்ணன் என்பவர், நான் பிரபாகரனைச் சந்தித்துப் பேசினேன். எனவே அங்கே நடப்பதை எடுத்துச் சொல்கிறேன் என்று சொல்கிறார். அந்த மேடையிலே என்ன படம் வைக்கப்பட்டு இருக்கிறது தெரியுமா ? ஒன்று பிரபாகரன். இன்னொன்று நமது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞருடைய படம். அதனுடைய தலைப்பு என்ன தெரியுமா? 'ஈழத்தின் எழுச்சியும், இயலாத தமிழகமும்'. இப்படி ஈழத்தின் எழுச்சியும், இயலாத தமிழகமும் என்று அங்கே போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன செய்துகொண்டிருக்கிறார். அது எந்த மாவட்டமாகவும் இருக்கட்டும். உங்களுடைய கண்ணாக, காதாக இருக்கிற ஒற்றர்களை வைத்துக் கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள்: இந்த நாட்டிலே பிரிவினை வாதம் செய்வதற்கு விதை ஊன்றுகிறவர்களைப் பிடித்துப் போடுவதற்கோ அல்லது பிடித்துப் போட வேண்டுமா என்று கேட்பதற்கோ உங்களால் ஏன் முடியவில்லை. நான் கேட்கிறேன். கடற்கரை எல்லை முழுவதும் இன்று பாதுகாப்பற்றுக் கிடக்கிறது. புலிகள் இங்கே வந்து போகிறார்கள். இங்கே இருக்கிற மீனவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். நாம் தமிழ் இனம் என்று சொல்கிறோமே அந்த ஈழத்தில் இருந்து வருகிற தமிழர்களிடமும் வரி வசூலிக்கிறார்கள். கேட்டால் இலங்கை மந்திரி பேசுகிறார், புலி புல்லையா தின்னும். எனவே, வரி வசூலிக்கிறார்கள் என்று சொல்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது ? ஆண்டாண்டு காலமாக தமிழ்க் குலத்திற்கு விரோதமாக இருந்த சிங்களவர்கள் அவர்களோடு சேர்ந்துவிட்டார்கள். அவர்கள் கடற்கரையில் உலா வருகிறார்கள். மாவட்ட நிர்வாகம் என்ன செய்து கொண்டிருக்கிறது ? என்ன வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்த அவையிலே நான் சொன்னேன். உங்களை எல்லாம் பயன்படுத்தி காரியங்கள் செய்கிறார்கள் என்று சொன்னேன். நீங்களே சிந்தித்துப் பாருங்கள். மதுரையிலே கூட்டம் நடந்திருக்கிறது. கொடைக்கானலிலே அந்தத் தொலைக் காட்சி நிலையத்தை வெடி வைத்துத் தகர்த்தவர்களுக்குப் பாராட்டு. அதிலே மறைந்தவருக்கு பாராட்டு. பாராட்டுவது யார் ? எத்தனை பேர் பாராட்டுகிறார்கள் ? அதைப் போலவே இந்த இரயில் தண்டவாளத்தை.. ...

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே மானியங்களின் மீது பேசுவதற்கு பதிலாக இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசுகிறார். பரவாயில்லை. பேசட்டும். அவர் குறிப்பிடுகிற அந்த வெடி குண்டுச் சம்பவம்—கழகத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் பலாத்காரத்தில் நம்பிக்கை வைக்கவில்லை—பற்றி, புலிகளின் செயல்கள் பற்றி கடுமையாக விமர்சிக்கிறார்.

அவரை நான் கேட்கிறேன். இந்த தேசத்தினுடைய விடுதலைக்காக பகத்சிங் பாராளுமன்றத்திலே வெடிகுண்டு வைத்து தூக்குக் கயிற்றை முத்தமிட்டானே, அவனைத் துரோகி என்று சொல்கிறாரா ?

திரு. குமரி அனந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகத்சிங்கினுடைய வீரம், அவனுக்கு ஜனநாயகம் கிட்டாத போது அவனுக்கு பேலட் பேப்பர் கிட்டாதபோது; அதைப்போல வாஞ்சிநாதன் பேரிலேயும்,.... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடுகள்) மிக முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடுகள்).

8. விதி 110-ன் கீழ் பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை.

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ள கருத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் ஓர் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இன்று காலை உச்சநீதிமன்றத்தில் காவிரி பிரச்சினை தொடர்பான வழக்கில் மத்திய அரசின் சார்பில் பின்வரும் கருத்து நீதிபதிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்று இதுவரையில் எண்ணியிருந்தோம். ஆனால் இப்போது உருவாகியுள்ள நிலையில் இதை உச்ச நீதிமன்றத்தின் முடிவுக்கே விட்டுவிடுகிறோம். இவ்வாறு மத்திய அரசின் சார்பில் கூறப்பட்டுள்ளது. உருவாகியுள்ள சூழ்நிலையை மத்திய அரசு ஒப்புக்கொண்டு உண்மை நிலையை எடுத்துரைக்கக் கோரி 24—4—1990 அன்று இந்த மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு மதிப்பளித்தமை குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

7. மானியக் கோரிக்கைகள், 1990–91-விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குமரி அனந்தன் அவர்களுக்குச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் நடைபெற்ற கொடைக்கானல் வெடிகுண்டுச் சம்பவம், மற்றைய துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆகியவற்றுக்கும் பிரபாகரன் தலைமையில் இயங்குகிற விடுதலைப்

அவரை நான் கேட்கிறேன். இந்த தேசத்தினுடைய விடுதலைக்காக பகத்சிங் பாராளுமன்றத்திலே வெடிகுண்டு வைத்து தூக்குக் கயிற்றை முத்தமிட்டானே, அவனைத் துரோகி என்று சொல்கிறாரா ?

திரு. குமரி அனந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகத்சிங்கினுடைய வீரம், அவனுக்கு ஜனநாயகம் கிட்டாத போது அவனுக்கு பேலட் பேப்பர் கிட்டாதபோது; அதைப்போல வாஞ்சிநாதன் பேரிலேயும்,.... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடுகள்) மிக முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடுகள்).

8. விதி 110-ன் கீழ் பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை.

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ள கருத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் ஓர் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இன்று காலை உச்சநீதிமன்றத்தில் காவிரி பிரச்சினை தொடர்பான வழக்கில் மத்திய அரசின் சார்பில் பின்வரும் கருத்து நீதிபதிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்று இதுவரையில் எண்ணியிருந்தோம். ஆனால் இப்போது உருவாகியுள்ள நிலையில் இதை உச்ச நீதிமன்றத்தின் முடிவுக்கே விட்டுவிடுகிறோம். இவ்வாறு மத்திய அரசின் சார்பில் கூறப்பட்டுள்ளது. உருவாகியுள்ள சூழ்நிலையை மத்திய அரசு ஒப்புக்கொண்டு உண்மை நிலையை எடுத்துரைக்கக் கோரி 24—4—1990 அன்று இந்த மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு மதிப்பளித்தமை குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

7. மானியக் கோரிக்கைகள், 1990–91-விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குமரி அனந்தன் அவர்களுக்குச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் நடைபெற்ற கொடைக்கானல் வெடிகுண்டுச் சம்பவம், மற்றைய துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆகியவற்றுக்கும் பிரபாகரன் தலைமையில் இயங்குகிற விடுதலைப்

14-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ், ரூ. 401,88,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

9. அரசினர் தீர்மானம்

பேரவைக் கூட்டம் ஒத்தி வைக்கப் பெற்று, 2—5—1990 அன்று மீண்டும் கூடுவது குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''பேரவை விதி 25 (1) இன்படி பேரவை இன்று ஒத்தி வைக்கப் பெற்று மீண்டும் 2–5–1990 புதன்கிழமை அன்று கூடும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 2–5–1990 காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14–51 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

77. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நலச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ பேரவை முன் வைக்கப் பெற்றது.)

14-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ், ரூ. 401,88,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

9. அரசினர் தீர்மானம்

பேரவைக் கூட்டம் ஒத்தி வைக்கப் பெற்று, 2—5—1990 அன்று மீண்டும் கூடுவது குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''பேரவை விதி 25 (1) இன்படி பேரவை இன்று ஒத்தி வைக்கப் பெற்று மீண்டும் 2-5-1990 புதன்கிழமை அன்று கூடும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 2-5-1990 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14-51 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

77. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நலச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ பேரவை முன் வைக்கப் பெற்றது.)

1990 ஏப்ரல் 26]

78. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

79. சேரன் பொறியியற் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது.)

80. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

81. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

82. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

83. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

145. கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனையவரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

146. கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

147. கோரிக்கை எண் 43—பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

1990 ஏப்ரல் 26]

78. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

79. சேரன் பொறியியற் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது.)

80. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

81. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

82. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

83. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

145. கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனையவரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

146. கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

147. கோரிக்கை எண் 43—பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

148. கோரிக்கை எண் 43—அகதிகள், தாயகம் திரும்பியோர், குடிபெயர்ந்தோர் துயர் தணிப்பும் மறுவாழ்வும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

149. கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

150. கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

151. மறுவாழ்வுத் துறை குறித்த சாதனைத் திட்டம், 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

152. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை, 1989–90.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்புகள்.

(84-ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண். 4.

தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், ஏனைய வரிச் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் விற்பனை வரியாக வசூலிக்கப் பட்ட தொகை 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 1,502.73 கோடி யாகும். 1989–90 ஆம் ஆண்டில் வணிக வரிகள் வாயிலாக ரூ. 1,759.02 கோடி வருவாய் கிட்டியது. இது கடந்த ஆண் டினைக் காட்டிலும் ரூ. 256.29 கோடி, அதாவது 17 சதவிகிதம் அதிகமாகும்.

2. வணிக வரித் துறை பின்வரும் வரி விதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது:—

1. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

2. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

3. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரிச்) சட்டம்.

4. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

5. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

6. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

7. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

8. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள்-தங்கும் விடுதி களில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

9. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.

10. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு மோட்டார் வாகன நுழைவு வரி அவசரச் சட்டம் (20–2–1990 முதல் அமலில் உள்ளது).

3. கடந்த ஆறு ஆண்டுகவில் வணிக வரித்துறை வசூல் செய்த வருவாயும் அதற்காக இத் துறைக்கு ஏற்பட்ட செலவும் வருமாறு:—

ஆண்டு.		வருவாய்.	செலவு.
(1)		(2)	(3)
		(ரூபாய் கோடியில்.)	
1984–85	...	905.32	12.32
1985–86	...	1,035.13	13.80
1986–87	...	1,172.44	15.58
1987–88	...	1,313.49	17.35
1988–89	...	1,502.73	20.77
1989–90	...	1,759.02	23.28

4. வணிக வரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல்:

வணிக வரி அலுவலகங்களுக்கு வரும் வணிகப் பெருமக்களுக்கும் வணிக வரித் துறை பணியாளர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் படிப்படியாக கட்டிடங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. இதுவரை, நிருவாகம் மற்றும் செயலாக்கம் ஆகிய இரு பிரிவுகளிலுமுள்ள எல்லா துணை வணிக வரி அலுவலர் அலுவலகங்களுக்கும், புதுக்கோட்டை, அருப்புக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை, கரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய ஆறு வட்டார உதவி ஆணையர்கள் நீங்கலாக ஏனைய வட்டார உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும்; விழுப்புரம் நீங்கலாக ஏனைய செயலாக்கப் பிரிவு உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும், அரசுக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 284 வரி விதிப்பு வட்டங்களில் 109 வட்டங்கள் அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன.

1989–90 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள புதுக்கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு கட்டுமான வேலை நடந்து வருகிறது:—

(1) திருச்சிராப்பள்ளி நீதிமன்றங்கள் கட்டிட வளாகத்தினுள் உள்ள வணிக வரி அலுவலகக் கட்டிடத்திற்கு ரூ. 23 இலட்சம் செலவில் ஒரு கூடுதல் கட்டிடம்.

(2) தூத்துக்குடியில் உள்ள வணிக வரி அலுவலகக் கட்டிடத்திற்கு ரூ. 13.60 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடம்.

(3) இராசிபுரத்தில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தினுள் தற்போதுள்ள வணிக வரி அலுவலகக் கட்டிடத்தில் ரூ. 10.50 இலட்சம் செலவில் இரண்டாவது மாடி அமைத்தல்.

(4) சங்ககிரியில் தற்போதுள்ள வணிக வரி அலுவலகக் கட்டிடத்தில் ரூ. 12.10 இலட்சம் செலவில் கூடுதலாக முதல் மாடி அமைத்தல்.

அரசு கீழ்க் குறிப்பிட்டுள்ள புதுக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஒப்புதலளித்து அவைகளின் கட்டுமானப் பணி விரைவில் துவக்கப்பட உள்ளது.

(1) கரூரில் வணிக வரி வட்ட அலுவலகக் கட்டிடம் ரூ. 36.20 இலட்சம் செலவில் கட்டுதல், சர்வே எண் 305/3-ல் 7,575 சதுர அடி பரப்புள்ள இடம் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(2) சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிக வரி கட்டிடத்திற்கு ரூ. 39.60 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடம்.

5. வணிக வரிச் சோதனைச் சாவடிகள் :

தற்போது தமிழ்நாட்டில் 48 வணிக வரிச் சோதனைச் சாவடிகள் செயல்படுகின்றன. அவற்றுள், பின்வரும் 14 சோதனைச் சாவடிகள் அரசுக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. முதல் 13 சோதனைச் சாவடிகள் நிரந்தரமான அரசுக் கட்டிடங்களிலும் கடைசியில் குறிப்பிட்டுள்ள சோதனைச் சாவடி ஓளவு நிரந்தர அரசுக் கட்டிடத்திலும் செயல்படுகின்றன:

1. இரும்புலியூர்—தாம்பரம்.
2. பூவிருந்தவல்லி.
3. புழல்
4. இராணிப்பேட்டை
5. ஓசூர்
6. கே. ஜி. சாவடி
7. மீனாட்சிபுரம்
8. காட்பாடி

9. சின்ன சேலம்

10. புளியறை

11. சன்னூரப்பட்டி

12. கடம்பர் கோயில்

13. களியக்காவிளை

14. தோப்பூர்.

ஏனைய 34 சோதனைச் சாவடிகள் தனியார் கட்டிடங்களில் அல்லது புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகைகளில் செயல்படுகின்றன. பெரியார் மாவட்டம், பன்னாரியிலுள்ள சோதனைச் சாவடிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பிற்கு அரசு ஒப்புதல் அளித்து கட்டுமானப் பணி விரைவில் தொடங்க இருக்கிறது.

மொத்தமுள்ள 48 சோதனைச் சாவடிகளில் 20 பெரிய சோதனைச் சாவடிகளாகும். அவைகளில் பூவிருந்தவல்லி, ஓசூர், கே.ஜி. சாவடி மற்றும் இராணிப்பேட்டை ஆகியவை இருவழிச் சோதனைச் சாவடிகளாகும்.

6. செய்தி தொடர்பு வசதிகள்:

ஏறக்குறைய எல்லா வரிவிதிப்பு வட்டங்களுக்கும் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், புதிதாக ஏற்படுத்தப்பட்ட வரி விதிப்பு வட்டங்களுக்கு தொலைபேசி வசதி படிப்படியாக செய்து கொடுக்கப்படும்.

7. வரிவிதிப்பு வட்டங்களை வலுப்படுத்துதல், பிரித்தல் மற்றும் சீரமைத்தல்:

மாநிலத்தில் தற்போது 284 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில் 136 துணை வணிக வரி அலுவலர் தலைமையிலும், 142 வணிகவரி அலுவலரின் தலைமையிலும் ஏனைய 6 வணிக வரி உதவி ஆணையரின் தலைமையிலும் இயங்குகின்றன.

வரிவிதிப்புத் தரத்தை உயர்த்தும் நோக்குடன், இதுவரை துணை வணிகவரி அலுவலரின் தலைமையில் இயங்கி வந்த 21 அதிக வேலை பளுவுள்ள வரி விதிப்பு வட்டங்கள் இனி வணிக வரி அலுவலர் தலைமையில் இயங்கும் வரிவிதிப்பு வட்டங்களாக தகுதி உயர்த்தப்பட அரசு அனுமதி அளித்துள்ளது. இதனால் அதிக வரி பளுவுள்ள வரி விதிப்பு வட்டங்களில் உள்ள வணிகர்களின் கணக்குகள் உயர்நிலை அலுவலரால் தணிக்கை செய்யப்படவும் அதன் அடிப்படையில் வரி விதிப்பு செய்யப்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 26]

மேலும், வருவாய் நிலையை மேம்படுத்தவும் மற்றும் வரி ஏய்ப்பை பயனுள்ள முறையில் தடுக்கும் நோக்குடனும், வரி விதிப்பு வட்டங்களில் வேலைப்பளு அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகிறது. மேற்சொன்ன ஆய்வின் அடிப்படையில் 1986இல் 10 புதிய வரி விதிப்பு வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. வணிக வரி ஆணையர், வரி விதிப்பு வேலை அதிகமாகவுள்ள வட்டங்கள் என்று கருதி 34 வரி விதிப்பு வட்டங்களை இரண்டாகப் பிரித்து தேவையான அலுவலர்கள் அனுமதிக்கப்படலாம் என குறிப்பிட்டுள்ளார். அவைகளில் 1990–91ஆம் ஆண்டில் வரி விதிப்பு வேலை மிகவும் அதிகமாக உள்ள 19 வரி விதிப்பு வட்டங்களைப் பிரித்து 17 புதிய வரி விதிப்பு வட்டங்களைத் தேவையான குறைந்தபட்ச அலுவலர்களுடன் உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

சோதனைச் சாவடிகள் பற்றி ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் அறிக்கையில் துணை வணிக வரி அலுவலரின் தலைமையில் தற்போது செயல்படும் பெரிய மற்றும் முக்கிய சோதனைச் சாவடிகள் அவைகளின் தன்மை மற்றும் வேலைப்பளு இவைகளைக் கருத்தில் கொண்டு இனி வணிக வரி அலுவலரின் தலைமையில் இயங்கும் சோதனைச் சாவடிகளாக மாற்றப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது. இதனடிப்படையில், 1990–91இல் 9 பெரிய சோதனைச் சாவடிகளை நிர்வகிக்க 9 வணிக வரி அலுவலர் பதவிகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. சிறப்பு மேல்முறையீட்டு மன்றம் அமைத்தல் :

மேற்கு வங்காள மாநிலத்தில் மட்டுமே செயல்படும் சிறப்பு மேல் முறையீட்டு மன்றத்தை முன் மாதிரியாகக் கொண்டு தமிழ் நாட்டில் ஒன்றை அமைக்கும் நோக்குடன் சிறப்பு அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்தச் சிறப்பு மேல் முறையீட்டு மன்றம் அமைக்கப்பட்டதும் விற்பனை வரி முறையீட்டு வழக்குகள் சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் செல்லாது. மேலும், உயர்நீதிமன்றத்தில் பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கும் விற்பனை வரி வழக்குகள் விரைந்து முடிக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

9. மோட்டார் வாகனங்களின் மீது நுழைவு வரி விதிப்பு :

விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்கவும், வாணிகம் சிதறுவதைத் தடுக்கவும் அரசு, 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு தலப் பகுதிகளில் மோட்டார் வாகனங்கள் நுழைவு வரி அவசரச் சட்டத்தை, (1990ஆம் ஆண்டு தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1) பிறப்பித்துள்ளது. இந்த அவசரச் சட்டம் 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ஆம் நாள் முதல் அமலுக்கு வந்துள்ளது. தமிழ் நாட்டிலுள்ள விற்பனைவரி விகிதத்தை விடக்குறைவானவிற்பனை வரி விகிதமுள்ள மற்ற மாநிலங்களில் வாங்கப்பட்டு 1988 ஆம்

ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு முன் தமிழ்நாட்டுக்குள் விற்பனைக்காகவோ அல்லது உபயோகத்திற்காகவோ எடுத்துவரப்படும் மோட்டார் வாகனங்கள் மீது நுழைவு வரி விதிப்பு செய்யவும் அவ்வரியை வசூல் செய்யவும் இந்த அவசரச் சட்டம் வகை செய்கிறது. மேற்கண்ட அவசரச் சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்த வகை செய்யும் 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு தலப் பகுதிகளில் நுழையும் மோட்டார் வாகனங்களின் மீதான வரி விதிகளையும் அதே நேரத்தில் அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. பல்வேறு வகையான மோட்டார் வாகனங்களின் மீதான வெவ்வேறு நுழைவு வரி விகிதங்கள் அறிவிக்கை எண். II (2)/ வணிக வரி மற்றும் அறநிலையத் துறை 9660/90, நாள் : 20—2—1990இல் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:

	சத வீதம்.
1. மோட்டார் கார்	5
2. வாடகை மோட்டார் கார்	15
3. ஒப்பந்த (Omni Bus) மோட்டார் பேருந்துகள் ...	15
4. மோட்டார் வாகனங்களின் அடிச் சட்டம் (Chassis). ..	6
5. மோட்டார் வாகனங்களின் அடிச் சட்டத்தின் மேல் கட்டப்பட்ட கூடு.	8
6. ஆட்டோ ரிக்ஷா	15
7. மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர்/மொபெட் (எஞ்சின் திறன் எதுவாக இருந்தாலும் எல்லா வகை இரண்டு சக்கர வண்டிகள்).	4
8. எஞ்சின் திறன் 2,500 சி.சி.க்கு மேற்பட்டதும் வண்டியின் மொத்த எடை 5,625 கி.கி. வரையிலுமான இலகுவான டீசல் வண்டிகள் மற்றும் இலகுவான வணிக வண்டிகள் (Pickup Van).	8
9. டிரக்கு/பேருந்து/மோட்டார் லாரிகள்	15
10. ஜீப்	8
11. டேங்குகள் கட்டப்பட்ட அல்லது அடிச் சட்டத்தின் மேல் ஏற்றப்பட்ட மோட்டார் வண்டிகள்.	15

1990 ஏப்ரல் 26]

வணிக வரி அலுவலர்கள்/துணை வணிக வரி அலுவலர்கள் ஆகியவர்களைத் தத்தம் வரி விதிப்புப் பகுதிகளில் மோட்டார் வாகனங்களின் மீதான நுழைவு வரி விதிப்பு அலுவலர்களாக செயல்பட அரசு நியமனம் செய்துள்ளது. நிருவாக வணிக வரி உதவி ஆணையர்கள் மேல்முறையீட்டு அதிகாரிகளாக நியமிக் கப்பட்டுள்ளனர்.

10. வணிக வரித் துறை பணியாளர் பயிற்சி நிலையம் :

இப்பயிற்சி நிலையம் 1982ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. வணிக வரிப் பணியாளர்கள் பயிற்சி நிலையத்தின் இயக்குநராகவும் ஆசிரியர் குழுவின் தலைவராகவும் துணை வணிக வரி ஆணையர் ஒருவர் செயல்படுகிறார். வணிக வரித் துறை அலுவலர்களுக்கு இந்நிலையம் பயிற்சியளிக்கிறது. இப் பயிற்சி நிலையம் வணிக வரி அலுவலர்கள்/துணை வணிக வரி அலுவலர்கள்/உதவி வணிக வரி அலுவலர்கள் ஆகியோருக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்புக்களை நடத்துகிறது. மேலும், வணிக வரி அலுவலர்கள் மற்றும் உதவி வணிக வரி அலுவலர்கள் ஆகியோருக்கு ஆறு வார காலத்திற்கும் துணை வணிக வரி அலுவலர்க்கு மூன்று வாரங்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிக் கிறது.

11. விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள்:

விற்பனை வரி நிருவாகம் குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் பொது மக்களின் கருத்துக் கணிப்பு என்ன என்பதை அறியவும் உதவும் வகையில் பல்வேறு நிலைகளில் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமை தாங்குகிறார். இக்குழுக்களில் அரசு அலுவலர்களுடன் வர்த்தக சபை, வணிகச் சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், விவசாயத் தொழில் அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், உறுப்பினர்களாக உள்ளனர். விற்பனை வரிச் சட்டங்கள், விதி கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதில் வர்த்தகத் துறைக் கேற்படும் பல பிரச்சினைகளை இக்குழுக்கள் விவாதிக்கின்றன. இக்குழுக்களின் கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளையும் நிர்வாகத்தை செம்மையாக்கவும் வணிக சமூகத்தினர் பிரச்சினை களைத் தீர்க்கவும், நடவடிக்கை எடுக்க அரசு கருத்தில் கொள் கிறது.

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு ஒன்று 1989ஆம் ஆண்டு சூன் திங்கள் 23ஆம் நாள் முதல் இரண்டாண்டு களுக்குச் செயல்பட அமைக்கப்பட்டுள்ளது. வணிக வரி பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் அவர்களை தலைவராகவும், அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர் கள் உள்ளிட்ட அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்ட

இக்குழு, வணிகர் சமுதாயம் எதிர்நோக்கும் வரி வசூலிப்பு வழிமுறைகள் மற்றும் வணிக வரிச் சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்த பிரச்சினைகளை விவாதிக்கும்.

12. வரி பகுத்தாய்வுக் குழு :

ஒவ்வொரு ஆண்டும் அரசு அலுவலர்களைக் கொண்ட வரி பகுத்தாய்வுக் குழு ஒன்றை அரசு அமைக்கிறது. இக்குழு மற்ற மாநிலங்களில் உள்ள விற்பனை வரி விகிதங்களை ஆராய்வதுடன் மாவட்டங்களுக்குச் சென்று வணிகப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து தனது பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்கிறது.

13. குறை தீர்க்கும் பிரிவு :

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் பிரிவு ஒன்று 1984ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. வணிக வரி இணை ஆணையர் (நிர்வாகம்) இதன் தலைவராகவும், இணை ஆணையர் (மக்கள் தொடர்பு), உதவி ஆணையர் (சிறப்புப் பிரிவு) ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இப்பிரிவு வணிக சமூகத்தினரின் குறைகளைக் கேட்டறிந்து அவைகளுக்கு உடனடி நிவாரணம் காண நடவடிக்கை எடுக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இக்குழுவில் பெறப்பட்ட குறை தீர்க்கக் கோரும் மனுக்களும் அவைகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டவைகளின் விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	பெறப்பட்ட மனுக்கள்.	நடவடிக்கை முடிக்கப்பட்ட மனுக்கள்.	எஞ்சியவை.
(1)	(2)	(3)	(4)
1987 ..	450	450	—
1988 ..	105	102	3
1989 ..	119	79	40

14. கணிப்பொறி மையம் :

வணிக வரித் துறையில் கணிப்பொறி மையம் ஒன்று 1988–ல் அமைக்கப்பட்டது. கணிப்பொறி இயக்கத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற உதவி ஆணையர் ஒருவர் இம்மையத்தின் தலைமைப் பொறுப்பிலுள்ளார். இவருக்கு உதவியாக வணிகவரி அலுவலர் பதவித் தரத்தில் கணிப்பொறி முறை ஆய்வாளரும், புள்ளி விவரத் துறை உதவி இயக்குநர் பதவித் தரத்தில் கணிப்பொறி விவரத் தொகுப்பாளர் இருவரும், தேவையான இதர பணியாளர்

1990 ஏப்ரல் 26]

களும் உள்ளனர். இம்மையம், சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள வணிக வரிகள் அலுவலகக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இம்மையம், பதிவு பெற்ற வணிகர்கள் பற்றிய அடிப்படைத் தகவல்களைக் கொண்ட ''வணிகர் விவர நூல்'' ஒன்றைத் தயாரிக்கிறது. சென்னை மாநகரிலுள்ள வணிகர்களின் மாதாந்திர விற்பனை விவர அறிக்கைகளின் அடிப்படையில் விற்பனைப் பொருள் வாரியான விற்பனைத் தொகைப் புள்ளி விவரங்களை மாதந்தோறும் இம்மையம் தொகுக்கிறது. இதன் மூலம் இரண்டாம் விற்பனை என்ற அடிப்படையில் வரி விலக்குக் கோரும் விற்பனைகளை ஒப்பிட்டு சரிபார்க்கவும், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள வணிக வரிச் சோதனைச் சாவடிகளில் பதிவாகும் வணிக பரிமாற்ற விவரங்களை ஒப்பிட்டு சரிபார்க்கவும் இயலுகிறது. இம்மையம் விஞ்ஞான அடிப்படையில் தொகுத்து வைத்துள்ள தகவல் முறை, வரி ஏய்ப்பைத் தடுக்கவும், பெரிய அளவில் விற்பனை செய்யும் வணிகர்களின் வரி விதிப்பைத் துரிதமாகச் செய்யவும் உதவுகிறது.

மாவட்டங்களில எல்லா வரி விதிப்பு வட்டங்களிலும் வரி விதிப்பையும் கணிப்பொறி மூலம் செயல்படுத்தலாமா என்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. வரி விதிப்பு வட்டங்களில் கணிப்பொறி மூலம் வரி விதிப்பை செயல்படுத்துதல் குறித்து ஆராய்ந்து வழிமுறைகளை அளிக்க தொழில் நுட்பக் குழு ஒன்றை அமைப்பது குறித்த செயற் குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது. 1990–91ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 1,000 அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. நிறுவன அமைப்பு நடைமுறைப் பிரிவு :

இப்பிரிவுக்கு வணிக வரி அலுவலர் ஒருவர் தலைவராக உள்ளார். தொடர்ந்து விரிவடைந்து வரும் இத்துறையின் வரி விதிப்பு வட்டங்களில் உள்ள பணி அளவை திட்டமிட்ட முறையில் ஆய்வு செய்யவும், தேவையான இடங்களில் கூடுதல் பணியாளர் நியமனத்திற்கு ஆலோசனை கூறவும் இப்பிரிவு ஏற்படுத்தப் பட்டது. இவ்வாண்டில், இப்பிரிவு வணிக வரித்துறையில் செயலாக்கப்பிரிவிலும் நிர்வாகப் பிரிவிலும் தற்போதுள்ள பணியாளர் அமைப்பு முறை பற்றி ஆய்வு செய்து மிகச் சிறந்த முறையில் பணியாளர்களை பயன்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

16. வணிக வரிச் சட்டங்களில் செய்யப்பட்ட முக்கியத் திருத்தங்கள் :

(அ) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்—

(1) 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருத்தச் சட்டம் 28 மூலம், 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் சட்டப் பிரிவு 3-க்கு திருத்தம் செய்ததன் மூலம் ஆறாம்

அட்டவணை என்ற புதியஅட்டவணை ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்தின் மூலம் ஒரு வணிகர் கடைசி விற்பனை முனையை தவிர்த்து மற்ற முனைகளில் செய்யப்படும் விற்பனைகளுக்கு சம்பந்தப்பட்ட பொருள்களில் விற்பனை அளவின் மீது ஒவ்வொரு ஆண்டும் விற்பனை அளவு எவ்வளவாக இருந்தாலும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விகிதங்களின்படி சில நிபந்தனைக்கு உட்பட்டு வரி செலுத்த வகை செய்யப்படுகிறது.

(2) 1989 ஆம் ஆண்டின் பதினெட்டாவது திருத்தச் சட்டத்தின் மூலம், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் 17 (எ) என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டதின் மூலம் புதிய தொழிற்சாலை அல்லது நலிவடைந்த தொழிற்சாலை அல்லது நலிவடைந்த நூற்பாலை ஆகியவற்றிற்கு 1988 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாளுக்குப் பிற்பட்ட காலத்திற்கான விற்பனை வரியை சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒத்தி வைக்க வகை செய்யப்பட்டுள்ளது. புதிய சிறுதொழில் நிறுவனங்கள் விற்பனை வரியை ஐந்தாண்டுகளுக்குத் தள்ளி வைப்பதற்கான இச் சலுகையைப் பெறுவதற்கு மாவட்டத் தொழில் மையங்களிடம் தகுதிச் சான்று பெற வேண்டும். ஆனால், தற்போதுள்ள சட்ட விதிகளின்படி ஒவ்வொரு சிறு தொழில் நிறுவனத்திற்கும் அரசே அறிவிக்கை வெளியிட வேண்டியுள்ளது. இதனால் சிறு தொழில் நிறுவனங்கள் வரி ஒத்திவைப்பு பெறுவதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கச் சட்டப் பிரிவு எண் 17(எ) விற்கு திருத்தம் செய்து வணிக வரி உதவி ஆணையர்களுக்கு அதிகாரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம்.—

சென்னை மாநகராட்சி மற்றும் 32 கிலோ மீட்டர்களுக்குட்பட்ட அதன் புறநகர் பகுதிகளில், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தும் எல்லா வணிகர்கள் மீதும், அவர்கள் வாங்கும் அல்லது விற்கும் பொருள்கள் மீது, அவர்கள் மீது மேற்கண்ட சட்டப் பிரிவு 3—ன் கீழ் ஏற்கெனவே விதிக்கப்பட்டு வரும் மேல் வரியுடன், 5 சதவீதம் கூடுதல் மேல் வரி விதிக்க சட்ட எண் 39/89 வகை செய்கிறது. இச்சட்டம் 1989 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமலுக்கு வந்தது.

(இ) 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டம் மற்றும் 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவனங்கள் நிதிச் சட்டம்.—

மேற்கண்ட இரு சட்டங்களுக்கும் 1989 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமலுக்கு வந்த சட்டம் எண் 40/89 மூலம் ஒரு விரிவான சட்டத் திருத்தம் செய்யப்பட்டது. தற்போது நடைமுறையிலுள்ள ஆறு வகையான கேளிக்கை வரி

1990 ஏப்ரல் 26]

விகிதங்களுக்குப் பதிலாக இனி திரையரங்கு மொத்த வசூல் தொகையில் 40 சதவீதம் என ஒரே வகையான வரி விதிப்பு திருத்தம் வகை செய்கிறது. கேளிக்கை வரி விதிப்பு மிகவும் எளிதாக்கப்பட்ட இந்த நடவடிக்கையை திரையரங்கு உரிமையாளர்கள் வரவேற்றுள்ளனர்.

17. வரிவசூல் :

(அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.—

மேற்சொன்ன சட்டத்தின்கீழ் கடந்த ஆறு ஆண்டுகளில் பெறப்பட்ட வருவாய் விவரம் கீழ் வருமாறு :—

ஆண்டு.	மொத்த வரவினங்கள். (ரூபாய் கோடியில்.)
1984–85	718.96
1985–86	824.46
1986–87	937.47
1987–88	1,062.08
1988–89	1,218.86
1989–90	1,426.04

(ஆ) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

மேற்கண்ட சட்டத்தின் கீழ் கடந்த ஆறு ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் பற்றிய விவரம் வருமாறு:—

ஆண்டு.	மொத்த வரவினங்கள். (ரூபாய் கோடியில்).
1984–85	135.69
1985–86	150.06
1986–87	171.65
1987–88	184.90
1988–89	213.00
1989–90	240.04

(இ) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.—

மேற்சொன்ன சட்டங்களின் கீழ் கடந்த ஆறு ஆண்டுகளில் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

ஆண்டு.	மொத்த வருவாய். (ரூபாய் கோடியில்.)
1984–85	44.88
1985–86	53.28
1986–87	57.98
1987–88	60.21
1988–89	63.21
1989–90	68.67

இவ்விரு சட்டங்களும் கேளிக்கைகள் மீது வரி விதிக்க வகை செய்கின்றன. கட்டணம் செலுத்துவதன் பேரில் மக்கள் அனுமதிக்கப்படும் திரைப்பட காட்சிகளுக்கும் குதிரைப் பந்தயங் களுக்கும் மட்டும் வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

(ஈ) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்—

குதிரைப் பந்தயங்கள், சென்னையிலும் (கிண்டி), உதக மண்டலத்திலும் நடைபெறுகின்றன. 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாள் முதல் இதனை தமிழ்நாடு அரசின் குதிரைப் பந்தயத்துறை எடுத்துக்கொண்டது.

கடந்த ஆறு ஆண்டுகளில் இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் வருமாறு :—

ஆண்டு.	மொத்த வருவாய். (ரூபாய் கோடியில்.)
1984–85	3.92
1985–86	4.55
1986–87	2.58
1987–88	3.52
1988–89	4.72
1989–90	5.70

1990 ஏப்ரல் 26]

(உ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஒட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரி விதிப்புச் சட்டம்.

கடந்த ஆறு ஆண்டுகளில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

ஆண்டு.	மொத்த வருவாய். (ரூபாய் கோடியில்).
1984–85	1.81
1985–86	2.72
1986–87	2.69
1987–88	2.70
1988–89	2.87
1989–90	17.98

(ஊ) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.

மேற்கண்ட சட்டத்தின்கீழ் கடந்த 1987–88 ஆம் ஆண்டு முதல் 1989–90 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் கீழ்வருமாறு :—

ஆண்டு.	மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்).
1987–88	8.00
1988–89	7.44
1989–90	6.89

18. வணிகர் நல வாரியம்.

இம் மாநிலத்திலுள்ள வணிகர் நலம் பேணும் பொருட்டு, அரசு வணிகர் நல வாரியத்தினை ஏற்படுத்தி, அதற்கான அரசின் பங்குத் தொகையாக ரூபாய் இரண்டு கோடியை அரசு வழங்கியுள்ளது.

1990 ஏப்ரல் 26

வணிகவரி பொறுப்பு அமைச்சர் என்ற நிலையில் முதல் அமைச்சர் அவர்கள் இதன் தலைவராவார். அலுவல் சார் உறுப்பினர் தவிர, அலுவல்சாரா ஆறு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களில் ஒருவரான திரு. கோ. ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் இவ்வாரியத்தின் துணைத் தலைவராக அமர்த்தப் பட்டுள்ளார். இவ்வாரியத்தில் அலுவல் சாரா உறுப்பினர்கள் மூன்றாண்டு காலம் பதவி வகிப்பர்.

இவ்வாரியத்தின் நிதி, அரசுக் கொடை மற்றும் வணிகக் கழகங்கள் வழங்கும் நன்கொடை ஆகியவை அடங்கியதாகும். இதனுடன், அரசுக் கொடைக்கு ஏற்ப, இவ்வாரியச் செயற் பாட்டினால் பயனுறும் வணிக சமூகம் வருடா வருடம் வழங்கும் பங்குத் தொகையும் சேரும்.

இவ்வாரியம் கீழ்க்காணும் நலப் பணிகளை மேற்கொள்ளும் :

1. நலிவுற்ற வணிகர் குடும்பங்களுக்குக் கல்வி தொடர்பாக உதவுதல்.

2. உறுப்பினர் வணிகர் இறக்க நேரிடின் அக்குடும்பத் திற்குக் குடும்ப நல நிதி வழங்குதல்.

3. புயல், வெள்ளம், நெருப்பு போன்ற இயற்கைச் சீற்றங் களினாலும், கலவரம் மற்றும் கொள்ளை போன்ற தீய சக்தி களினாலும் பாதிக்கப்பட்ட வணிகர்களுக்கு நிதி உதவி வழங்குதல்.

4. சிறப்பு நேர்வுகளில், வணிகரது குடும்பங்களுக்கு மருத்துவ உதவி அளித்தல்.

5. தொகுதி காப்பீட்டுத் திட்டம் (Group Insurance Scheme) போன்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, வணிகர்களுக்கு ஓய்வூ தியமும், இறக்க நேரிட்ட வணிகர்களது குடும்பங்களுக்குக் குடும்ப ஓய்வூதியமும் வழங்குதல்.

6. வணிகர், கூட்டங்கள் மற்றும் திருமணங்கள் போன்றவை நடத்துவதற்கு ஏதுவாக, மாவட்டத் தலைமை நகரங்களில் சமுதாயக் கூடங்கள் கட்ட உதவுதல்.

7. வணிகர் நல வாரியத்திடம் அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்பட்டு ஒப்படைக்கப்படும் நலத் திட்டங்களையும் செயல்படுத்துவது.

1990 ஏப்ரல் 26]

19. வரிச் சலுகைகள் மற்றும் கூடுதல் நிதி ஆதாரங்கள் திரட்டுதல்.

1990–91 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட வரிச்சலுகைகளும், வருவாய் நிதி ஆதாரங்களும் அறிவிக்கப் பட்டுள்ளன :—

1. மொத்த விற்பனை ஆண்டிற்கு ரூபாய் ஐந்து இலட்சத் திற்குட்பட்டு, பொது விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் விற்பனை வரிப்படிவங்கள் வாங்கியிராத வணிகர்களுக்கு, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ''முடிவுற்ற தாகக் கருதப்படும் வரி விதிப்பு முறை'' (Deemed assessment) நடப்பு நிதி ஆண்டிலிருந்து (1990-91) அமலுக்கு வரும். அதாவது, 1989-90 ஆம் ஆண்டில் வரி விதிப்பிற்கு உள்ளாகும் வணிகர்களும் தங்கள் கணக்கை, 1990-91 ல் இறுதியாக்கும்போது மேற்கண்ட பயனைப் பெறுவர்.

2. பொருள்களின் மீதான பலமுனை விற்பனை வரி விதிப்பு முறை 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் நீக்கப்படுகிறது. இதுவரை பலமுனை விற்பனை வரி விதிப்பிற்கு உட்பட்டிருந்த அனைத்து பொருட்களும் ஒருமுனை விற்பனை வரி விதிப்பிற்குக் கொணரப்பட்டு அவைகளின் விற்பனை வரி ஒரே சீராக இருக்கும் வகையில் 8 சதவீதம் ஆக ஆக்கப்படும். தற்போது பலமுனை விற்பனை வரிகளுக்குட்பட்ட பொருட் களில் வாணிபம் செய்பவர்கள் அவர்களின் மொத்த விற்பனை அளவு ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் மிகுபடாமல் இருந்தால் அவர்கள் வரி செலுத்தத் தேவையில்லை. மேற்கண்ட பலமுனை விற்பனை வரிக்குட்பட்ட பொருட்கள் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து ஒரு முனை விற்பனை வரிக்கு மாற்றப் படும் நிலையில் மேற்கண்ட விலக்கு தொடர்ந்து அமலில் இருக்கும்.

3. கூடுதல் விற்பனைவரி கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்யப் பட்டுள்ளது :—

	வரி விகிதம். சதவிகிதம்.
(அ) வரி விதிப்பிற்குட்பட்ட அளவு ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 40 இலட்சத்திற்குள் உள்ள நிலையில்.	1.25
(ஆ) வரி விதிப்பிற்குட்பட்ட அளவு ரூ. 40 இலட் சத்திலிருந்து ஒரு கோடிக்குள் உள்ள நிலையில்.	1.5

	வரி விகிதம் சத விகிதம்
(இ) வரி விதிப்பிற்குட்பட்ட அளவு ரூபாய் ஐந்து கோடிக்குள் உள்ள நிலையில்.	2
(ஈ) வரி விதிப்பிற்குட்பட்ட அளவு ரூபாய் ஐந்து கோடியிலிருந்து ரூபாய் பத்து கோடிக்குள் உள்ள நிலையில்.	2.25
(உ) வரி விதிப்பிற்குட்பட்ட அளவு ரூபாய் பத்து கோடிக்கு மேலாக உள்ள நிலையில்.	2.5

மேற்கண்ட மாற்றங்கள் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமலுக்கு வரும்.

4. மேல் வரியானது கீழ்க்கண்ட முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது :—

(அ) சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள்.	10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
(ஆ) மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளும் சிறப்பு நிலை நகராட்சிகளும்.	10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
(இ) தேர்வு நிலை, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் உள்ள நகராட்சிகளுக்குட்பட்ட பகுதிகள் மற்றும் நகரியங்கள் பேரூராட்சிகள் மற்றும் நகரியங்கள்.	8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
(ஈ) ஊராட்சிகள்	8 சதவிகிதம் (மாற்றம் இல்லை).

மேற்கண்ட மாற்றங்கள் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமலுக்கு வரும்.

1990 ஏப்ரல் 26]

5. தற்போது பலமுனை விற்பனை வரிக்குட்பட்ட பின்வரும் பொருட்கள் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் பின்வரும் வகையில் ஒரு முனை வரி விதிப்பிற்கு உட்படுத்தப்படும் :—

பொருட்களின் பெயர்.	வரி விகிதம்.
(அ) அலுமினிய பாத்திரங்கள்	4 சதவிகிதம்.
(ஆ) பித்தளை, செம்பு பாத்திரங்கள் ..	5 சதவிகிதம்.
(இ) ரொட்டி, பிஸ்கட் போன்றவை (1958 ஆம் ஆண்டு டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாதது.)	5 சதவிகிதம்.

ரூபாய் மூன்று இலட்சத்திற்கு உட்பட்ட ஆண்டு விற்பனை அளவு உள்ள, ரொட்டி மற்றும் பிஸ்கட் வணிகர்களுக்கு ஏற்கனவே வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்ந்து அமலிலிருக்கும்.

(ஈ) காலணிகள் (டிரேட் மார்க் சட்டத்தில் 5 சதவிகிதம். பதிவு பெறாதது.)

(மொத்த விற்பனை அளவு ஆண்டொன்றுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மிகாமல் உள்ள வணிகர்களுக்கு ஏற்கனவே இருந்து வரும் விற்பனை வரி விலக்கு தொடர்ந்து நீடிக்கும்.)

6. நிதிநிலை அறிக்கையின் மீது நடந்த விவாதத்திற்குப் பதிலலித்து 1990 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 28 ஆம் நாள அன்று பேசும் போது முதலமைச்சர் கீழ்கண்ட வரிச் சலுகைகள 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமலுக் வரும் என அறிவித்தார் :—

(1) உணவுப் பண்டங்கள் மற்றும் பானங்கள் மீதான விலை யைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எட்டு சதவிகித ஒருமுனை வரி 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

(2) ரெடிமேடு ஆடைகள் (Readymade Garments) நீங்கலாக, தைக்கப்பட்ட துணிகளுக்கு (Stitched Items) ஏற்கனவே நான்கு சதவிகித பலமுனைவரி என்று விதிக்கப்பட்டு வந்தது. ஒருமுனை வரியாக மாற்றும்போது எட்டு சதவிகிதம் என்று விதிக்கப்பட்டது. தற்போது இது மூன்று சதவிகித ஒரு முனை வரியாகக் குறைக்கப்படுகிறது.

3. விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய (HDPE/ Poly Ethylene woden sacks) பாலிதின் சாக்கு களுக்கு ஏற்கனவே இரண்டு சதவிகிதம் பலமுனை வரி விதிக்கப்

பட்டிருந்தது. ஒருமுனை வரியாக மாற்றும்போது எட்டு சதவிகிதம் என்று விதிக்கப்பட்டது. தற்போது இரண்டு சத விகிதம் ஒருமுனை வரியாகக் குறைத்து விதிக்கப்படும்.

4. தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் இயங்கும் சவ்வரிசி கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு ஏற்கனவே ஐந்து சதவிகிதம் பலமுனை வரிக்குப் பதிலாக நான்கு சதவிகிதம் பலமுனை வரி என வரிச் சலுகை வழங்கப்பட்டிருந்தது. ஒரு முனை வரியாக மாற்றும்போது எட்டு சதவிகிதமாக விதிக்கப் பட்டதை தற்போது நான்கு சதவிகித ஒரு முனை வரியாகக் குறைத்து விதிக்கப்படும். இதில் கூட்டுறவுச் சங்கம் சாரா இதர வணிகர்களுக்கு ஐந்து சதவிகிதம் ஒருமுனை வரி விதிப்பாக மாற்றி அமைக்கப்படும்.

7. கீழ்க்கண்ட பொருட்கள் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் இணைப்பு 1-ன் கீழ் புதிய இனங்களாகக் கொணரப்பட்டு பின் வரும் வகையில் விற்பனை வரி விதிக்கப்படும்:—

பொருட்களின் பெயர்.	வரி விகிதம்.
(அ) ஏலக்காய்	3 சத விகிதம் (இறுதிக் கொள்முதல் முனையில்).
(ஆ) தங்கம், வெள்ளியினால் செய்த அணிகலன்கள், பொருட்கள்.	4 சதவிகிதம் (முதல் விற்பனை முனையில்).
(இ) உள்நாட்டு மலிவு மது ..	25 சதவிகிதம் (ஒருமுனை விற்பனை வரி—முதல் விற்பனை முனையில்).

8. 1990 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 17 ஆம் நாள் முதல் பல பொருட்களின் வரி விகிதம் பின்வருமாறு மாற்றம் செய்யப் பட்டுள்ளது:—

	வரி விகிதம்.
(அ) அனைத்துவித பருத்திக் கழிவு	4 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதம்.
(ஆ) பருத்தி நூல் கழிவு ..	4 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதம்.

1990 ஏப்ரல் 26]

(இ) கோதுமையிலிருந்து செய்யப்படும் பொருட்கள் (ரவை, மைதா, ஆட்டா, சுஜ்ஜி போன்றவை).	2 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம்.
(ஈ) பதனிடப்பட்ட தோல்கள் ..	1 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதம்.
(உ) கொப்பரைத் தேங்காய் (இளநீர் காய்கள் நீங்கலாக).	3 சதவிகிதத்திலிருந்து 4 சதவ்கிதம்
(ஊ) பெட்ரோலியப் பொருட்கள் :	
(இனம் 151 முதல் 154 வரை மற்றும் 156 முதல் 159 வரை)	4 சதவிகித த்திலிருந்து 5 சதவிகிதம்.

9. சில பொருட்களின் மீதுள்ள விற்பனை வரியானது பின்வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது. இச் சலுகை 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் முதல் அமலுக்கு வரும்:—

	வரி விகிதம்.
1. எலக்டரானிக் டெலிபிரிண்டர்கள் (முதல் இணைப்பில் இனம் 1-பி)	15 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம்.
2. டிராக்டர்களுக்கு தேவைப்படும் உதிரி பாகங்கள், டயர்கள் மற்றும் டியூப்புகள் (முதல் இணைப்பில் இனம் 55.)	9 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம்.
3. செங்கல் [முதல் இணைப்பில் இனம் 90(i)].	8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம்.
4. ஓடுகள் [முதல் இணைப்பில் இனம் 90 (ii).]	5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம்.
5. கைப்பம்புகள் (முதல் இணைப்பில் இனம் 101.பி.).	8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம்.
6. விவசாயப் பொருட்கள் அதாவது மிளகாய், புளி, மிளகு, மஞ்சள், மல்லி, சீயக்காய் போன்றவை.	8 சதவிகிதத்திலிருந்து 6 சவிகிதம்.

(முதல் இணைப்பில் இனம் 165)

[1990 ஏப்ரல் 26

7.	வெல்லம், நாட்டுச் சர்க்கரை (முதல் இணைப்பில் இனம் 166).	8 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதம்.
8.	சீரகம் (முதல் இணைப்பில் இனம் 167).	8 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதம்.
9.	கால்நடைகளால் இழுக்கப்படும் மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் போன்ற வண்டிகளின் டயர்கள் மற்றும் டியூப்கள். (முதல் இணைப்பில் இனம் 182).	8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம்.
10.	ரப்பர் கலந்த நார்ப் பொருட்கள் (முதல் இணைப்பில் இனம் 189).	5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம்.
11.	எண்ணெய் தயாரிக்கும் வணிகர்களுக்கு விற்கப்படும் தேங்காய் (முதல் இணைப்பில் இனம் 69).	5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம்.

10.	எல்லாவித மின்னணுப் பொருட்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள் உட்பட ஆனால் மின்னணு டெலி பிரிண்டர் நீங்கலாக.	3 சதவிகிதம்.

11. 1990 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட பொருள்கள் வரி விதிப்பிலிருந்து அறவே விலக்கப் படுகின்றது:—

(1) நேரடியாக மக்கள் நுகரும் கரும்பு மற்றும் (2) கீழ்க் கண்ட 10 வகை நாட்டு மருந்துப் பொருட்கள் :—

1. வாய்விளங்கம்.
2. பூழாங்கிழங்கு.
3. நெரிஞ்சி.
4. தாதரிப்பூ.
5. அதிவிடயம்.
6. மாச்சக்காய்.

1990 ஏப்ரல் 26]

7. மதனகாமப்பூ.

8. வெள்ளிலோத்திரம்.

9. நில வாகை.

10. சாரணவேர்.

20. விற்பனை வரி அரசு கருவூலத்திற்கு மிகப் பெரிய மற்றும் முக்கிய வருவாய் ஆதாரமாக விளங்குவதால், வணிகவரித் துறையின் எல்லா அதிகாரிகளும் மற்றும் அலுவலர்களும் சிரமம் மிகுந்த தங்கள் கடமைகளை நேர்மையுடனும், செயல்பாட்டுத் திறமையுடனும் நிறைவேற்ற தங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கின்றனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 26

நிதித்துறை ஓய்வூதியம்

கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

இக்கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந் தலைப்புகள் அடங்கியுள்ளன :—

		ரூபாய்.
2071.	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.	2,63,55,10,000
2235.	சமூகப் பாதுகாப்பு நலன்—ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள்.	3,35,47,000
		2,66,90,57,000

இக்கோரிக்கை, அரசுப் பணியாளர்கள், மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், பிற பணியாளர்கள், உள்ளாட்சி மன்ற ஆசிரியர்கள், தொடர்பாகவும், மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தொடர்பாகவும், முக்கியமாக, ஓய்வூதியம் வழங்குதல், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்கி வழங்குதல், பணிக்கொடை வழங்குதல், வருங்கால வைப்பு நிதித் தொகைகள், குடும்ப ஓய்வூதியம் வழங்குதல் முதலான வகையில் ஏற்படும் செலவினங்களைச் செய்வதற்காக ஏற்பட்டதாகும்.

பொது :

ஓய்வூதிய நன்மைகளை வழங்குவதைப் பொறுத்த வரை, மத்திய அரசின் விதிகள் / ஆணைகளையே மாநில அரசு வழக்கமாகப் பின்பற்றுகிறது. அவ்வாறே மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படுகிற அதே வீதத்தில் ஓய்வூதிய நன்மைகள் சிலவற்றை அரசு வழங்கியுள்ளது. மத்திய அரசின் நடைமுறைக்கேற்ப, ஓய்வூதியம், ஆற்றிய பணிக்கான பணிக்கொடை, இறப்பு பணிக்கொடை ஆகியவற்றைக் கணக்கிடும் நடைமுறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இறப்பு ஓய்வூதியப் பணிக்கொடையின் உயரளவு தொகையை ரூபாய் 50,000-லிருந்து ரூபாய் ஒரு இலட்சத்திற்கு அரசு உயர்த்தியுள்ளது. ஓய்வூதியதாரர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி வழங்குவதிலும் மத்திய அரசின் ஓய்வூதிய நடைமுறையையே அரசு பின்பற்றியுள்ளது.

1990 ஏப்ரல்_26]

தமிழ்நாடு ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகள்:

தமிழ்நாடு ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், குறைந்த அளவு ஓய்வூதியத் தொகையை 1—6—1988 முதற்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 245-லிருந்து ரூபாய் 375-ஆக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஓய்வூதிய குடும்ப ஓய்வூதிய வீதத்தை அரசு, முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது. குடும்ப ஓய்வூதியத்தைப் பொறுத்தமட்டில், சம்பளக் குழுவின் பரிந்துரைகள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அவ்வளவு சாதகமாக இல்லாமலிருந்த போதிலும், அரசு இதில் தாராள அணுகுமுறையை மேற்கொண்டு அலுவலர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 30 சதவீதத் தொகையைக் குடும்ப ஓய்வூதியமாக வழங்கிட ஆணை பிறப்பித்தது. குடும்ப ஓய்வூதிய உயரளவு ரூபாய் 1,000 என்பதை ரூபாய் 1,250-ஆக வரையறுத்து அரசு ஆணை பிறப்பித்தது. ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஓய்வூதியத் தொகையில் அளிக்கப்பட்ட உயர்வானது, ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்கிப் பெறவும் தகுதியுடையதாகும்.

ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதிடையவர் ஆவார். ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. உயரளவாக 33 ஆண்டுகள் தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 33 ஆண்டுகளுக்கு குறைவான தகுதிப்பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் குறைக்கப்படும். குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 375 ஆகும். உயரளவு ஓய்வூதியத்திற்கு உச்ச வரம்பு ஏதுமில்லை.

ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறு மாதப் பணிக்கும் அரை மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்கான ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டுமொத்தத் தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடைக்கும் கூடுதலாக இத்தொகை வழங்கப்படுகிறது. இதற்குக் குறைந்த அளவு அல்லது உயரளவு வரம்பு ஏதுமில்லை.

இறப்பு பணிக்கொடை :

பணியில் இருக்கும்போது மரணமடைகின்றவர்கள் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்பு பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது :—

பணிக்காலம். (1)	பணிக்கொடையின் அளவு. (2)
1. ஓராண்டுக்கு குறைவாக ..	மாத ஊதியத்தின் இருமடங்கு.
2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தின் ஆறு மடங்கு
3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால், இருபதாண்டுகளுக்குக் குறைவாக.	மாத ஊதியத்தின் பன்னிரண்டு மடங்கு.
4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக.	உயரளவாக 33 மடங்கு மாத ஊதியத்திற்குட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரை மாதச் சம்பளம், ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்பு பணிக்கொடை எந்த நேரத்திலும் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்படக்கூடாது.

ஓய்வுகால பணிக்கொடை :

ஒருவர், ஐந்தாண்டு / பத்தாண்டுகள் தகுதிப்பணியை முடித்திருந்து ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அல்லது ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராக இருந்தால், அவர் ஓய்வு பெறும்போது, மாத ஊதியத்தில் $16\frac{1}{2}$ மடங்கு என்ற அதிக அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத்தொகை ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. உயரளவு ஓய்வு காலப் பணிக்கொடையின் உச்சவரம்பு ரூபாய் ஒரு இலட்சம் ஆகும்.

குடும்ப ஓய்வூதியம் :

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ ஓய்வு பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். அவர் பணியிலிருக்கும்

1990 ஏப்ரல் 26]

போது இறந்தால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும் அரசுப் பணியாளர் ஒருவர், தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே, பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது; ஆனால், அந்தப்பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன்அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து, அரசுப்பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்கவேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவருடைய குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருக்க வேண்டும். இருப்பினும், 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது, அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

ஒருவர் இறக்கும்போது, அல்லது ஓய்வு பெறும்போது, கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 30 சதவீதத் தொகை என்ற ஒரே சீரான விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. ஒருவர் ஏழு ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றிய பிறகு பணியில் இருக்கும்போது இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்கு, அவர் இறந்துவிட்ட பிறகு ஏழாண்டுக் கால அளவிற்கு, அல்லது வயது முதிர்வு காரணமாக வழக்கமாக ஓய்வு பெறக்கூடிய நாள் வரை என்பதில் எது முந்தியதோ அந்தக் காலம் வரையில் அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50 சதவீதம் என்ற அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அதன் பிறகு, கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 30 சதவீதம் என்ற வழக்கமான வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 375. அதிக அளவு குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 1,250.

விதவைக்கு / மனைவியை இழந்த கணவனுக்கு. அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும்வரை, அல்லது இறக்கும் வரை என்பதில் எது முந்தியதோ அதுவரை, குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, இந்த குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய உரிய வயதடையாத குழந்தைகளுக்கு அதாவது, அவர்களுடைய மகன்கள் அல்லது திருமணமாகாத மகள்களுக்கு 25 வயது ஆகும்வரை அளிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும் கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலக்குறைவு அல்லது மனநலமின்மை

யுடையவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டும்.

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தெர்கையாக அளித்தல் :

ஓய்வூதியத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை ஒட்டு மொத்தமாகப் பெற மாநில கணக்குத்துறைத் தலைவரால் அரசு அனுமதிக்கிறது. ஓய்வூதியம் வழங்குவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவப் பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கித் தொகை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓய்வூதியத்தில் குறைபட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் வழங்கிட அரசு அனுமதித்துள்ளது.

ஏனைய ஓய்வு கர்ல நன்மைகள் :

1. மத்திய அரசின் பின்பற்றும் நடைமுறைக்கேற்ப (அதாவது, ஆண்டில் இருமுறை, ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய தேதிகளில் அகவிலைப்படி வழங்கப்படுவது போல) பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே, ஓய்வூதியம் பெறுபவர்களும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும், அகவிலைப்படித் தவணைத் தொகை பெறுகிறார்கள்.

2. ஓய்வூதியம் பெறுபவர்கள் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மருத்துவச் செலவுத் தொகையை திரும்பப் பெறும் திட்டத்திற்குப் பதிலாக, திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 15 என்ற வீதத்தில் மருத்துவப்படி பெறுவதுடன், அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது / பணியில் இருக்கும் போதே இறக்கும்போது பெறத் தகுதி பெற்றிருந்த அதே மருத்துவச் சலுகைகளையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

3. ஓய்வு பெறும்போது, கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு உயரளவு 240 நாட்கள் ஈட்டிய விடுப்பிற்கு மட்டுமே தொகை பெற இயலும்.

4. ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தாம் சென்று வசிக்க விழையும் ஊருக்குச் செல்வதற்கான பணி மாற்றம் பயணப்படி பெற அனுமதிக்கப்படுவார்.

1990 ஏப்ரல் 26]

5. 1—6—1988-ஆம் நாளில் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வுக் காலப் பயன்களைக் கணக்கிடும் போது, அடிப்படை சம்பளத்தில் 13 சதவீதத்தை அகவிலைச் சம்பளமாக கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்ற சலுகையை அரசு வழங்கியுள்ளது.

6. திங்களொன்றுக்கு ரூபாய் 750 வரை ஓய்வூதியம் பெறுபவர், ஒரு திங்களுக்கான ஓய்வூதியத் தொகை அல்லது ரூபாய் 300 இவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகையைப் பண்டிகை முன்பணமாக பெறத் தகுதியுடையவராவார்.

7. திங்களொன்றுக்கு ரூபாய் 400-க்கு மிகாமல் ஓய்வூதியத் தொகை குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அத்தொகை அரசு செலவில் பணவிடை மூலமாக அனுப்பி வைக்கப்படுகிறது.

8. ரூபாய் 400-க்கும் அதிகமாக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர் ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின்படி, தனியார் வங்கிகள் உள்பட ஏதேனும் ஒரு வங்கியின் மூலமாக, அல்லது பொதுத் துறை வங்கித் திட்டத்தின்படி ஏதேனும் ஒரு பொதுத்துறை வங்கியின் மூலமாகவும் அத்தொகையைப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

9. மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன் மாநில ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப் படியையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

10. அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் ஏனைய ஓய்வூதியம் பெறுபவர்கள் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசாக ரூபாய் 100 வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி மன்றக் கல்வி நிறுவனங்கள் உள்பட, அரசு சாராக்கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:

அரசு சாராக் கல்வி நிறுவனங்களில் (அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றக் கல்வி நிறுவனங்கள்) பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களும், மாநில அரசுப் பணியாளர்களுக்குரிய அனைத்து ஓய்வூதியப் பயன்களையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர். மாநில அரசினால் ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்படும் வீதத்திலேயே அவர்களும் அகவிலைப்படி கூடுதல் அகவிலைப்படி பெறுகின்றனர்.

ஓய்வூதியதாரரின் பிரச்சினைகள்/குறைகளை களைய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்:

1. ஓய்வூதியதாரர்களின் குறைகளைக் கவனிக்க பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் ஓய்வூதியதாரர்கள் குறை தீர்ப்புப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

2. அரசு, ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறித்து விவாதித்து அவற்றைக் களைவதற்கு வகை செய்யும் பொருட்டு, காலாண்டிற்கு ஒருமுறை ஓய்வூதியதாரர்கள் சங்கத்தினர் கலந்து கொள்ளும் கூட்டங்களை நடத்தி ஆலோசனைப் பெறுகிறது.

3. ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக, கருவூல—கணக்குகள் இயக்குநர், சென்னை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் ஆகியோருடன் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்படுகின்றது.

மானியக் கோரிக்கை—43 பல்வகை

1990–91 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்க குறிப்பு

இது ஒரு கூட்டு மானியக் கோரிக்கையாகும். இந்த மானியக் கோரிக்கையில், முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படும் மானியம், உள்ளாட்சி நிறுவனங்கள், சிறு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி ஆகியவை தொடர்பான செலவு சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்பட்டோருக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கான செலவும், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம், தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட ஒரு மானியக் கோரிக்கையில் சேர்க்க இயலாத ஏனைய பல்வகை இனங்களும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் பெருந்தலைப்பு வாரியாக வருமாறு :—

கணக்குத் தலைப்பு.	1989–90 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.	1989–90 திருத்த மதிப்பீடு.	1990–91 வரவு-செலவு திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. 2047, ஏனைய வரி விதிப்புப் பணிகள்	59	148	80
2. 2049. வட்டி வகையில் தொகை கொடுத்தல்	1	1	1
3. 2070. ஏனைய நிருவாகப் பணிகள் ...	25	32	27

1990 ஏப்ரல் 26]

4. 2075. பல்வகை பொது வான பணிகள் ..	1,96,14	1,64,14	1,09,66
5. 2235. சமூகப் பாது காப்பும் நலனும் ..	13,89	18,40	18,64
6. 2250. ஏனைய சமூகப் பணிகள் ..	23	24	29
7. 3053. சிவில் விமானப் போக்குவரத்து ..	9	8	8

மேற்சொன்ன மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்கள், அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் ஆகிய விவரங்கள் வருமாறு :—

சிறு சேமிப்பு :

தனியார் சேமிப்பை ஊக்குவிக்கவும், பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் சிறுசேமிப்பு வசூல் ஒரு பெரிய திட்டமாக உள்ளது. திட்டங்களுக்கு அது நிதி ஆதாரமளிப்பதால் மாநில அரசிற்கு சிறு சேமிப்பு பெரிதும் உதவிகரமாக உள்ளது. ஐந்தாண்டு திட்டத்தினை நிறைவேற்றும் நிதி ஆதாரமாக பயன் படுத்த பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்களின் நிகர வசூலில் 75 விழுக்காடு தொகை மாநில அரசுகளுக்கு நீண்டகாலக் கடனாக மத்திய அரசினால் வழங்கப்படுகிறது.

2. சிறு சேமிப்பின் கீழுள்ள முக்கியத் திட்டங்கள் ஆவன :—

(1) ஆறாண்டு தேசீய சேமிப்பு பத்திரங்கள்—8-வது வெளியீடு.

(2) தேசீய சேமிப்புத் திட்டம்—1987.

(3) 10 ஆண்டு சமூக பாதுகாப்பு பத்திரங்கள்.

(4) 5 ஆண்டு அஞ்சலக ரெக்கரிங் வைப்புக் கணக்கு.

(5) அஞ்சலக கால வைப்புக் கணக்கு.

(6) 15 ஆண்டு பொது சேமநிதி கணக்கு.

(7) அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு.

(8) ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்கு வைப்புத் திட்டம்.

(9) இந்திர விகாஸ் பத்திரங்கள்.

(10) கிஸான் விகாஸ் பத்திரங்கள்.

(11) அஞ்சலக் மாத வருமானத் திட்டம்.

3. 1989–90-ம் ஆண்டிற்கு ரூ. 400 கோடி என்று குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. 31–3–1990 வரை சிறு சேமிப்பு நிகர வசூல் ரூ. 328.93 கோடியாகும். 1990–91-ம் ஆண்டில் தீவிர சிறு சேமிப்பு வசூல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 450 கோடி நிகர வசூலுக்கு குறியீடாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சிறு சேமிப்பு பழக்கத்தை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் 30-ம் நாள் ''உலக சிக்கன நாளாக'' அனுசரிக்கப்பட்டு எல்லா மாவட்டங்களிலும் கொண்டாடப்படுகிறது.

தேசிய சேமிப்பின் மாநில ஆலோசனைக் குழு :

4. தேசீய சேமிப்பின் மாநில ஆலோசனைக் குழுவினை தமிழ்நாடு அரசு மாற்றியமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்குழுவின் தலைவராவார். சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. இரகுமான்கான், பி.ஏ.,பி.எல்., அக்குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முகவர்கள் மற்றும் பல்வேறு பிரிவினைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகள் அலுவல் சார்புள்ள மற்றும் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அக்குழுவில் எட்டு அலுவல் சார்பற்ற உறுப்பினர்களும் நான்கு அலுவல் சார்புடைய உறுப்பினர்களும் உள்ளனர். அதிகமான சேமிப்பு ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் பற்றியும், சிறு சேமிப்பு கருத்தினை பரப்பவும் மேற்படி குழு அரசிற்கு ஆலோசனைகள் வழங்குகிறது.

5. நடப்பு நிதியாண்டில் அமைப்பு ரீதியான நிறுவனங்களில் சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்டத்தினை பிரபலமாக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேற்படி திட்டத்தின் மீதுள்ள தீவிர முயற்சி தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக ரூ. 1.72 லட்சம் செலவில் இயக்ககத்தில் ஒரு பிரிவு உருவாக்கப்படும். சிறுசேமிப்பு திட்டங்களில் உள்ள பயன்களையும், வரிச் சலுகைகளையும் மற்றும் சிறப்பியல்புகளையும் எடுத்துக் காட்டி பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்களையும் பிரபலப் படுத்த குறிப்பான கவனம் செலுத்தப்பட்ள்ளது.

6. சிறு சமிப்பில் முதலீடு செய்பவர்களுக்கு ஒரு சிறப்பு பரிசு திட்டத்தினையும் அரசு அமுல்படுத்தி உள்ளது. முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ரூ. 1,000–க்கும் ஒரு பரிசு கூப்பன்

1990 ஏப்ரல் 26]

வழங்கி, அதன் அடிப்படையில் குலுக்கல் நடத்தி பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஆறாண்டு தேசீய சேமிப்பு பத்திரங்கள்—எட்டாவது வெளியீட்டில் ரூ. 1,000-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 1 விழுக்காடு ஊக்கத் தொகை ரொக்கப் பணமாக வழங்கப்படுகிறது. இந்திர விகாஸ் பத்திரங்களை வாங்கி கிராமப்புற மக்களிடம் விற்பனை செய்வதற்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ. 2 கோடிக்கான சுழல் நிதியை அரசு ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் :

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 15–8–1968 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1976 செப்டம்பர் திங்கள் வரையிலுள்ள குறுகிய கால அளவிற்கு இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது இத்திட்டம் அரசால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

2. சமுதாய நல நடவடிக்கைகளில் பொதுமக்களையும் பங்கேற்க வகை செய்யும் பொருட்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஆகும் செலவினங்கள் அனைத்தையும் செய்த பின்னர் எஞ்சிவரும் நிகர வருவாயில் பெரும் பகுதி சிறப்பு சேம நிதிக்கு மாற்றப்படுகிறது. அந்நிதியிலிருந்து பின்வரும் முக்கியமான பல திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன :—

(1) குறைந்த வருவாய் தொகுதிகளுக்காக வீட்டு வசதி திட்டம்.

(2) அனைத்து கிராமங்களுக்கு மின் இணைப்பு வசதித் திட்டம்.

(3) போக்குவரத்து வசதிகள்.

(4) முன்னாள் இராணுவத்தினர் நலம்.

(5) ஆதி திராவிடர் வீட்டு வசதி.

(6) குடிநீர் வழங்குதல்.

(7) உடல் ஊனமுற்றவர்கள் நலத் திட்டங்கள்.

3. கடந்த சில ஆண்டுகளில் கிடைத்த நிகர வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

ஆண்டுகள்.	ரூபாய் கோடியில்.
(1)	(2)
1984–85	0.38
1985–86	0.77
1986–87	0.26
1987–88	1.30
1988–89	1.13
1989–90 (மதிப்பீட்டுத் தொகை)	2.43

4. முதன் முதலில் மாதம் ஒரு முறை என்று நடைபெற்று வந்த குலுக்கல் முறை பின்னர் 1981 மே முதற்கொண்டு மாதம் இரு முறை என்றும், 1982 மே முதல் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை என்றும், 1985 பிப்ரவரியில் வாரம் ஒரு முறை என்றும், 22–8–1986 முதல் வாரத்தில் மூன்று முறை என்றும் குலுக்கல்கள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன.

5. தற்போது இத்துறை வாரம் மூன்று முறை பரிசுச் சீட்டு குலுக்கலும், தமிழ் மகள் சிறப்பு குலுக்கல் திட்டத்தையும், விழாக்காலச் சிறப்பு குலுக்கல் திட்டத்தையும் நடத்தி வருகின்றது அண்மையில் மாற்றியமைக்கப்பட்ட பரிசு திட்டத்தின்படி ஒவ்வொரு குலுக்கலின்போதும் பின்வருமாறு பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன :—

	முதற் பரிசு.	வழங்கப்படும் மொத்த பரிசுத் தொகை.
(1)	(2)	(3)
1. தமிழ் மகள்	ரூ. 25.00 லட்சம்.	திங்கள் ஒன்றுக்கு ரூ. 60 லட்சம்.
2. சிறப்பு குலுக்கல்	ரூ. 35.00 லட்சம்.	ரூ. 1 கோடி ஆண்டொன்றில் 8 குலுக்கல்கள் நடைபெறும்.
3. விழாக் கால சிறப்பு குலுக்கல்.	ரூ. 1.01 கோடி.	ரூ. 2.11 கோடி ஒரு ஆண்டில் 4 குலுக்கல்கள் நடைபெறும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

முதற் பரிசு ரூ. 10 லட்சமும், மொத்தப் பரிசு தொகை ரூ. 25.20 லட்சமும் கொண்ட ''வைகை'' என்று அழைக்கப்படும் வாரக் குலுக்கல் திட்டம் ஒன்று நடத்தக் கருதப்பட்டுள்ளது.

6. இந்நாட்டில் நடைபெறும் பரிசுச் சீட்டுகளின் மொத்த விற்பனையில் 30 முதல் 40 சதவீத விற்பனை தமிழ்நாட்டில் நடைபெறுகின்றது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முறைப் படுத்தப்படாத தனியார் நடத்தும் பரிசுச் சீட்டுகள் விற்பனை அதிகரித்துள்ளதால் இது ஏற்படுகின்றது. இத்தகைய பரிசுச் சீட்டுகள் மூலம் முறைகேடுகள் நடப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. தமிழ்நாட்டு மக்களின் நலனை பாதுகாக்க வேண் டும் என்ற நோக்குடன் தனியாரால் நடத்தப்படும் இத்தகைய பரிசுச் சீட்டுகளுக்கு மாநில அரசு தடை விதித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க ஏனைய மாநில அரசுகளின் மூலம் நேரடியாக நடத்தப்பட்டு நிருவகிக்கப்படும் பரிசுச சீட்டுகளை மட்டுமே தமிழ்நாட்டில் விற்பனை செய்ய அனு மதிக்கப்பட்டுள்ளது.

7. பரிசுச் சீட்டு விற்பனை செய்யும் முகவர்கள் தமிழ்நாடு மாநில பரிசுச் சீட்டையே விற்பனை செய்ய ஊக்குவிக்கும் வகை யில் அவர்களுக் வழங்கப்படும் தரகுத் தொகை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பரிசுச் சீட்டு முகவர்கள் அதிக எண் ணிக்கையில் பரிசுச் சீட்டுகளை வாங்குவதற்கு அவர்களை ஊக்கு விக்கும் பொருட்டு பரிசுக் கூப்பன்கள் வழங்கும் திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8. பொது மக்களிடையே நம்பிக்கை ஏற்படுத்த வகை செய் யும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடங்களிலும் பரிசுச் சீட்டு குலுக்கல்களை இத்துறை நடத்தி வருகின்றது. வட்ட, கோட்டத் தலைமையிடங்களிலும் இவ்வாறு குலுக்கல் நடத்தும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. சிறப்புக் குலுக்கல்களின் மூலம் பரிசு பெறுவோருக்கு வழங்கப்பட வேண்டிய தொகைகளை பொதுமக்களின் முன் னிலையிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் வழங்கப் படுகின்றன.

9. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் 1988-89ஆம் ஆண்டு வரையில் ரூ. 44.93 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது இதில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு சிறப்பு நல நிதிக்கு ரூ. 33.58 கோடி மாற்றப்பட்டுள்ளது.

ஏனைய பொதுவான பணிகள் :

இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பாரதப் பிரதமர், அமைச்சர் பெருமக்கள், ஏனைய சீர்மக்கள் போன்ற மிக முக்கியமான பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு வரும்

போது ஆகும் செலவு இந்த மானியக் கோரிக்கையில் காட்டப்பட்டுள்ளது. ஆளுநர், அமைச்சர்கள் ஆகியோரின் பதவியேற்பு விழா தொடர்பான செலவும், அரசின் ஏனைய விழாக்கள் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் கணக்கெழுதப்படுகிறது. தேசிய அளவிலும் உலக நாடுகளின் அளவிலுமான விழாக் கொண்டாட்டங்கள், சிறப்பு நாட்களின் கொண்டாட்டங்கள் தொடர்பான செலவும் இந்த மானியக் கோரிக்கையில் காட்டப்படுகிறது. விலைவாசி உயர்வினால் இந்த ஆண்டில் எதிர்பாராத செலவுகளின் பொருட்டு திட்டப் பணிகள் நிறைவேற்றுவதில் கஷ்டப்படக்கூடிய அரசுத் துறை நிறுவனங்களுக்கு உதவ அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூகப் பர்துகாப்பும்-நலனும் :

மேற்சொன்ன தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ள முக்கிய செலவினங்கள் வருமாறு :—

(1) முஸ்லிம் கோஷா மகளிர் நிதியுதவி சங்கத்திற்கு உதவி (ரூ. 0.35 இலட்சம்).

(2) முன்னாள் படைவீரர் நல இயக்ககத்திற்கு நிதியுதவி (ரூ. 22.37 இலட்சம்).

(3) இராணுவ வீரர்கள், கப்பல்படை வீரர்கள், விமானப் படை வீரர்கள் மாவட்ட வாரியம் (ரூ. 72.32 இலட்சம்).

(4) போர்க்களத்தில் வீர மரணமடைந்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மானியம் (ரூ. 0.87 இலட்சம்).

(5) முன்னாள் படைவீரர் நல நிதி (ரூ. 2.00 இலட்சம்).

(6) இறந்துவிட்ட அரசுப் பணியாளர்களின் குடும்பத்திற்குக் கருணைத் தொகை (ரூ. 9.65 கோடி).

(7) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தனி வருங்கால வைப்பு நிதி—பணிக்கொடை திட்டம் (ரூ. 4.75 கோடி).

(8) மானிய உதவிபெறும் கல்வி நிறுவனங்களுக்கான தனி வருங்கால வைப்பு நிதி—பணிக்கொடை திட்டம் (ரூ. 1.15 கோடி).

(9) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்ட முன்பணம்—தனி நலத் திட்டங்கள் (ரூ. 10.00 இலட்சம்).

1990 ஏப்ரல் 26]

மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு.

1990–91 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு.

இது கூட்டு மானியக் கோரிக்கையாகும். எழுதுபொருள்-அச்சுத் துறை, குடிநீர் வழங்கல்-துப்புரவு, வீட்டுவசதி, செய்தி-விளம்பரம், ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலன், சமூகப் பாதுகாப்பும்-நலனும், ஏனைய சமூகப் பணிகள், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை வளர்ச்சி, மீனளம், உணவு சேமிப்பு-கிடங்கு வசதி, கூட்டுறவு, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், சாலைகள்—பாலங்கள், சுற்றுலா ஆகியவை குறித்த மூலதனச் செலவு இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும்.

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுப் பத்திரங்களின் பேரில் தொகை வழங்குதல், எஸ்டேட்டுகள் (நீக்குதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத் தின்கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்குதல், பொதுத் துறை, ஏனைய நிறுவனங்கள் முதலியவற்றில் முதலீடு செய்தல் போன்ற வேறு எந்தவொரு குறிப்பிட்ட மானியக் கோரிக்கையின்கீழும் சேர்க்க முடியாத பல்வகை இனங்களுக்கும் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

மேற்சொன்ன மானியக் கோரிக்கையில், பின்வரும் பெருங் கணக்குத் தலைப்புகளுக்கு நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது:-

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கணக்குத் தலைப்பு. (1)	1989-90-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (2)	1989-90-ம் ஆண்டு திருத்த மதிப்பீடு. (3)	1990-91-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4)
	(ரூபாய் இலட்சத்தில்).		
5058. எழுதுபொருள் - அச்சுத் துறை குறித்த மூலதனச் செலவு	14	..	1,31
5225. ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு	6,57	6,56	7,79
4235. சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு	1	4	10
4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு — — — —	40	46	3,21
4404. பால் பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு —	4	4	3
4405. மீனளம் குறித்த மூலதனச் செலவு —	81	53	81
4408. உணவு சேமிப்பு - கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு — — —	30	3,30	50
4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு —	(—) 1,20	5,68	1,60
4711. வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு — —	30	73	1,00
5054. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு — — — —	32	31	1
5452. சுற்றுலா குறித்த மூலதனச செலவு —	69	94	45

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ச வு

1990 ஏப்ரல் 26]

சில முக்கியத் திட்டங்கள், இம்மானியக் கோரிக்கையின் கீழ் செய்யப்பட்ட நிதி ஒதுக்கங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

எழுதுபொருள்– அச்சுத் துறை :

சென்னை, அரசு மைய அச்சகத்தை நவீனப்படுத்துவதற்கான இயந்திரங்களை வாங்குவதற்கு ரூபாய் 131 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் :

(1) பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் :

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம், ஏனைய வசதிகளுடன் கூடிய கட்டிடங்கள் கட்டும் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக, 1990–91 ஆம் ஆண்டு ரூபாய் 101 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1990-91 ஆம் ஆண்டில், தங்கிப் பயிலுவதற்கான விடுதியுடன் கூடிய அரசு பழங்குடியினர் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 26.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) மாணவர் இல்லங்கள் கட்டுதல் :

ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நலத்துறை நடத்திவரும் 821 அரசினர் மாணவர் இல்லங்களில் (ஆதி திராவிட மாணவர்களுக்கு 799 இல்லங்கள், பழங்குடி மாணவர்களுக்கு 22 இல்லங்கள்), 334 மாணவர் இல்லங்கள் (ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் 317, பழங்குடி மாணவர் இல்லங்கள் 17), அரசுக் கட்டிடங்களில் அமைந்திருக்கின்றன. ஆதிதிராவிடர்--பழங்குடி மாணவர் இல்லக் கட்டிடங்களைக் கட்டும் பணியை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டு, ஆதிதிராவிட மாணவர்–மாணவியர் இல்லங்களைக் கட்டுவதற்கு ரூபாய் 300 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களோடு மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பள்ளிகள், மாணவர் இல்லங்கள் முதலியவற்றைக் கட்டுவதற்கு ரூபாய் 21 இலட்சமும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாணவர் இல்லங்கள், பள்ளிகளைக் கட்டுவதற்கு ரூபாய் 30 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்குப் பங்கு மூலதன முதலீடு :

1990-91 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தில், பங்கு மூலதன முதலீட்டிற்காக ரூபாய் 200 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன உதவித் தொகை :

இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குக் கூடுதல் பங்கு மூலதன உதவித் தொகைக்காக ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பும், நலனும்.

காமராசர் மாவட்டம் விருதுநகரில், காது கேளாதவர்களுக்காக அரசுப் பள்ளிக்கூடம் கட்ட ரூ. 8 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஏனைய சமூகப் பணிகள் :

(1) 1990-91ஆம் ஆண்டில், அரசுத் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காக, ரூ. 9.50 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், சில அரசு தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு எந்திரம், சாதனம் ஆகியவற்றை வாங்குவதற்காக ரூ. 7.55 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சிறுபான்மையினரின் பயனுக்காக, சில புதிய தொழில்களை அறிமுகப்படுத்தத் தேவையான எந்திரம், சாதனம் ஆகியவற்றை வாங்குவதற்காக ரூ. 6 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(2) உலக வங்கியின் நிதியுதவி பெறும் தொழில் திறமை மேம்பாட்டுத் திட்டம்:

1990-91ஆம் ஆண்டில், கீழ்க்காணும் திட்டங்களுக்காக ரூ. 297.44 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. பழைய எந்திரங்களுக்குப் பதிலாக புதிய எந்திரங்களை நிறுவியும் பற்றாக்குறையாக உள்ள எந்திரங்களை வழங்குவதன் மூலமும் தொழிற் பயிற்சி நிறுவனங்களை நவீனமயமாக்குதல்	80.54
2. ஆறு பராமரிப்புப் பிரிவுகளை ஏற்படுத்துதல்	21.00
3. வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் முறையை மேம்படுத்தத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் ஒலி-ஒளிச் சாதனங்களுக்கு வகை செய்தல்	24.00

1990 ஏப்ரல் 26]

4. தொழிற் பயிற்சி நிறுவனம் ஒவ்வொன்றிலும் புதிய தொழில்கள் இரண்டினை அறிமுகப் படுத்துவதன் மூலம் தற்போதுள்ள 16 தொழிற் பயிற்சி நிறுவனங்களை விரிவு படுத்துதல்	42.50
5. அடிப்படை பயிற்சி நிலையங்கள் இரண்டினையும் அவற்றோடு தொடர்புடைய பயிற்சி நிலையங்கள் நான்கினையும் ஏற் படுத்துதல்	70.40
6. வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட் டத்தை விரிவுபடுத்தல்	23.00
7. மகளிர் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் இரண்டினை புதிதாகத் தோடங்குதல்	25.00
8. சேலத்தில் ஏற்கெனவே 1989-90-ஆம் ஆண் டில் அனுமதிக்கப்பட்ட மகளிர் தொழிற் பயிற்சி நிறுவனத்தைத் தொடங்குதல். ..	11.00
மொத்தம் ..	2,97.44

இதற்காகும் செலவை மாநில அரசும், மத்திய அரசும் சமமாகப் பங்கிட்டுக் கொள்கின்றன.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மீனளம்.

(1) உள்நாட்டு மீனளம் :

உள்நாட்டு மீனள மேம்பாட்டுக்கான மூலதனப் பணிகளுக்காக ரூ. 60.84 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப் பட்டுள்ளது. பவானி சாகரில் 10 எக்டேரில் மீன் பண்ணை அமைக்கும் பணிகளை நிறைவு செய்வதற்கும், மணிமுத்தாறில் 10 எக்டேரில் மற்றொரு மீன் பண்ணை அமைப்பதற்கும் இந்த நிதியொதுக்கம் பயன்படுத்தப்படும். இவை தவிர, இந்த ஆண்டில் லால்பேட்டையில் சீனமுறை மீன் குஞ்சு பொறிப்பு நிலையங்களை அமைக்கின்ற பணியும் வைகை அணையில் 20 மீன் வளர்ப்பு பண்ணைகளைக் கூடுதலாக அமைக்கின்ற பணியும் முடிக்கப்படும். மேலும் இந்த ஆண்டில் நீலகிரி மாவட்டத்திலுள்ள ஏரிகளின் மேம்பாட்டுப் பணி முதலானவையும் முடிக்கப்படும்.

2) கடல் மீனளம் :

1990-91ஆம் ஆண்டில், கடல் மீனள மேமபாட்டுப் பணி களுக்கான மூலதனச் செலவிற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 15.11 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதி யொதுக்கம், கீழ்க்காணும் பணிகளை மேற்கொள் வதற்காக செய்யப்பட்டுள்ளது.

(அ) கோட்டைப் பட்டினத்தில் மீன்களைக் கரை சேர்ப்பதற்கான படகுத் துறைகளைக் கட்டுகின்ற பணியைத் தொடங்குதல்.

(ஆ) ஏர்வாடி, வாலிநோக்கம் ஆகிய இடங்களில் மீன் பிடிப்பதற்காக அடிப்படை வசதிகளையும் தொண்டியில் கரையோர வசதிகளையும் செய்து முடித்தல்.

(இ) கரையோர மீன்பிடிப்பு ஆய்வு நிலையங்களில் பயன் படுத்துவதற்காக மரத்தாலான படகுகளையும் கண்ணாடி இழையிலான படகுகளையும் வாங்குதல்.

உணவுப் பொருள் சேமிப்பும், கிடங்கும் வசதியும் :

இருபத்தைந்து நேரடி கொள்முதல் நிலையங்களையும் 5 கிடங்குகளையும் கட்டுவதற்காகத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 50 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

கூட்டுறவு :

நில மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் உட்பட வேளாண்மைத் துணைத் தொழில்களை மேற்கொள்ளுதல், மலைத் தோட்டப் பயிர் சாகுபடி போன்ற பல்வேறு நோக்கங்களுக்காகவும், இம் மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள், உழவர்களுக்கு நீண்டகால தவணைக் கடன்களைத் தொடர்ந்து வழங்கி வருகின்றன. தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் தலைமை வங்கியான தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி, கடனீட்டுறுதிப் பத்திரங்களை வெளி யிட்டு தேவையான நிதியைத் திரட்டுகிறது. மாநில நிலவள வங்கியின் கடனீட்டுறுதிப் பத்திரங்களில் ஏனையவர்களோடு மாநில அரசும் முதலீடு செய்கிறது. 1990ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி, மாநில நிலவள வங்கியின் கடனீட்டுறுதிப் பத்திரங்களில், அரசு முதலீடு செய்திருந்த மொத்தத் தொகை ரூ. 11.78 இலட்சம் ஆகும். 1990-91-ம் ஆண்டில், இதற்காக ரூ. 120 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 26]

(2) இம்மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், உழவர்கள் பயிர் சாகுபடியை மேற்கொள்ள குறுகிய காலக் கடன்களையும், துணைத் தொழில்கள் (வேளாண்மை) செய்ய நடுத்தர காலக் கடனையும் வழங்குகிறது. தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், அவை இணைந்துள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை, அவற்றின் சொந்த நிதி வாயில்களைப் பெருக்கிக் கொள்வதற்காக, தேசிய ஊரகக் கடன் (நீண்ட காலக் கடன்) நிதியிலிருந்து தேசிய வேளாண்மை—ஊரக வளர்ச்சி வங்கியின் கடன் வசதியைப் பயன்படுத்தி அந்நிறுவனங்களின் பங்கு மூலதனத்திற்கு அரசு தொகை வழங்குகிறது.

3. கிராம அளவில் ஊரகக் கிடங்குகளையும், மண்டி அளவில் விற்பனைக் கிடங்குகளையும் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டுகின்றன. இன்றியமையாப் பொருள்களை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள தலைமைச் சங்கங்கள் நுகர்பொருள் கிடங்குகளைக் கட்டுகின்றன. 1988ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் செயலிலுள்ள, தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் வரையறுத்துள்ள நிதியுதவி முறையின்படி, கிடங்கு கட்டுவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தச் செலவுத் தொகையில் 75 சதவீதத் தொகையை தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மாநில அரசிற்குக் கடனாக வழங்குகிறது. பதிலுக்கு மாநில அரசு, கிடங்குகளைக் கட்டுவதற்கான செலவுத் தொகையில் 50 சதவீத தொகையை கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடனாகவும், 45 சதவீதத் தொகையை அவற்றின் பங்கு மூலதனமாகவும் வழங்குகிறது. 1990–91ஆம் ஆண்டில் ஊரகக் கிடங்குகள் 86 கட்டுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கக் கருதப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியில் பங்குமூலதனத் தொகையாக 1990–91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4. இச் சமுதாயத்திலுள்ள பழங்குடியினர் நலனுக்காக வேளாண்மைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 18 ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 16 பழங்குடியினர் பகுதிகளிலும், 2 ஏனைய மக்கள் வாழ்கின்ற பிற பகுதிகளிலும் உள்ளன. இச்சங்கங்களுக்கு அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்குகிறது. இந்த நிதியுதவியில் பங்கு மூலதனத் தொகைக்காக 1990--91ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

5. தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், ரூ. 100 இலட்சம் செலவில், கோயம்பேட்டில் குளிர்பதன கிடங்கு அமைக்க உத்தேசித்துள்ளது. குளிர்பதன கிடங்கு ஏற்படுத்துவதன் நோக்கம், எளிதில் அழுகும் பொருட்களை அழுகாமல் சேமித்து வைப்பது மட்டுமின்றி, இப்பொருட்களைச் செவ்விய முறையில் விற்பனை செய்வதும் ஆகும். இதற்கான மொத்தச் செலவில்,

75 சதவீதத்தை தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் வழங்கும். மொத்த செலவில் 20 சதவீதத் தொகையாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் பங்கு மூலதனத்திற்கு மாநில அரசு தொகை வழங்குவதற்காக, 1990–91ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 20 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

6. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் திற்குப் பங்கு மூலதன நிதியுதவியாக ரூ. 200 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. பொதுவாக, கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடு செய்யப் படும் பங்கு மூலதனத் தொகைகள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு திருப்பிக் கொடுக்கப்படும் தொகைகள், கழித்தல் பதிவாகக் காட்டப்படுகின்றன. 1990–91–ஆம் ஆண்டில் ரூ. 338 இலட்சம், முதலீடு செய்த பங்கு மூலதனத் தொகை வகையில் திருப்பிக் கொடுக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

8. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதன நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 1990–91ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் ,:

கடல் அரிப்பு பாதிப்புள்ள மீனவர் குப்பங்களில் கடல் அரிப்பு ஏற்படாமல் தடுக்கும் வண்ணம் பாறாங்கற்களைக் கொண்டு கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டுவதற்காக 1990–91ஆம் ஆண்டில் ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

சாலைகளும் பாலங்களும்:

விற்பனைக்கு மீன்களை விரைந்து எடுத்துச் செல்லவும், ஏழை மீனவர்களுக்கு நியாயமான வருவாய் கிடைப்பதை உறுதி செய்யும் வண்ணமும், மீனவர் குப்பங்களை முதன்மைச் சாலைகளுடன் இணைக்கும் வகையில் இணைப்புச் சாலைகள் அமைக்க 1990-91-ல் ரூ. 1.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா :

பூம்புகாரில் உள்ள சுற்றுலா மையத்தை மேம்படுத்த ரூ. 40 இலட்சமும், சுற்றுலா மையங்களில் தங்கும் இடவசதி உட்பட இன்றியமையா அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 5 இலட்சமும் இந்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 26]

மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்—கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண். 59-ல், மாநில அரசு, பல்வேறு நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கும் கடன்கள், முன்பணம் ஆகியவை குறித்த நிதியொதுக்கங்கள் அடங்கும். பல்வேறு துறைகளின் நிதிச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை அளிக்கும்போது பல்வேறு நோக்கங்களுக்காக நிதியுதவி வழங்கும் பொதுவான கொள்கையின் பின்னணி விளக்கப்பட்டுள்ளது. இந்த மானியக் கோரிக்கையில் செய்துள்ள முக்கியமான நிதியொதுக்கங்களை மட்டுமே இக்குறிப்பு வெளிப்படுத்துகிறது. பல்வேறு துறைகள், அவற்றின் நடவடிக்கைகள் குறித்த முழு விவரத்தையும் அளிக்கும்போது இந்த நிதி யொதுக்கங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. வளர்ச்சித் தலைப்பு வாரியான தனித்தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வளர்ச்சித் தலைப்பு.	1989–90ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.	1989–90ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு.	1990–91ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
வேளாண்மை, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள்	7,08.47	6,29.64	6,37.13
மீனளம்	0.02	0.02	0.01
உணவு, சேமிப்பு-கிடங்கு வசதி	14,60.02	10,08.81	14,60.02
கூட்டுறவு	13,57.48	10,15.08	9,26.62
தொழில்கள்	16,19.42	22,36.35	22,51.85
வீட்டு வசதி	8,00.48	5,00.24	8,00.24
நகர்ப்புற வளர்ச்சி	16,25.01	14,25.01	17,50.01
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு	3.10	1,44.10	3.10
குடிநீர் வழங்கல்—துப்புரவு	52,78.01	34,36.85	58,23.41
மின் சக்தி	2,10,00.01	2,10,00.00	2,25,00.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொதுக் கல்வி, கலை, பண்பாடு ..	25.01	30.00	25.01
தொழில் நுட்பக் கல்வி	1.11	0.46	0.51
ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் ..	91.84	96.53	91.30
இலங்கை, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு	1,72.79	1,71.46	1,66.03
சாலைகளும் பாலங்களும்	1,10.02	1,10.02	93.16
சாலைப் போக்குவரத்து-சுற்றுலா	0.33	65.32	0.45
அரசு ஊழியர்களுக்கு கடன்கள்	30,91.36	31,96.98	34,21.42
ஏனைய கடன்கள்	1,65.98	13,74.37	2,38.66
மொத்தம் ..	3,75,10.46	3,64,41.24	4,01.88.93

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மின் சக்தி.

2. 1990–91ஆம் ஆண்டிற்கான இந்த மானியக் கோரிக்கையில் முக்கியமான முதலீடு, மின்வாரியத்தின் மின்சக்தித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கேயாகும். இந்நோக்கத்திற்காக ரூ. 2,25.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல்—துப்புரவு.

3. குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டங்களுக்காக 1990–91ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 58,23.41 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பின்வரும் திட்டங்களுக்காக முக்கிய நிதியொதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன :—

		1990–91ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.)
1. சென்னை மாநகராட்சி—		
மழைநீர் வடிகால் அமைத்தல், புதைமின் கம்பி வடங்களை மாற்றியமைத்தல் முதலியன		1,50.00
2 தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் செயற்படுத்தும் திட்டங்கள்—		
(அ) குடிநீர் வழங்கல் திட்டங்கள்	37,50.12	39,70.87
(ஆ) வடிகால் திட்டங்கள்	1,63.75	
(இ) கோயம்புத்தூர் மாநகராட்சியின் குடிநீர் வழங்கல் திட்டங்கள்.	57.00	

மு-2 53-123—30

3.	சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்–வடிகால் வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்—		
	(அ) குடிநீர் வழங்கு திட்டங்கள்	12.63.18	
	(ஆ) கழிவு நீரகற்று திட்டங்கள்	4,31.85	16,95.03
4	பேரூராட்சிகளில் பொதுக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கான கடன்கள்		7.50
	மொத்தம் 1 முதல் 4 வரை		58,23.40

குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்று திட்டங்களை நிறைவேற்றுவதில் பெருமளவு மூலதன முதலீடுகள் செய்யவேண்டியுள்ளது. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு வழங்கும் வரவு-செலவுத் திட்ட நிதி ஆதாரங்களுடன், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் நிதியுதவி பெறப்படுகிறது. கிராம குடிநீர் வழங்கல்/வடிகால் திட்டங்களுக்கு அரசிடமிருந்து மானியங்கள் பெறுவதன் மூலமும், நகர்ப்புறத் திட்டங்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் கடன் பெறுவதன் மூலமும், அரசிடமிருந்து கடன்/மானியம் பெறுவதன் மூலமும், சென்னைப் பெருநகர்ப் பகுதியல்லாத ஏனைய உள்ளாட்சி மன்றப் பகுதிகளில் திட்டங்களை நிறைவேற்றும் பணியை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்கிறது:—

(1) நகராட்சித் திட்டங்களுக்கு (மாநகராட்சிகள் உட்பட) கடன் தொகையில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து 3-ல் 2 பங்கும், அரசிடமிருந்து 3-ல் 1 பங்கும் பெறப்படுகிறது.

(2) பேரூராட்சித் திட்டங்களுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து 50 சதவீதத்திற்கு கடனும் அரசிடமிருந்து 50 சதவீதத்திற்கு மானியமும் பெறப்படுகிறது.

குறைந்த அளவு தேவைகள் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட கிராம குடிநீர் வழங்கல் திட்டம், உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்குவதை அதிகரிக்கும் திட்டம் (தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம்) ஆகியவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறைவேற்றி வரும் சில முக்கிய திட்டங்களாகும்.

5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் அரசிடமிருந்து 50 சதவீதம் மானியமும், 50 சதவீதம் கடனும் பெற்று, பல்வேறு பெருந் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த வாரியம் நிறைவேற்றிவரும் சில முக்கிய திட்டங்களில் எம்.டி.டி.எஸ்./கிருஷ்ணா குடி நீர் வழங்கு திட்டம், உலக வங்கித் திட்டம் (சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் துப்புரவுத் திட்டம்) ஆகியவை அடங்கும். இத்திட்டங்களுக்கு, வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 26]

தொழில் :

6. தொழில் துறைக்கு மொத்தம் ரூ. 22,51.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்துறைக்காக செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகள் வருமாறு:—

(அ) வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் (I. F. S. T. Loan) திட்டத்தையும், குறித்த காலக் கடன் வழங்கும் திட்டத்தையும் செயற்படுத்துவதற்கு, தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ. 13,50.00 இலட்சம் கடன் வழங்குதல்.

(ஆ) மூலதனத்திற்குப் பதிலாக மாற்றத்தக்கக் கடனாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு ரூ. 5,50.00 இலட்சம் வழங்குதல்.

(இ) மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் சிறு தொழில் களுக்கு வட்டியில்லா விற்பனைவரிக் கடன்களை வழங்குவதற்கு ரூ. 2,00.00 இலட்சம் வழங்குதல்.

வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சி :

7. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக்காக 1990–91 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 25,50.25 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர் களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டு வதற்கான ரூ. 7,00.00 இலட்சம் நிதியொதுக்கீடும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்குரிய வீடுகள் கட்டுவதற்கான ரூ. 1,00.00 இலட்சம் ஒதுக்கீடும், நகர-ஊர் அமைப்புத் திட்ட வாரியத்திற்கு/ நிதிக்குக் கடனாக ரூ. 5,00.00 இலட்சமும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நில மேம்பாடு, குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான ரூ. 11,00.00 இலட்சமும் இதில் அடங்கும்.

அரசுப் பணியாளர்களும் ஏனைய பணியாளர்களும் :

8. அரசுப் பணியாளர்களுக்கான பல்வேறு வகைப்பட்ட முன் பணத்திற்காக வரவு-செலவுத்திட்டத்தில் ரூ. 34,21.42 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு பணியாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு முன்பணம் வழங்குவதற்காக நிதியொதுக் கீட்டில் பெரும்பகுதி, அதாவது ரூ. 16,36.00 இலட்சம் அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் ஆகியோருக்குப் பல்வேறு வகைப்பட்ட முன்பணத்தை வழங்குவதற்காகவும் ரூ. 8.25 இலட்சம் நிதி யொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிப் பணியாளர்கள்

[1990 ஏப்ரல் 26

வீடுகள் கட்டுவதற்கு முன்பணம் அனுமதிப்பதற்காகவும் 1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 50.00 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடன்களைத் திருப்பி வசூலித்தல் :

10. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்டு, வசூலிக்கப்பட வேண்டிய தொகைகள் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 79.36 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

11. முக்கியமான நிதியொதுக்கீடுகள் குறித்த பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு.

(செலவினங்கள்).

	1990-91 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.)
1. வேளாண்மை :	
மண்வளப் பாதுகாப்பு	6,37.13
2. தொழில்கள் :	
தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்)	13,50.00
மாவட்ட தொழில் மையங்கள் (தொடக்க உதவித் தொகை வழங்குவதற்காக).	97.00
தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்	5,50.00
தமிழ்நாடு இறைச்சிக் கழகம்	30.00
3. கைத்தறி :	
கைத்தறிகளை நவீனப் படுத்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள்.	33.00
கைத்தறித் துணி வாங்க அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள்.	8,00.00

1990 ஏப்ரல் 26]

	1990–91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.)
4. கதர் :	
கதர் துணிகளை கடன் அடிப்படையில் வாங்க அரசுப் பணியாளர்களுக்கு முன் பணம்.	2,25.00
5. வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சி :	
அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டக் கடன்கள்.	16,36.00
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டங்கள்.	7,00.00
தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நில மேம்பாடும் குடிசை மேம்பாடும்.	11,00.00
ஒட்டு மொத்தமாக நிலம் கையகப்படுத்தல், நில மேம்பாட்டுத் திட்டங்கள்.	1,50.00
குறைந்த வருவாய்ப் பிரிவினர் வீட்டு வசதித் திட்டம்.	1,00.00
தமிழ்நாடு நகர - ஊரமைப்புத் திட்ட வாரியத் திற்கு/நிதிக்குக் கடன்கள்.	5,00.00
பேருந்து — பார வண்டிகள் நிறுத்துமிடங்கள் கட்டுவதற்குச் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குக் கடன்கள்.	80.00
6. மின் சக்தி :	
தமிழ்நாடு மின் வாரியத்திற்கான ஏனைய கடன்கள்.	2,25,00.00
7. கல்வி, கலை, பண்பாடு :	
தேசியப் படிப்புதவிக் கடன் திட்டம் ..	25.00

[1990 ஏப்ரல் 26

	1990–91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.)
8. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் :	
தொழிற் கல்வி, கலைக் கல்வி பயில ஆதி திராவிடர் - பழங்குடியினருக்குக் கடன்கள்.	90.85
9. மறுவாழ்வுத் திட்டங்கள் :	
இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வீட்டு வசதிக் கடன்கள்.	1,50,00
10. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல்- வடிகால் திட்டங்கள் தவிர) :	
நகராட்சிகள் :	
நகராட்சி சாலைகள்	20.00
சாலைகள், பாலங்கள் அமைத்தல் ..	25.00
11. மாநகராட்சிகள் :	
சென்னை மாநகராட்சி	2,33,14
மதுரை மாநகராட்சி	25.03
கோயம்புத்தூர் மாநகராட்சி	57.02
12. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் :	
கிடங்குகள் கட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள்.	52.72
வேளாண்மை இடு பொருட்களை வாங்கி வழங்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள்.	14,60.00

1990 ஏப்ரல் 26]

	1990–91 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.)
13. அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் :	
மோட்டார் வண்டிகள் வாங்குவதற்கான முன் பணம்.	3,15.00
ஏனைய போக்குவரத்து வாகனங்களை வாங்கு வதற்கான முன் பணம்.	1,07.00
திருமண முன் பணம்	1,33.00
கல்லூரி / பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் மேற் படிப்பிற்கான கடன்கள்.	1,50.00
கம்பளி ஆடைகள் வாங்க முன் பணம்.. ..	43.00
14. ஏனைய கடன்கள் :	
நகராட்சிப் பணியாளர்களுக்கு வீடு கட்ட முன் பணம்.	50.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS